# கல்கி



ALKI ஏப்ரல் 4, 1954 4 அணா

# வீட்டு உணவும் விஷமாகலாம்!





"என் குழந்தைகளின்
நோய்க்கு காரணம் நானே
என்று டாக்டர் சொன்னபோது
நான் துணுக்குற்றேன்.

சென்ற ஆறு மாதத்திற்குள் என் குழந்தைகள் இருமுறை வயிற்று நோயால் அவதிப்பட்டார்கள். போனமாதம் என் கணவர் வேறு சீக்காய்ப் படுத்தார். என்ன கஷ்டம்! வீட்டுச் செலவை சமாளிப்பதே சிரமமாயிருக்கும் பொழுது டாக்டருக்கு வேறு கொடுக்க வேண்டுமென்றால் என்ன செய்வது?
ஒருவர் மாற்றி ஒருவர் சீக்காய் படுத்தது என் மனோ நிம்மதியைக் குலைத்தது. நானே டாக்டரிடம் சென்றேன்.
டாக்டர்: நீங்கள் சமைப்பதில் கோளாறு ஒன்றுமில்லையே?
நான்: ஏன், எப்பொழுதும்போல்தான் சமைக்கிறேன்.
டாக்டர்: ஆமாம், நீங்கள் தாவரக்கொழுப்பை எப்படி வாங்குகிறீர்கள்?
நான்: சில்லறையாகத்தான் வாங்குகிறேன்.
டாக்டர்: அப்படிச் சொல்லுங்கள். சில்லறையாக விற்கப்படும் கொழுப்பு கலப்புப் பொருள்கள், அழுக்கான கைகள், ஈக்கள் இவைகளால் அசுத்தப் படுத்தப்பட்டு பலவகைக் கிருமிகள் வசிப்பதாயிருக்கலாம். அதுவே உங்கள் வீட்டில் வியாதிக்குக் காரணமாயிருக்கும்.
சில்லறையாக கொழுப்பு வாங்கினால் பணம் மிச்சப்படும் என்று நினைத்தேன். ஆனால் அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப் பார்க்கும்பொழுது அது ஒரு லாபமே இல்லை.
இப்பொழுது நான் காற்றுப்புகாத சீல் செய்த டின்னில் கிடைக்கும் டால்டா வனஸ்பதியையே வாங்குகிறேன். டால்டா வனஸ்பதி உணவிற்கு சிறந்த ருசியை அளிக்கிறது என்பதற்கு வேறென்ன அத்தாட்சி வேண்டும். என் வீட்டில் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு திரும்பத்திரும்ப கேட்டு சாப்பிடும் தமாஷே போதாதா?"
டால்டா வனஸ்பதி வாங்கினால் புத்தம் புதிய, சுத்தமான ஒரு சிறந்த ரக தாவரக் கொழுப்பு உங்களுக்கு கிடைக்கிறது. எப்பொழுதும் டால்டா வனஸ்பதி கிடைக்கும் பொழுது, கொழுப்புகளை சில்லறையாக வாங்கி ஏன் அவதிப்பட வேண்டும். இப்பொழுது டால்டா வனஸ்பதியில் விடமின் 'ஏ', 'டி' சேர்ந்திருக்கிறது. எல்லோரும் வாங்கக் கூடிய விலையில் 10, 5, 2, 1 பவுண்டு டின்களில் கிடைக்கிறது.




மா அடையாளமுள்ள
டின்னைப் பார்த்து
வாங்குங்கள்.

உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்தை
அபிவிருத்தி செய்வதெப்படி?
இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எழுதுங்கள்:

தி டால்டா அட்வைஸரி ஸர்விஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

ஆரோக்கியமாயிருக்க

# டால்டா வனஸ்பதியில் சமையுங்கள்

சிறந்த சமையல் — குறைந்த செலவு

HVM. 212-50 TM

கல்கி

# பொருளடக்கம்

மலர் 13
இதழ் 36

1954 ஏப்ரல் 4

விஜய ௵
பங்குனி 22



தாயிற் சிறந்த தொரு
கோயிலுமில்லை
"மனோகரா" போல
தமிழிற் சிறந்த தொரு
படமுமில்லை!
மனோகர் பிக்சர்ஸ்
மனோகரா
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
மனோகராவைப் பாராமல் இருக்க வேண்டாம்
கலைஞர்
மு.கருணாநிதி
ப.சம்பந்த முதலியார்
பிரசாத்...எம். சோமசுந்தரம்...நெப்ட்யூன்

கல்கி

மலர் 13

தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா.
—பாரதியார்

இதழ் 36

# மந்திர ஒலியும் மணிக் கொடியும்!

பாரத நாட்டிற்கு உள்ளேயே 'ஜெய் ஹிந்த்' மந்திரம் ஒலிக்காத சில இடங்கள் இருக்கத்தான் செய்தன.

தாயின் மணிக் கொடி கம்பீரமாக ஆடி அசைந்து காட்சி அளிக்காத சில இடங்களும் இருக்கத்தான் செய்தன.

ஆனால், சுதந்திர இந்தியாவைப் பீடித்து வந்த இந்தக் குறை மார்ச்சு மாதம் இருபத்தேழாம் தேதியோடு நிவர்த்தியாகி விட்டது!

பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களில் உள்ள சகோதர சகோதரிகள் மேற்படி குறை மறைவதற்கு அடிகோலி விட்டார்கள்.

அந்தச் சுதினத்திலே பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களில் 'ஜெய் ஹிந்த்' கோஷமும் தாயின் திருக் கொடியும் போட்டி போட்டுக் கொண்டு வான் முகட்டை மோதின.

பிரஞ்சு இந்தியப் பிரதேசங்கள் இந்தியாவுடன் இணைக்கப்பட்டே தீர வேண்டும் என்று பிரஞ்சு இந்திய மக்கள் ஆரம்பித்துள்ள சத்தியாக்கிரகப் போரை 'ஜெய் ஹிந்த்' மந்திர ஒலியும் மணிக் கொடியும் உலகத்துக்குப் பிரகடனம் செய்தன!

* * * *

சென்ற சில தினங்களாகப் பிரஞ்சு இந்தியாவில் நிகழ்ந்து வரும் சம்பவங்கள் மின்னல் வேகத்தையும் மிஞ்சுவதாக இருக்கின்றன.

பிரஞ்சு இந்தியா மந்திரி ஸ்ரீ குபேரும், புதுச்சேரி மேயர் ஸ்ரீ முத்துப் பிள்ளையும் திடீரென்று போன இடம் தெரியவில்லை என்று ஒரு செய்தி கூறியது.

ஆனால், மறு நாளே அவர்கள் தலைமையிலே, பிரஞ்சு இந்தியாவிலிருந்து அன்னிய ஆட்சியை ஒழிப்பதற்காகச் சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பமாகி விட்டது!

சென்ற வாரம் அப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் இருபது கிராமங்களில் ஊர்வலங்களுடன் சத்தியாக்கிரகம் நடந்தது.

ஓரிடத்தில் ஊர்வலத்தைக் கலைக்க வந்த போலீஸ் பிரதம அதிகாரியே பொது ஜனங்களின் உற்சாக வெள்ளத்தினால் இழுக்கப்பட்டு, 'ஜெய் ஹிந்த்' என்று கோஷம் செய்து ஊர்வலத்தில் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டாரென்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

ஸ்ரீ குபேர் முதலிய தலைவர்கள் பிரஞ்சு சர்க்காரின் தயவுக்காகக் காத்திராமல் பல கிராமங்களில் போட்டி சர்க்காரையும் ஆரம்பித்து நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

* * * *

நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் பிரான்சு தேசத்தில் ஏற்பட்ட மாபெரும் பயங்கரப் புரட்சியைப் பற்றிக் கேள்விப்படாதவர் இருக்க முடியாது.

கொடுங்கோல் மன்னனின் யதேச்சாதிகார ஆட்சியை ஒழித்துக் கட்டுவதற்காகப் பிரஞ்சு மக்கள் புரட்சியை ஆரம்பித்தனர்.


அந்தப் புரட்சியை ஒடுக்குவதற்குப் பிரஞ்சு மன்னர் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் கையாண்ட பலாத்கார முறைகள் எல்லாம் பயனற்றுப் போயின.

ஐரோப்பாவில் உள்ள பல நாடுகளும் கொடுங்கோன்மைக்கு முற்றுப்புள்ளி வைத்துக் குடியரசை ஸ்தாபிப்பதற்குப் பிரஞ்சுப் புரட்சியே தாய்ப் புரட்சியாக அமைந்தது.

எனவே அநீதியான ஆட்சி முறையைக் கண்டித்து எழும் ஜனங்களின் ஏகோபித்த சக்தியை யாராலும் எதிர்த்து நிற்க முடியாது என்பதை மற்றெவரையும் காட்டிலும் அதிகமாகப் பிரஞ்சு அதிகாரிகள் அறிந்திருக்க வேண்டும்.

ஆனால், அவர்கள் அந்த உண்மையை உணர்ந்ததாகத் தெரிய வில்லை.

உணர்ந்திருந்தால், புதுச்சேரி, காரைக்கால் முதலிய பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களில் எழுந்துள்ள ஜனங்களின் ஏகோபித்த புரட்சியைப் பிரஞ்சு அதிகாரிகள் பலாத்காரத்தினால் அடக்கி விடலாம் என்று நினைத்திருப்பார்களா?



புதுச்சேரியில் செல்வாக்குள்ள பிரபல மந்திரியாக இருந்தவரும் இப்போது புரட்சி இயக்கத் தலைவருமான ஸ்ரீ குபேர், புதுச்சேரி மேயர் ஸ்ரீ முத்துப் பிள்ளை, மராமத்து, விவசாய மந்திரி ஸ்ரீ முத்துக்குமரப்ப ரெட்டி, நெட்டப்பாக்கம் மேயர் முதலியவர்களை இந்தப் படத்தில் காணலாம்.

---

கண்ணியமும் கௌரவமும் வாய்ந்த ஜனப் பிரதிநிதிகளான தலைவர்களை விலங்கிட்டுத் தன் புறுத்தத் துணிந்திருப்பார்களா!

அக்காலத்திலே பிரஞ்சு தேசத்தில் கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்து ஜனங்கள் பலாத்காரப் புரட்சியில் ஈடுபட்டனர்.

இன்றோ, பிரஞ்சு இந்திய மக்கள் அன்னிய ஆட்சியை எதிர்த்துச் சாத்வீகப் புரட்சியைக் கைக் கொண்டிருக்கிறார்கள்.

பலாத்காரப் புரட்சியைக் காட்டிலும் சாத்வீகப் புரட்சி அதிக சக்தி வாய்ந்தது என்பதைக் காந்தி மகானின் தலைமையில் பாரத நாடு உலகத்துக்குக் காட்டியது.

பலாத்காரப் புரட்சியையும் பயங்கர இயக்கத்தையும் இறுதி வரையில் எதிர்த்து நின்று நசுக்கி விடக்கூடிய வல்லமை வாய்ந்த பிரிட்டிஷார், நிராயுதபாணிகளான இந்திய மகா ஜனங்களின் சாத்வீகப் போரைச் சமாளிக்க முடியாமல் திணறித் திக்கு முக்காடினார்கள்; வேறு வழியின்றிச் சுமுகமாகவும் சிநேக பாவத்துடனும் அதிகாரத்தை ஒப்படைத்து விட்டுக் கௌரவமாக வெளியேறினார்கள்.

அவர்களுடைய அந்தச் செய்கையை அகில உலகமும் போற்றியது.

ராஜ தந்திரத்தில் இணையற்ற பிரிட்டிஷாரின் அடிச் சுவடுகளைப் பின்பற்றிப் பிரஞ்சு அதிகாரவர்க்கமும் அவ்விதமே பிரஞ்சு இந்தியாவிலிருந்து வெளியேறி, உலகத்தின் நன் மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றிருக்கலாம்.

அல்லது என்றென்றும் மறக்க முடியாத பிரஞ்சுப் புரட்சியின் படிப்பினையை உணர்ந்து பிரஞ்சு இந்திய மக்களின் கையில் அதிகாரத்தை ஒப்புவிக்க முன் வந்திருக்கலாம்.

ராஜ தந்திரமும் சரித்திரமும் ஜனநாயக உலக தர்மமும் காட்டும் இந்த நேர் பாதையைப் பிரஞ்சு அதிகாரிகள் விட்டு விட்டார்கள்; கரடு முரடான முட் பாதையில் சென்று தங்களுக்கு என்றென்றும் இழிவைத் தேடிக் கொள்ள முற்பட்டிருக்கிறார்கள்.

பிரஞ்சு இந்தியப் பிரதேசங்கள் இந்தியாவுடன் ஐக்கியம் அடைவதைத் தடுக்கும் சக்தி இந்த உலகத்தில் யாருக்கும் இல்லை.

அப்பிரதேசங்களில் உள்ள மக்களின் சுதந்திரத்துக்கு முட்டுக் கட்டை போடும் சக்தியும் இப்புவியில் எவருக்கும் இல்லை.

இந்தக் கடைசிச் சந்தர்ப்பத்திலாவது பிரஞ்சு அதிகாரிகள் மேற்படி உண்மையை உணர்ந்து இயற்கை நியதிக்கும் ஜனநாயக தர்மத்துக்கும் முரணான தங்கள் அதிகாரத்தைக் கைவிட வேண்டும்; பிரஞ்சு இந்திய மக்களின் ஏகோபித்த அபிலாஷையை நிறைவேற்ற முன் வர வேண்டும்.

அவர்கள் அவ்விதம் செய்யா விடில், அதனால் பிரான்சு தேசத்துக்கு ஏற்படக் கூடிய களங்கத்தையும் கெட்ட பெயரையும் அவர்கள் எக்காலத்திலும் அகற்ற முடியாமற் போய் விடும்.

# நாசப் பரீட்சை நிற்குமா?

சென்ற மார்ச்சு மாதம் முதல் தேதியன்று அமெரிக்கா நடத்திய ஹைட்ரஜன் குண்டுப் பரீட்சையால் பசிபிக் மகா சமுத்திரத்தின் ஒரு பகுதி கொந்தளித்தது. ஆனால் அதன் விளைவாக இப்போது உலகம் முழுவதும் மக்களின் மனம் கொந்தளிக்கத் தொடங்கி யிருக்கிறது; உலக நாடுகள் வாழ்வதா அல்லது அழிவதா என்ற கேள்வி பிறந்திருக்கிறது; மானிட வர்க்கத்தின் எதிர் காலம் எப்படி ஆகுமோ என்ற பீதி எங்கும் பரவி யிருக்கிறது.

பத்மாசுரன், தான் யார் தலையில் கையை வைத்தாலும் அவர்கள் எரிந்து விடவேண்டும் என்று வரம் பெற்றான். அந்தப் பயங்கரமான சக்தியைப் பரீட்சித்துப் பார்க்க அவன் தனக்கு வரம் கொடுத்த சிவபிரான் தலையிலேயே கையை வைக்க முற்பட்டான்.


அதுபோலவே அசுரபலம் வாய்ந்த அமெரிக்கா தான் பெற்றுள்ள ஹைட்ரஜன் குண்டின் சக்தியைப் பரீட்சித்துப் பார்க்க உலகத்தின் தலையிலே கையை வைக்க முற்பட்டிருக்கிறது.

அதாவது மற்றொரு உலக மகாயுத்தம் மூள்வதற்கு முன்பே, ஹைட்ரஜன் குண்டினால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கு உலகம் இலக்காகும் படியான பயங்கர நிலைமை உண்டாகியிருக்கிறது.

சென்ற மாதம் அமெரிக்கா பசிபிக் மகா சமுத்திரத்தில் உள்ள பிகினித் தீவில் ஹைட்ரஜன் குண்டைப் பரீட்சை செய்து பார்த்தது. மேற்படி குண்டைக் கண்டு பிடித்த விஞ்ஞான நிபுணர்களும் எதிர்பாராத பல விளைவுகள் அதனால் ஏற்பட்டிருக்கின்றன. அந்தக் குண்டு வெடித்து ஒரு மாதம் ஆகியும், அதிலிருந்து எழும்பிய விஷத்தன்மை பொருந்திய நெருப்புச் சாம்பல்கள் ஜப்பானிய மீன் படகுகளின்மீது விழுந்து மிருக்க சேதத்தை விளைவித்து வருகின்றன. அந்தச் சாம்பல்கள் காற்று வாக்கில் இன்னும் எத்தனை ஆயிரம் மைல்கள் தூரம் போகுமோ என்பதைச் சொல்ல முடியாது என்று ஆராய்ச்சி நிபுணர்கள் கலங்குகிறார்கள்.

பல மாதங்களுக்கு முன் ருஷ்யா ஹைட்ரஜன் குண்டைப் பரீட்சை செய்து பார்த்தபோதும்,

# சுதந்திர எழுச்சி!




அன்னியர் ஆதிக்கத்தை ஒழித்துச் சுதந்திர இந்தியாவுடன் சேர்ந்துவிடப் பிரஞ்சு இந்திய மக்கள் ஒருமுகமாக விருப்பத்தைத் தெரிவித்து விட்ட பிறகும், பிரஞ்சு சர்க்கார் போகமாட்டோம் என்று பிடிவாதம் பிடிக்கிறார்கள்.

---

அதிலிருந்து கிளம்பிய விஷச் சாம்பல்கள் பதினைந்து நாட்களுக்குப் பிறகுகூட ஜப்பானியப் பிரதேசங்களில் விழுந்தன என்ற உண்மையும் இப்போது வெளியாகி யிருக்கிறது.

*　　　*　　　*

அமெரிக்கா சோதனை செய்த ஹைட்ரஜன் குண்டினால் மனிதர்கள் மாத்திரமல்ல, பசிபிக் மகா சமுத்திரத்தில் உள்ள மீன்களும் பாதிக்கப் பட்டிருக்கின்றன. மீனை முக்கிய உணவாகக் கொண்டுள்ள ஜப்பான் தேச மக்களுக்கு அதனால் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அச் செய்தியினால் பீதி யடைந்த ஜனங்கள் மீன்களை வாங்குவதற்கு மறுக்கிறார்கள். அதனால் ஜப்பான் வியாபாரிகளுக்குப் பதினாயிரக் கணக்கில் நஷ்டம் ஏற்பட்டிருப்ப தாகச் செய்திகள் கூறுகின்றன.

இந்நிலைமையில் அமெரிக்கா இன்னும் பன் மடங்கு அதிக சக்தி வாய்ந்த ஹைட்ரஜன் குண்டை அதே இடத்தில் மறுபடி பரிசோதித்துப் பார்த்திருக்கிறது.

மேற்படி சர்வநாசப் பரிட்சையை இத்துடன் நிறுத்திவிட வேண்டும் என்று உலகம் எங்கும் ஏற்பட்டுள்ள கிளர்ச்சியையும் கூக்குரலையும் அமெரிக்க ஜனாதிபதி ஜெனரல் ஐசன் ஹோவர் பொருட் படுத்தியதாகத் தெரியவில்லை.

இதிலிருந்து, உலகம் எக்கேடு கெட்டாலும் ஹைட்ரஜன் குண்டில் தங்களுக்குள்ள சக்தியைப் பெருக்கிக் கொள்வதுதான் அமெரிக்காவின் உத்தேசம் என்று எண்ணவேண்டி யிருக்கிறது.

இச் செய்தி அமெரிக்காவின் அத்தியந்த நேச தேசமான பிரிட்டன் முதலிய நாடுகளுக்கும் கவலையைக் கொடுத்திருக்கிறது. ஏனெனில், பிரிட்டனை அடியோடு அழிக்க இரண்டு அல்லது மூன்று ஹைடரஜன் குண்டுகள் போதும் என்ற செய்தி பிரிட்டனுக்குக் கலக்கத்தைக் கொடுத் திருப்பதைக் குறித்து ஆச்சரியப் படுவதற்கில்லை.

எனவே, அணு குண்டு ஹைட்ரஜன் குண்டு யுத்தத்தைத் தடுக்கு முன், மேற்படி குண்டுகளைப் பரிட்சை செய்து பார்ப்பதையே நிறுத்திவிட வேண்டும் என்று உலக நாடுகள் வற்புறுத்தத் தொடங்கி யிருக்கின்றன.

அதாவது மூன்றாவது மகாயுத்தம் ஏற்படு வதற்கு முன்பே உலகத்தை உருக்குலைக்கும் பேராபத்து சூழ்ந்து கொண்டு வருகிறது என்ப தையே தற்போதைய செய்திகள் நிரூபிக்கின்றன.

மனிதர் கண்டு பிடித்த ஹைட்ரஜன் குண்டினால் ஏற்படக்கூடிய விளைவுகள் மனிதரின் கற்பனைக்கே எட்டாதவையாக இருக்கின்றன என்று நேருஜி கூறி யிருக்கிறார். அமெரிக்கா மேற்படி பயங்கர சோதனையைக் நிறுத்திவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

எனவே, அசுர ஆயுத பலத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் அமெரிக்கா, உலகத்தையே இராணுவ மண்டலங்களாகப் பிரிக்கும் விபரீதத்தில் ஈடுபட்டுள்ள அமெரிக்கா, உலகத்தின் ஏகோபித்த கோரிக்கைக்கு இணங்கி, நாசகரமான ஹைட்ரஜன் குண்டுப் பரிட்சையைக் கைவிட்டாலன்றி, எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பயங்கர விளைவுகளை அளவிட முடியாது.




## அத்தியாயம் 84

# பட்டாபிஷேகப் பரிசு

சீனத்து வர்த்தகர்கள் இருவரும் தலையில் பெரிய பெரிய தலைப்பாகைகளுடனும் முகத்தில் அடர்த்தியாக வளர்ந்திருந்த தாடி மீசைகளுடனும் காட்சி அளித்தார்கள். அரண்மனை மேன்மாடத்தில் அச்சமயம் எரிந்து கொண்டிருந்த மங்கலான தீபத்தின் ஒளியில் அவர்களுடைய முகத் தோற்றங்கள் தெளிவாகப் புலப்படவில்லை. அவர்கள் என்ன பிராயத்தினர் என்பதைக் கூடத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

குந்தவையின் உள்ளத்தில் தோன்றியிருந்த ஐயங்கள் மேலும் வலுப்பட்டன. அறிவில் மிக்க அம்மாதரசி, "பட்டுப் பட்டாடைகளைப் பார்ப்பதற்கு இந்த வெளிச்சம் போதாது. பெரிய தீவர்த்தி ஏற்றிக்கொண்டு வா!" என்று அவ்வர்த்தகர்களை அழைத்து வந்த சேவகனுக்குக் கட்டளை யிட்டாள்.

"நான் சென்று நல்ல விளக்கு அனுப்புகிறேன்!" என்று கூறி விட்டு மதுராந்தகத் தேவர் அவ்விடத்திலிருந்து அகன்றார். அவருடன் செம்பியன் மாதேவியும் சென்றார்.

அவர்கள் சென்றபின்னர் குந்தவை சீன வர்த்தகர்களை நோக்கி, "ஐயா! உங்களுக்கு ஏன் இத்தனை அவசரம்? உங்கள் சரக்குகளை நாளைப் பகல் வேளையில் கொண்டு வந்து காண்பிக்கக் கூடாதா? இரவுக்கிரவே வந்தீர்களே?" என்றாள்.

"இளவரசிமார்களே! மன்னிக்க வேண்டும்! நாங்கள் தஞ்சைக்கு வந்து பல தினங்கள் ஆயின. எவ்வளவோ பிரயத்தனம் செய்தும் அரண்மனைக்குள் வந்து தங்களைப் பார்க்க முடியவில்லை. நாளை மறு தினம் நாகைப் பட்டினத்திலிருந்து நாவாய் புறப்படுகிறது. அதில் நாங்களும் புறப்பட வேண்டும். அதனாலேதான் அவசரப்பட்டோம்!" என்று சீன வர்த்தகர்களில் ஒருவன் சொன்னான்.

அவனுடைய குரல் சிறிது விசித்திரமாக இருந்தாலும் அவன் பேசிய தமிழ் நன்றாக இருந்ததைக் குறித்து அங்கிருந்தவர்கள் அதிசயப்பட்டார்கள்.

"சீன வர்த்தகரே! உமக்குத் தமிழ் மொழி மிக நன்றாக வருகிறதே!" என்றாள் குந்தவை.

"நான் இச் சோழ நாட்டுக்கு வியாபார நிமித்தமாக வந்து தங்கிச் சில காலம் ஆயிற்று. அதனால் தமிழ் பேசச் சிறிது கற்றுக் கொண்டேன். தமிழும் தமிழ் நாடும் எனக்குப் பிடித்திருக்கின்றன" என்றான் அவ்வர்த்தகன்.

"பின், ஏன், இப்போது உங்கள் நாட்டுக்குப் புறப்பட அவசரப்படுகிறீர்கள்? பட்டாபிஷேகம் வரையிலாவது இருந்துவிட்டுப் போகக் கூடாதா? அவ்வளவு அவசரம் என்ன?"

"நாளை மறு நாள் புறப்படும் கப்பல் தவறிவிட்டால், அப்புறம் எப்போது கப்-

பல் கிளம்புமோ தெரியாது. முன் போல வெல்லாம் இப்போது அடிக்கடி நாகையி லிருந்து கப்பல்கள் புறப்படுவதில்லை."

"அது எதனால்?"

"தங்களுக்கு அதன் காரணம் தெரியாதா, தேவி! கடற் பிரயாணம் முன் போல இப்போது சுலபமாயில்லை; பத்திரமாகவும் இல்லை. கடற் கொள்ளைக்காரர்கள் அதிகமாகி விட்டார்கள். அரபு நாட்டிலிருந்து ஆவேச வெறி கொண்ட வீரர்கள் கப்பல்களில் ஏறி மேலைக் கடல்களிலும் கீழைக் கடல்களிலும் எங்கெங்கும் சஞ்சரித்து வருகிறார்கள். கடற்கரை யோரங்களிலும் துறை முகங்களின் சமீபத்திலுங்கூட அவர்கள் வந்து காத்திருக்கிறார்கள். வர்த்தகக் கப்பல்களைக் கண்டதும் நெருங்கி வந்து பாய்கிறார்கள். மூர்க்காவேசத்துடன் போர் செய்து கப்பல்களில் உள்ளவர்களையெல்லாம் கொன்று, பொருள்களையும் கொள்ளை கொண்டு போகிறார்கள். இது காரணமாக, இப்போதெல்லாம் வர்த்தகக் கப்பல்கள் தனித் தனியாகக் கிளம்பிச் செல்ல இயலுவதில்லை. பத்துக் கப்பல்கள், இருபது கப்பல்கள் சேர்ந்து புறப்பட வேண்டி யிருக்கிறது. அவ்வாறு நாளை மறுநாள் புறப்படும் கப்பல்கள் போய்விட்டால், மறுபடி எத்தனை காலம் காத்திருக்க வேண்டுமோ, தெரியாது. தேவிமார்களே! பெரிய மனசு செய்து நாங்கள் கொண்டு வந்திருக்கும் பட்டுப் பட்டாடைகளைப் பாருங்கள்!"

இவ்வாறு சொல்லிக் கொண்டே அச் சீன வர்த்தகன் தான் கொண்டு வந்திருந்த மூட்டையைப் பிரிக்கத் தொடங்கினான். அம்மாதிரியே இன்னொருவனும் மூட்டையை அவிழ்த்தான்.

"வர்த்தகர்களே! இப்போது உங்கள் கடையை விரிப்பதில் பயனில்லை. உங்கள் பட்டாடைகளின் தரத்தை இரவு நேரத்தில் பார்த்து நன்கு தெரிந்து கொள்ள முடியாது. உங்களிடம் பட்டாடைகள் வாங்கினால் விலை கொடுப்பதற்கு வேண்டிய பொருளும் இங்கே நாங்கள் கொண்டு வந்திருக்கவில்லை!" என்றாள் இளைய பிராட்டி.

முதலில் பேசிய வர்த்தகன் உடனே மிக்க வியப்படைந்தவனைப் போல் எழுந்து நின்று கரங்களை விரித்துக் குவித்துவிட்டு, "இளவரசி! தங்களிடம் நாங்கள் விலை கூறிப் பெறுவோமா? நல்ல வார்த்தை சொன்னீர்கள்! தாங்கள் இந்தப் பட்டாடைகளை ஏற்று அணிந்து கொள்ள மனமுவந்தால், அதுவே நாங்கள் முன் ஜன்மங்களில் செய்த தவத்தின் பயன் என்று எண்ணி மகிழ மாட்டோமா? விலை கூறி விற்பதற்காக நாங்கள் இந்தச் சரக்குகளைக் கொண்டு வரவில்லை! பட்டாபிஷேகப் பரிசுகளாகக் கொண்டு வந்தோம்!" என்றான்.

"அப்படியானால், நீங்கள் தவறான இடந் தேடி வந்தீர்கள். இங்கேயுள்ள எங்களில் யாருக்கும் பட்டாபிஷேகம் இல்லை. முடி சூட்டிக் கொள்ளப் போகிறவர் இளவரசர் பொன்னியின் செல்வர். அவரைத் தேடிக் கொண்டு போய் உங்கள் பரிசுகளைக் கொடுங்கள்!"

"இல்லை, தேவி! சரியான இடந் தேடித்தான் நாங்கள் வந்துள்ளோம். எதற்கேனும் பொன்னியின் செல்வரின் தயவைப் பெற வேண்டுமானால், முதலில் இளைய பிராட்டி குந்தவை தேவியின் தயவைப் பெறுவதுதான் அதற்கு உபாயம் என்று எல்லாரும் சொல்லுகிறார்கள்!" என்றான் சீன வர்த்தகன்.

இதைக் கேட்டு அங்கிருந்த பெண்ணரசிகள் அனைவரும் நகைத்தார்கள்.

"எல்லாரும் என்றால் யார்? அவ்விதம் எங்கே யார் பேசியதை நீங்கள் கேள்விப் பட்டீர்கள்?"

"ஏன், தாயே? இன்றைக்கு இந்த நகரில் நடந்த உற்சவத்தின்போது கூடியிருந்த கூட்டத்தில் கூடப் பலர் பேசிக் கொண்டார்கள். 'தமக்கை சொல்லைத் தம்பி தட்டவே மாட்டார்' என்று சொல்லிக் கொண்டார்கள். இதோ இருக்கும் என் தோழனை வேண்டுமானாலும் கேளுங்கள்!"

இத்தனை நேரம் சும்மா யிருந்த அத் தோழன், "ஆம். இளவரசிமார்களே! அது உண்மைதான்! 'பொன்னியின் செல்வருக்குப் பட்டாபிஷேகம் என்றால், அது குந்தவைப் பிராட்டிக்குப் பட்டாபிஷேகம் செய்தது மாதிரிதான்!' என்று ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். 'இனிமேல் சோழ நாட்டில் பெண்ணரசு தான் நடக்கப் போகிறது! அது நல்லரசாகவும் இருக்கும்' என்று ஜனங்கள் சொல்லிக் கொண்டார்கள்."

மறுபடியும் இளவரசிகள் 'கலகல' வென்று சிரித்தார்கள்.

"ஆகையால், இளவரசி மார்களே! கருணை கூர்ந்து இந்தப் பட்டாபிஷேகப் பரிசுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்!" என்றான் ஒரு சீன வர்த்தகன்.

"ஏற்றுக் கொண்டு, பொன்னியின் செல்வரிடம் எங்கள் கோரிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும்!" என்றான் இன்னொரு வர்த்தகன்.

"என்ன கோரிக்கை? பொன்னியின் செல்வரிடம் உங்களுக்கு என்ன காரியம் ஆகவேண்டும்? முதலில் அதைச் சொல்லுங்கள்!" என்றாள் குந்தவைப்பிராட்டி.

"தேவி! அவரால் எத்தனையோ காரியம் ஆகவேண்டும். எங்களுக்கு மட்டும் அல்ல; சோழநாடு முதல் சீன தேசம் வரையில் உள்ள எல்லா நாட்டு வர்த்தகர்களும் பொதுமக்களும் அருள்மொழிவர்மரைத் தான் நம்பியிருக்கிறார்கள். பராந்தக சக்கரவர்த்தியின் காலத்தில் கடல்களெல்லாம் பத்திரமாயிருந்தன. கடற் பிரயாணத்தில் புயற் காற்றினால் நேரும் ஆபத்தைத் தவிர வேறுவித அபாயம் இல்லாமலிருந்தது. கடலில் கப்பல்களைத் தாக்கிக் கொள்ளையடிப்பது என்பது கனவிலும் கேள்விப்படாத காரியமாயிருந்தது. சோழ நாட்டு நாவாய்கள் வர்த்தகப் பொருள்களை ஏற்றிக் கொண்டு இராஜபாட்டைகளில் செல்வது போல் நிர்ப்பயமாகச் சென்று கொண்டிருந்தன. மாநக்கவாரம், மாயிருடிங்கம், மாபப்பாளம், இலாமூரி தேசம், ஸ்ரீவிஜயம், சாவகம், கடாரம், காம்போஜம் ஆகிய கடல் சூழ்ந்த நாட்டுத் துறைமுகங்களுக்குச் சோழ நாட்டுக் கப்பல்கள் சென்று ஆங்காங்கே இறக்குமதி ஏற்றுமதி செய்து கொண்டு எங்கள் சீன நாட்டுக்குச் சென்றன. அவ்விதமே எங்கள் சீன தேசத்திலிருந்து புறப்பட்ட கப்பல்களும் சோழ நாட்டுக்குத் தங்கு தடையின்றி வந்து கொண்டிருந்தன. அந்தக் காலம் இப்போது பழங் கனவாகப் போய் விட்டது. தேவி! தங்களிடம் உண்மையைச் சொல்லி விடுகிறோம். இந்தப் பட்டுப் பட்டாடைகளை நாங்கள் திரும்பக் கொண்டு போனால் பத்திரமாய் எங்கள் நாட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்போம் என்பது நிச்சயமில்லை. வழியில் அராபியக் கடல் கொள்ளைக்காரர்களிடம் இந்தப் பட்டாடைகளைப் பறி கொடுப்பதைக் காட்டிலும் சோழநாட்டு இளவரசிமார்களுக்குப் பரிசாக அளிப்பது மிகவும் விசேஷமான காரியமல்லவா?......"

இவ்விதம் அந்தச் சீன வர்த்தகன் சொல்லி வந்தபோது குந்தவை தேவியின் கருவண்டுகளையொத்த கண்கள் நன்கு விரிந்து அளவிலா ஆர்வம் ததும்பப் பெற்றவையாயின.

"பொன்னியின் செல்வரால் அந்தக் காரியம் நடைபெறும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? பராந்தக சக்கரவர்த்தியின் காலத்தில் இருந்தது போல், கடற் பிரயாணம் அபாய மற்றதாகும் என்று எண்ணுகிறீர்களா? மாநக்கவாரம், மாயிருடிங்



கம், கடாரம், ஸ்ரீ விஜயம் முதலிய நாடுகளில் பொன்னியின் செல்வரின் புகழ் பரவும் என்று நம்புகிறீர்களா?'' என்று கேட்டாள்.

''நாங்கள் நம்புவது மட்டும் என்ன? இந்தச் சோழநாட்டு வர்த்தகப் பெருமக்கள் எல்லாரும் நம்புகிறார்கள். ஏன்? சற்று முன் நாங்கள் ஒரு சோதிடரிடம் போயிருந்தோம். அவரும் கூடச் சொன்னார்.''

''என்ன சொன்னார்?''

''பொன்னியின்செல்வர் பெரிய பெரிய கப்பல் படைகளைத் திரட்டிக் கொண்டு கடல்களைக் கடந்துசெல்வார்; கொள்ளைக்காரர்களின் கூட்டங்களை ஒழித்து விடுவார்; கடற் பிரயாணத்தை முன்போல் நிர்ப்பயமானதாகச் செய்து விடுவார்; சோழ நாடு பராந்தக சக்கரவர்த்தியின் காலத்தில் அடைந்திருந்த பெருமையை மீண்டும் அடையும் என்றெல்லாம் ஜோசியர் சொன்னார். ஆனால் இதற்கெல்லாம் சோழ நாட்டு இளவரசிகள் குறுக்கே நின்று தடை விளைப்பாமல் இருக்கவேண்டும் என்றும் கூறினார்!''

''இவ்வளவுதான் சொன்னாரா? இளவரசிகளைப் பற்றி இன்னும் ஏதாவது அவதூறு கூறினாரா?''

''ஆகா! அவதூறா? அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, தேவி! பழையாறை இளைய பிராட்டியைப் பற்றியும் கொடும்பாளூர்க் கோமகளைப் பற்றியும் அவதூறு சொல்கிறவர்கள் இந்தச் சோழ நாட்டில் யாருமே இருக்க முடியாது. அப்படியிருக்க, இளவரசிகளின் தயவை எதிர்பார்த்திருக்கும் ஜோசியர் மட்டும் துணிந்து சொல்லுவாரா?''

''வேறு என்னதான் அந்தச் சோதிடர் எங்களைப் பற்றிச் சொன்னார்?''

''இளவரசிமார்கள் இருவரும் சற்று முன் அவரிடம் வந்து விட்டுப் போனதாகக் கூறினார். இரண்டு பேருக்கும் விரைவில் திருமணம் நடக்கும் என்று சொன்னார். தேவிமார்களே! பட்டாபிஷேகத்துப் பரிசாக ஏற்றுக் கொள்ளா விட்டால் திருமணப் பரிசிலாகவாவது இந்தப் பட்டு ஆடைகளையாவது ஏற்



றுக்கொள்ள வேண்டும்!'' என்றான் முதலில் பேசிய சீன வர்த்தகன்.

இதைக் கேட்ட வானதி, ''அக்கா! இந்தச் சீன வர்த்தகர்கள் வெறும் வம்புக்காரர்கள். இவர்களைப் போகச் சொல்லுங்கள்!'' என்றாள்.

''கொஞ்சம் பொறு, வானதி! இவர்களுடைய வம்பு இன்னும் எவ்வளவு தூரம் போகிறது, பார்க்கலாம்!'' என்று குந்தவை சொல்லி விட்டு, ''வர்த்தகர்களே! சோதிடர் வீட்டு வாசலில் யானையின் மீது வந்து நின்றவர்கள் நீங்கள் தானே?'' என்றாள்.

''ஆம், தேவி! சோதிடர் வீட்டைத் தேடிப் போனதற்குப் பயன் உடனே கிடைத்து விட்டது. நீங்கள் வந்திருப்பதைத் தெரிந்து கொண்டோம். உங்களைச் சந்திக்கும் பாக்கியம் இன்று எங்களுக்குக் கிடைக்கும் என்று சோதிடர் கூறியதும் பலித்து விட்டது. அம்மாதிரியே கொடும்பாளூர் இளவரசியைக் குறித்து அவர் கூறியதும் பலித்து விட்டால் எங்கள் கவலையெல்லாம் தீர்ந்து விடும்!''

வானதி மீண்டும் ''அக்கா! இவர்களைப் போகச் சொல்லுங்கள்!'' என்றாள்.

''வர்த்தகர்களே! உற்சவக் கூட்டத்தினிடையே யானை ஏறி வந்தவர்களும் நீங்கள்தானே? அடிக்கடி நீங்கள் யானை மேலிருந்து இறங்கி ஜனக் கூட்டத்தில் கலந்து கொண்டீர்கள் அல்லவா?'' என்று குந்தவை கேட்டாள்.

''ஆம், தேவி! வரப்போகும் பட்டாபிஷேகத்தைப் பற்றி ஜனங்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்பி அவ்வாறு கூட்டத்தில் புகுந்து சுற்றி வந்தோம்.''

''ஜனங்கள் என்ன பேசிக் கொண்டார்கள்? பொன்னியின் செல்வர் முடி சூட்டிக் கொள்ளப் போவதைப் பற்றித் திருப்தியாகத்தானே பேசினார்கள்?''

''இல்லை; முடி சூட்டு விழாவைப் பற்றியே யாரும் பேசவில்லை.''

''பின்னர், ஜனங்கள் எதைப் பற்றிப் பேசினார்கள்?''

''மதுராந்தகத் தேவரின் பக்தி மகிமையைப் பற்றியே பேசிக் கொண்டார்கள்.''

''அப்படி நல்ல விஷயமாகச் சொல்லுங்கள். பூங்குழலி! கேட்டாயா?'' என்று குந்தவை பூங்குழலியைப் பார்த்துச் சொல்லி விட்டு, ''மதுராந்தகத் தேவரைப் பற்றி இன்னும் என்னவெல்லாம் சொன்னார்கள்?'' என்றாள்.

''மதுராந்தகருடைய தியாகப் பண்பைப் பற்றிப் பேசினார்கள். சோழ ராஜ்யத்தில் அவருக்குப் பாத்தியதை கொண்டாடும் உரிமை இருந்தும், 'இராஜ்யம் வேண்டாம்' என்று சொல்லி விட்டதை மிகவும் பாராட்டினார்கள்.''

''அப்படியா? அதற்குக் காரணம் என்ன சொல்லிக் கொண்டார்கள்?''

''மதுராந்தகத் தேவர் யாரோ ஒரு படகுக்காரப் பெண்மீது காதல் கொண்டு அவளையே பட்டமகிஷியாக்கிக் கொள்ளுவேன் என்று பிடிவாதம் பிடித்தாராம். அதனால் ஏற்கனவே அவர் கட்சியிலிருந்த சிற்றரசர்களின் மனம் மாறி விட்டதாம். 'அப்படியானால் மதுராந்தகருக்குப் பட்டம் கிடையாது; பொன்னியின் செல்வருக்கே பட்டம்' என்று சிற்றரசர்கள் சொல்லி விட்டார்களாம். இம்மாதிரி ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். இளவரசிமார்களே! அந்தப் பாக்கியசாலியான ஓடக்காரப் பெண் இங்கே இருந்தால், அவருக்கும் பட்டாடைப் பரிசு கொடுக்க விரும்புகிறோம்.''

பூங்குழலி இப்போது ''தேவி! கொடும்பாளூர் இளவரசி கூறியது சரிதான். இந்த வர்த்தகர்கள் வெறும் வம்புக்காரர்கள். இவர்களை உடனே போகச் சொல்லுங்கள்!'' என்றாள்.

''கொஞ்சம் பொறு, பூங்குழலி! உனக்கு என்ன கோபம்? இவர்கள் உன்னைப் பற்றி ஒன்றும் தவறாகப் பேசவில்லையே? புகழ்ச்சியாகத்தானே பேசுகிறார்கள்?'' என்றாள் குந்தவை.

''இவர்கள் என்னைப் பற்றிப் புகழ்ச்சியாகவும் பேச வேண்டாம்; இகழ்ச்சியாகவும் பேச வேண்டாம்! எனக்குப் பரிசு கொடுக்கவும் வேண்டாம்!'' என்று பூங்குழலி கிளம்பினாள்.

''அம்மணி! தாங்கள்தானா அந்தப் பாக்கியவதி? ஆகா! ஜனங்கள் பேசிக்கொண்டது ரொம்ப சரி!'' என்றான் சீன வர்த்தகர்களில் ஒருவன்.

''இன்னும் வேறு என்ன பேசிக் கொண்டார்கள்?'' என்று பூங்குழலி புன்னகையுடன் கேட்டாள்.

''மதுராந்தகத் தேவர் தங்களை முன்னிட்டு இந்தச் சோழ ராஜ்யத்தையே தியாகம் செய்துவிட்டார் என்று கூட்டத்தில் ஒருவர் சொன்னபோது, அதற்கு மறுமொழியாக இன்னொருவர், 'பூங்குழலி தேவிக்காக ஒரு இராஜ்யத்தைத் தானா தியாகம் செய்யலாம்? என்னிடம் ஒன்பது இராஜ்யம் இருந்திருந்தால் அவ்வளவு இராஜ்யங்களையும் தியாகம் செய்திருப்பேனே?' என்று சொன்னார். அவர் கூறியதை நானும் ஆமோதிக்கிறேன்!'' என்றான் அச் சீன வர்த்தகன்.

பூங்குழலி கள்ளக் கோபத்துடன், "அக்கா! இந்த அதிகப் பிரசங்கி வர்த்தகரை உடனே தண்டிப்பதற்குத் தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்; இல்லாவிட்டால் நானே பொன்னியின் செல்வரிடம் சொல்லி இவருக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பேன்!" என்றாள்.

இதைக் கேட்டுக்கொண்டு அப்போது மேன் மாடத்துக்கு வந்தார் மதுராந்தகத் தேவர். மாலை நேரத்துப் பூஜை செய்து விட்டுக் கையில் மலர்ப் பிரஸாதம் எடுத்துக் கொண்டு வந்தவர், பூங்குழலியின் வார்த்தைகளைக் கேட்டு, "இந்த வர்த்தகர் கூறியதில் தவறு ஒன்றுமில்லையே? எதற்காக அவரைத் தண்டிக்க வேண்டும்? அவர் கூறியதை நானும் ஆமோதிக்கிறேன், பூங்குழலி!" என்றார்.

இவ்விதம் சொல்லிக் கொண்டு வந்தவரை அந்தச் சீன வர்த்தகன் திரும்பிப் பார்த்தபோது, பூங்குழலி, "உண்மையான வர்த்தகர் சொன்னால் சரிதான்; வேஷதாரி வர்த்தகரை எப்படி ஆமோதிக்க முடியும்?" என்று சொல்லிக் கொண்டே, அந்த வர்த்தகர் தலையில் அணிந்திருந்த சீனத்துத் தலைப்பாகையைப் பிடித்து இழுத்தாள்.

தலைப்பாகை கீழே விழுந்தது; தலைப்பாகையுடன் அவனுடைய முகத்திலிருந்த தாடி மீசை எல்லாம் கீழே விழுந்தன!

சாக்ஷாத் வந்தியத் தேவனுடைய திருமுகம் காட்சி அளித்தது.

"ஐயா! காப்பாற்றுங்கள்!" என்று அலறிக் கொண்டே வந்தியத் தேவன் மற்றொரு சீன வர்த்தகனின் கழுத்தைக் கட்டிக் கொள்ள முயன்றபோது, அவனுடைய தலைப்பாகையும் தாடி மீசையும் கழன்று விழுந்தன.

பொன்னியின் செல்வர் புன்னகை பொலிந்தமுகத்துடன் தோற்றமளித்தார்.

மூன்று பெண்மணிகளும் குலுங்கக் குலுங்க நீண்ட நேரம் சிரித்தார்கள்.

செம்பியன்மாதேவி மேன் மாடத்துக்கு வந்த பிறகு அவரிடம் ஒரு தடவை சொல்லிவிட்டு மறுபடியும் சிரித்தார்கள்.

பூங்குழலி, "அம்மா! இவர்களைக் கோயிலின் அருகே பார்த்த போதே ஒரு மாதிரி எனக்குச் சந்தேகம் தோன்றி விட்டது. அதனாலேதான் தைரியமாக இவர்களை அரண்மனைக்கு வரச் சொன்னேன்!" என்றாள்.

மதுராந்தகத் தேவர் "ஆமாம்; எனக்கும் என் நண்பனைத் தெரிந்து போய் விட்டது. ஆகையினாலேதான் இவர்களை இங்கே விட்டு விட்டு நான் பூஜை செய்யச் சென்றேன்!" என்றார்.

"வானதி! நீயும் நானும்தான் புருஷர்களின் கள்ள வேடத்தைக் கண்டு பிடிக்க முடியாத அசடுகள் போலிருக்கிறது!" என்றாள் குந்தவை.

"இவர்கள் எதற்காக இந்த மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு வந்து நம்மை ஏமாற்றப் பார்த்தார்கள்? அதைக் கேளுங்கள், அக்கா!" என்றாள் கொடும்பாளூர்க் கோமகள்.

"கேட்பானேன், வானதி! என் சகோதரன் இப்படியெல்லாம் கள்ளவேஷம் போடத் தெரிந்தவன் அல்ல. சகவாச தோஷத்தினால்தான் இவ்வாறெல்லாம் வேடம் போடவும் பொய் புனைந்துரைக்கவும் கற்றுக் கொண்டிருக்கிறான்!" என்றாள் குந்தவைப் பிராட்டி.

"தேவி! இந்தக் காரியத்துக்கு வந்தியத் தேவர் மீது பழி சுமத்த வேண்டாம். சீன

வர்த்தகர்கள் மாதிரி வேஷம் தரிக்கும் அபூர்வ யோசனை என் மனத்திலே தான் தோன்றியது!" என்றார் அருள்மொழி.

"இம்மாதிரி யோசனை உன் மனத்தில் தோன்றியதற்குக் காரணந்தான் சகவாச தோஷம் என்று சொல்கிறேன். போகட்டும்! இந்த மாதிரி பொய் வேஷம் இனி மேல் நீ போட வேண்டாம்!"

"அக்கா! திருவள்ளுவர் வாய்மையின் பெருமையைப் பற்றி எவ்வளவோ சொல்லியிருக்கிறார். ஆனால் அவர் கூட,

**'பொய்மையும் வாய்மையிடத்த: புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்!'**

என்று சொல்லியிருக்கிறார் அல்லவா?"

"திருவள்ளுவர் அந்தக் குறளைப் பாடியபோது இப்படி நீ அதை உபயோகப் படுத்தப் போகிறாய் என்று கனவிலும் கருதியிருக்க மாட்டார்."

"திருவள்ளுவரை விட்டு விடலாம். இராமர் வனத்துக்குப் புறப்பட்டபோது தம்மைத் தொடர்ந்து வந்த அயோத்தி மக்களைத் திரும்பி அயோத்திக்குப் போகும்படி செய்வதற்குக் கொஞ்சம் பொய்மையைக் கையாள வில்லையா? ஜனங்கள் தூங்கும்போது எழுந்து ரதத்தை அயோத்தியை நோக்கிச் சிறிது தூரம் செலுத்தி விட்டுப் பிறகு கங்கைக் கரையை நோக்கிச் செலுத்தும்படி சுமந்திரரிடம் சொல்லவில்லையா?"

"தம்பி! நீ எல்லாக் காரியங்களிலும் இராமரைப் பின் பற்றுவதாயிருந்தால் எனக்கு மிக்க மகிழ்ச்சிதான்! போகட்டும்! நீங்கள் இந்தப் பொய் வேஷம் பூண்டதால் 'புரை தீர்ந்த நன்மை' என்ன உண்டாயிற்று? அதைச் சொல்வாயா?" என்று கேட்டாள் குந்தவை.

"நாங்கள் இன்னார் என்பதைக் காட்டிக் கொள்ளாமல் குடி மக்களின் கூட்டத்தில் புகுந்து அங்குமிங்கும் அலைந்து அவர்களுடைய உண்மையான மனக் கருத்துக்களை அறிய முடிந்தது!"

குந்தவை சிறிது ஆர்வத்துடன், "மக்கள் மனக் கருத்தைப் பற்றி என்ன தெரிந்து கொண்டாய், தம்பி!" என்று கேட்டாள்.

"எத்தனையோ தெரிந்து கொண்டேன், அக்கா! முக்கியமாக, இந்தச் சோழ சாம்ராஜ்யம் பராந்தக சக்கரவர்த்தியின் காலத்தில் இருந்தது போல் மகோன்னதமடைய வேண்டும் என்பதை மக்கள் எல்லாரும் விரும்புகிறார்கள் என்று அறிந்தேன். சற்று முன்னால் நானும் என் நண்பரும் சீன வர்த்தகர்கள் போல் வேஷம் போட்டுக் கொண்டு இருந்தோமல்லவா? வேஷம் பொய்யாக இருந்தாலும் நாங்கள் கூறியதெல்லாம் மெய்தான்! உங்களிருவரையும் சாலையில் சந்தித்து விட்டுத் தஞ்சைக்கு நாங்கள் சென்றோம். தஞ்சையில் கோட்டை வாசலுக்கு அருகில் உண்மையாகவே இரண்டு சீன வர்த்தகர்களைக் கண்டோம். அவர்களிடம் விலை கொடுத்து இந்தப் பட்டு மூட்டைகளை வாங்கிக் கொண்டோம். அவர்களைப் போல் வேஷம் போட்டுக் கொண்டு திரும்பி வந்தோம். அராபியக் கடல் கொள்ளைக்காரர்களைப் பற்றி நான் சற்று முன் சொன்னதெல்லாம் அந்த வர்த்தகர்கள் எங்களிடம் கூறியது தான். அராபியக் கடல் கொள்ளைக்காரர்களின் மூர்க்கத் தனத்தை நானும் என் நண்பரும் நேரிலேயே அநுபவித்திருக்கிறோம். தேவி! எது எப்படியானாலும், பட்டாபிஷேக வைபவம் முடிந்ததும் நானும் என் நண்பரும் ஈழ நாட்டுக்குப் புறப்படுவது நிச்சயம். அங்கே எங்கள் காரியம் முடிந்ததும், கடல்களுக்கு அப்பாலுள்ள இன்னும் பல நாடுகளுக்கும் செல்ல உத்தேசித்திருக்கிறோம். உயிருடன் திரும்பி வருவோமா, அல்லது போகுமிடங்களில் போர்க்களத்தில் உயிரை விட்டு வீர சொர்க்கம் எய்துவோமா என்று தெரியாது. ஆகையால் நாங்கள் புறப்படும் வரையில் நீங்கள் எல்லாரும் எங்களுடனேயே இருக்க வேண்டும் என்றும், எங்களுக்கு ஆசி கூறி விடை கொடுத்து அனுப்ப வேண்டும் என்றும் கேட்டுக் கொள்வதற்காகவே அவசரமாகத் தங்களைப் பின் தொடர்ந்து வந்தோம்!"

இவ்வாறு பொன்னியின் செல்வர் கூறி வந்தபோது, குந்தவை தேவியின் கண்களில் நீர் ததும்பியது.

பூங்குழலி தழ தழத்த குரலில் "யுத்தம் என்று எதற்காக ஏற்படுத்தியிருக்கிறார்களோ, தெரியவில்லை. மனிதர்கள் ஒருவரை யொருவர் நேசித்துக் கொண்டு ஆனந்தமாயிருக்கக்கூடாதா?" என்றாள்.

"மகளே! அப்படியல்ல! உலகம் உள்ள வரையில் யுத்தம் இல்லாமல் தீராது. பரமசிவனும் பரமேசுவரியும் யுத்தம் செய்ய வேண்டியிருந்ததே! உலகத்தில் தர்மத்தை நிலைநாட்டுவதற்காகப் பிறந்தவர்கள் சிலர் உண்டு. அவர்கள் யுத்தம் செய்யத்தான் வேண்டும்!"

இவ்விதம் சிவபக்த சிரோமணியும் பரம சாதுவுமான செம்பியன் மாதேவி கூறியதைக்கேட்டு அனைவரும் ஆச்சரியக் கடலில் ஆழ்ந்தார்கள். (தொடரும்)

# மாயூரம் மகாநாடு




இல்லாத ஒரு விஷயத்தை ஆதரிப்பதற்காக ஒரு மகாநாடு நடத்தப்பட்ட தென்று எங்கேனும் கேள்விப் பட்டதுண்டா! நடைமுறை வழக்கத்தை விரும்பவில்லை என்று சொல்லுவதற்கு, 'ஆதரவு மகாநாடு' என்று பெயர் வழங்கப்பட்ட அதிசயத்தைக் கண்டதுண்டா!

இந்த அதிசயம் மார்ச்சு மாதம் இருபத் தெட்டாம் தேதி மாயவரத்தில் வேதநாயகம் பந்தலில் நிகழ்ந்தது. "ஒரு முனை விற்பனை வரி ஆதரவு மகாநாடு" முன்னாள் மேயர் திரு ராமசாமி நாயுடு அவர்கள் தலைமையில் நடந்தது. அமுலில் இல்லாத ஒரு முனை விற்பனை வரியை அமுல் நடத்தக் கோரி ஆதரவு மகாநாடு நடந்தது. நடைமுறையிலுள்ள பல கட்ட விற்பனைவரி மாற வேண்டும் என்று வற்புறுத்தியது மகாநாடு. மாயூர வர்த்தக சங்கத்தினரின் சாமர்த்தியத்தைக் காணும் போது, 'ஆயிரமானாலும் மாயவரம் ஆகாது' என்று எண்ணி வியக்காமலிருக்க முடியவில்லை!

ஞாயிற்றுக் கிழமை காலை 8-30 மணிக்கு மகாநாட்டுத் தலைவர் முன்னாள் மேயர் திரு ராமசாமி நாயுடு அவர்கள் பாண்டு, மேள வாத்திய முழக்கங்களுடன் வர்த்தகப் பிரமுகர்கள் புடைசூழ மகாநாடு நடக்க விருந்த வேத நாயகம் பந்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

மகாநாடு ஆரம்பிக்குமுன் திரு எம் பொன்னுசாமி அய்யர் பாரதத் தாயின் அசோக சக்கரம் பதித்த மூவர்ணக் கொடி ஏற்றம் செய்தார்.

பின்னர் கந்தசாமி செட்டியார் கடவுள் வாழ்த்துப் பாட மகாநாடு ஆரம்பமாயிற்று. மகாநாட்டுத் திறப்பு உரை ஈரோடு திரு கேசவலால் காளிதாஸ் சேத் நிகழ்த்தினர். அடேயப்பா! வாசாமகோசரமாக அவர் பொழிந்த சொற்பொழிவு மக்களைப் பிரமிக்கச் செய்து விட்டது.

இவருடைய பேச்சில் மிக முக்கியமான விஷயமாகத் துலங்கியது, விற்பனை வரி இலாக்கா ஆபீஸர்கள், குமாஸ்தாக்கள், சேவகர்கள் முதலியவர்களால் படிப்பு வாசனையற்ற சில்லறை வியாபாரிகள் அனுபவித்து வரும் கஷ்ட நஷ்டங்களே! அங்கொரு ஹோட்டல்காரர் ஏ. ஸி. டி. ஓ. வைப் பார்த்து விட்டு மூர்ச்சை யுற்று விழுந்தாராம். இங்கொரு சில்லறை வியாபாரி ஏ. ஸி. டி. ஓ. ஆபீஸர் "ஐயாயிரம் ரூபாய் மதிப்புக்கு வியாபாரம் செய்ததாக மதிப்பீடப் போட்டு வரி விதிக்கப் போகிறேன்" என்று சொன்னதும், ஐயாயிர ரூபாயே வரி போட்டு விட்டதாக எண்ணி மூர்ச்சையே தெளியே விட்டு விட்டாராம்! மார் அடைத்து இறந்துவிட்டாராம்!

இன்னொரு ஆபீஸர் தெருவில் போய்க் கொண்டிருந்த ஒருவனைப் பார்த்து, அவன் ஒரு சந்தை வியாபாரி என்று கருதி விட்டார். அதன் பயனாக அவன் தன் பைக்குள் வைத்திருக்கும் புஸ்தகம் வியாபாரக் கணக்குப் புஸ்தகம் என்று எண்ணிப் பையில் கையைப் போட்டு எடுத்தாராம். "நீர் யார் ஐயா, என் பையில் கை போடுவதற்கு!" என்று கேட்டாராம் அந்த வழிப்போக்கர்.

"எனக்கு உன் பையில் கை போட்டு அந்தப் புஸ்தகத்தை எடுப்பதற்குச் சகல உரிமையும் உண்டு" என்று சொன்னாராம் அதிகாரி.


"எனக்கும் இப்படிக் கையைப் போடுபவர்களை அறைவதற்கு உரிமையுண்டு" என்று சொல்லிக் கன்னத்தில் ஓர் அறை விட்டாராம்.

அறைவாங்கிய அந்த உத்தியோகஸ்தர் "நீர் யார்?" என்று கேட்டதற்கு, "நான் ஒரு போலீஸ்காரன்" என்றாராம் அந்த வழிப்போக்கர்.

அடுத்த நாளே ஆபீஸர் 'லீவ்' போட்டு விட்டு வேறு ஊருக்கு மாற்றலாகிப் போய் விட்டாராம்!

இப்படி அவர் பல சிறு முதல் வைத்து நடத்தும் வியாபாரிகள் விற்பனை வரி இலாக்காவினர் மூலம் அடைந்து வரும் இன்னல்களை விளக்கினார்.

மகாநாட்டுத் தலைவர் ஊர்வலமாக வருகிறார்



அடுத்தாற் போல் மாயூரம் சேம்பர் ஆவ் காமர்ஸின் தலைவரான ஸ்ரீராமமூர்த்தி அய்யர் மாநாட்டுத் தலைவரைப் பிரேரேபிக்க, உபதலைவர் ஸ்ரீ கே. எஸ். அருணாசலய்யர் ஆமோதிக்க திரு ராமசாமி நாயுடு அவர்கள் தலைமைப் பீடத்தைத் தாங்கினர்.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஜனாப் ஹாஜி அப்துர் ரஹ்மான் சாயபு தலைவருக்கு வரவேற்புரை வாசித்து அளித்தார். அதில் மகாநாட்டின் நோக்கத்தைப் பின்வருமாறு வெளியிட்டிருந்தார்:

"வியாபாரம் என்பது சகஜ இரம் உள்ள ஒரு முயற்சி. இதற்குத் தற்போதுள்ள சட்டம் வரிவிதிப்பு முறை முதலியவை பெருந் நீங்குகள் வீணை

விக்கின்றன. ஆகவே அரசாங்கத்தாருக்கும் ஏனையோருக்கும் வியாபாரிகளுடைய சங்கடமான நிலைமையைத் தெரிவிக்கும் பொருட்டும் அதற்கு உகந்த பரிகாரங்களைத் தேடவும் அரசாங்கத்தாருடன் மிக்க ஒத்துழைப்பு மனப்பான்மையுடன் இங்கு கூடியிருக்கிறோம்.''

தலைமை வகித்த திரு ராமசாமி நாயுடு அவர்கள் தம் தலைமையுரையில், இந்த விற்பனை வரி இன்று நேற்றல்ல, தொன்று தொட்டே பல நாடுகளிலும் விதிக்கப்பட்ட வரி என்று கூறினர். ''சரித்திர காலத்துக்கு முன்பே ரோம சாம்ராஜ்யம் உன்னத நிலையிலிருந்தபோதே இந்த வரி விதிக்கப்பட்டது. இங்கிலாந்து, ஜெர்மனி, ஸ்விட்ஸர்லாந்து முதலிய பல ஐரோப்பிய நாடுகளிலும் இவ் வரி விதிக்கப்பட்டது. இது ராஜாஜி புதிதாகக் கண்டு பிடித்த வரியல்ல; மிக நல்ல காரியத்துக்குப் பயன்படுத்த, மக்களை மதுவரக்கனின் கொடுமையிலிருந்து விடுவிக்க, இந்த வரியை ராஜாஜி விதித்தார். ஆனல், கடை முறையில் அரசாங்கத்தார் மீதும் குற்றமிருக்கலாம். நாமும் குற்றம் குறையே இல்லாதவர்கள் அல்ல! எனவே, தவறு முழுதும் அரசாங்கத்தார் மீதுதான் இருக்கிறது என்று சொல்ல முடியாது. எனினும் இப்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக ஒருமுனை விற்பனை வரியை ஆதரிக்க வேண்டும். சர்க்காரிடம் வற்புறுத்தவும் வேண்டும்'' என்று எடுத்துக் கூறினர்.

பின்னர் மாயூரம் முனிசிபல் சேர்மனுகிய திரு டாக்டர் வரதாச்சாரியார் காந்தியடிகளின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

உள்ளூர் எம் எல் ஏ.க்களான திருவாளர்கள் கே.ஆர். சம்பந்தம், ஏ. வேலு, ஜி. நாராயணசாமி நாயுடு முதலியவர்கள் மகாநாட்டுக் குறிக்கோளை ஆதரித்துப் பேசினர்கள்.

''நான் வெறும் பேச்சாளியல்ல. நான் காரியக்காரன். ஒருமுனை வரி விதிப்பினுல் சின்னஞ் சிறு வியாபாரிகளுக்குப் பலன் நிச்சயம் உண்டு எனில் எப்படியாவது சாதித்தே தீருவோம். சில காய்கறிகள், பழங்கள் மீதிருந்த விற்பனை வரியை நீக்க வேண்டும் என்று பீ. சது. மந்திரியிடம் போன தூதுகோஷ்டியின் தலைவனுக இருந்து நடத்தி வைத்தேன்'' என்று ஸ்ரீ நாயுடு கூறினர்.



மகாநாட்டுக்கு வந்திருந்த கூட்டத்தின் ஒரு பகுதி

சேலத்திலிருந்து மாநாட்டுக்கு வந்திருந்த பிரபல வியாபாரி ஸ்ரீ எம். வி. கோபால்செட்டியார் அவர்களும், சென்னையிலிருந்து வந்திருந்த பிரபல வியாபாரி ஸ்ரீ வி. தேவராஜுலு செட்டியார் அவர்களும் வியாபாரிகளிடையே ஒற்றுமை வேண்டும், ஒற்றுமை ஏற்பட்டு விட்டால் சாதிக்க முடியாத காரியமே இல்லை என்று வற்புறுத்திக் கூறினர்கள்.

பின்னர் பேசிய ஸ்ரீமதி அனந்த நாயகி ''விஷப் பாம்பை நல்ல பாம்பு என்று அழைப்பதுபோல் இருக்கிறது பல கட்ட விற்பனை வரியை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தக் கூட்டப்பட்ட இம் மகா நாட்டை 'ஒரு முனை வரி ஆதரவு மகாநாடு' என்று அழைப்பது!'' என்று கூறி ஓர் அரிய சொற்பொழிவு ஆற்றினர்.


அடுத்தாற்போல் திரு டி. செங்கல்வராயன் அவர்கள் கருத்துச் செறிந்த பிரசங்கம் நிகழ்த்தினர்.

''இந்த ஜனநாயக யுகத்தில் மிக ஜனநாயகமான வரி இந்த விற்பனை வரிதான். இந்த விற்பனை வரியில் வரும் வருமானம் ஒரு சிலருக்கு மட்டும் போட்டால் தாங்க முடியாமல் திணறிப் போவார்கள். நல்ல மழை பெய்கிறது. மொட்டை மாடியில் சேர்ந்த தண்ணீர் ஒரு கண் வழியாக அடர்ந்து வெளியே விழும்போது தலை நீட்ட முடியாமல் போய் விடுகிறது. அதன் வேகத்தைத் தலை தாங்க முடியாமல் திணறுகிறோம். அதே சமயம் ஒருவித கஷ்டமுமின்றி மழையிலேயே நடந்து போக முடிகிறது. ஒவ்வொரு துளியாகத் தலையில் விழும் போது சுகமாகவே இருக்கிறது. அதைப் போலவே எல்லோரும் ஓர் தம்படி

ஸ்ரீ ஜி. நாராயணசாமி நாயுடு 'நம் பக்கம்' என்று தெரிந்தவுடன் அங்கு கூடியிருந்த ஆயிரக் கணக்கான வியாபாரிகளின் முகத்தில் ஆனந்தம் பிரதிபலித்தது. ஒருமுனை வரி விதிக்கப்பட்டதாகவே எண்ணி மகிழ்ந்தனர். இத்தகைய மகிழ்ச்சியுடன் காலை நிகழ்ச்சிகள் இனிது முடிவடைந்தன.

மீண்டும் பிற்பகல் நாலு மணிக்கு மகாநாடு கூடியது.

மகாநாட்டுத் தலைவரும், திறப்பாளரும், மற்ற வர்த்தகப் பிரமுகர்களும்



கொடுப்பது கஷ்டமாயிராது என்று கூறி ராஜாஜி அந்நாட்களில் அமுலுக்குக் கொண்டு வந்தார்.

"ஆனால் விற்பனை வரி சட்ட திட்டங்கள் காரணமாகவும் உத்தியோகஸ்தர்கள் காரணமாகவும் நடுத்தர வியாபாரிகள் இல்லாத தொல்லைகளுக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது என்றால் விற்பனை வரி சட்டத்தை மாற்ற வேண்டியது அவசியம்தான்.

"அரசாங்கத்துக்கு வரி செலுத்துவது என்றால், நம் மக்களுக்கு மனமே வருவதில்லை. அதனால் நம் நாட்டில் வரி வசூலிப்பதற்காக ஆகும் செலவு மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிக அதிகமாக இருக்கிறது. சர்க்காருக்கு வரி செலுத்துவது நம் கடமை" என்றார்.



"ஒரு முனை வரிதானே வேண்டும்?"
(ஜி. நாராயணசாமி நாயுடு எம். எல். ஏ.)

அல்லது உபயோகப் படுத்தப்படுமிடத்திலா! ஒவ்வொரு பொருளும் எத்தனை கைகள் மாறும் என்று எப்படி நிர்ணயிப்பது! ஆகிய பிரச்னைகள் அரசாங்கத்தாரும், வியாபாரிகளும் கூடி ஆலோசித்து முடிவுக்கு வர வேண்டிய விஷயங்கள் ஆகும்.

ஒரு தேசத்தின் முதுகெலும்பாக விளங்கும் சமுதாயம் வர்த்தக சமுதாயம். அதிலும் சிறு முதல் போட்டு நடத்தும் வியாபாரிகளுக்கு இப்பொழுது இவ் விற்பனை வரி இலாக்கா மூலமும், சட்ட திட்டங்கள் மூலமும் பெரும் தொல்லைகள் ஏற்படுகின்றன. இவ்வியாபாரிகள் நொடித்து விட்டால் கைத்தறி நெசவாளர் பட்டினிப் பட்டாளத்துடனும், படித்து விட்டு உத்தியோகமின்றித் திண்டாடும் வேலையில்லாதார் கூட்டத்துடனும், இவர்களும் சேர்ந்துவிட நேரும்.

கடைசியாக ஒரு முனை விற்பனை வரியினால் பெருவாரியான நடுத்தர வியாபாரிகள் பயன் பெறுவார்கள் என்றால் தம்மாலான உதவியளிக்கத் தயார் என்றும் கூறினார்.

பின்னர் தலைவர் முடிவுரை நிகழ்த்தினார். தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. தீர்மானங்களில் ஒன்று, காய் கறி, பழம் முதலியவற்றுக்கு விற்பனை வரி விலக்கு அளித்ததற்காகச் சர்க்காருக்கு நன்றியையும் மகிழ்ச்சியையும் மகாநாடு தெரிவிப்பதாக இருந்தது. மற்றொரு முக்கியமான தீர்மானம் அரசாங்கத்தை ஒரு முனை விற்பனை வரி உடனடியாக அமுலுக்குக் கொண்டு வந்து வியாபார சமுதாயத்தைக் கை கொடுத்து உதவ வேண்டும் என்பதாகும்.

மாயூரம் வர்த்தக சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூற விழா இனிது முடிந்தது.

ஒருமுனை விற்பனை வரியைப் பற்றி நானும் இங்கு இரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது விற்பனை வரி பல கட்டங்களில் வாங்கப்படுகிறது. ஒரு பொருள் உற்பத்தியாகுமிடத்திலிருந்து எத்தனை கைகள் மாறுகின்றனவோ, அத்தனை கைகளிடமிருந்தும் விற்பனை வரி வசூலிக்கப் படுகிறது. இப்போது கோரிக்கை என்னவென்றால், இத்தனை கைகள் மாறுவதனால் ஒரு பொருள் எவ்வளவு வரி வசூலித்துத் தருகிறதோ அதை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளுங்கள் என்பதுதான். இது எந்த இடத்தில் வசூலிப்பது? உற்பத்தி யாகுமிடத்திலா,

மாயூரம் ஒரு முனை விற்பனை வரி ஆதரவு மகாநாடு இந்த எச்சரிக்கையைத்தான் செய்திருக்கிறது. இனி அரசாங்கத்தின் பொறுப்பு, காலா காலத்தில் செய்ய வேண்டியதைச் செய்வது.

மகாநாடு முடிந்த அன்றிரவு வர்த்தக சங்கத்தின் உதவித் தலைவர் ரயிலடிக்கு வந்திருந்தார். "ஸார்! நாங்கள் என்ன சொல்லுகிறோம் என்று உங்களுக்கு நன்றாகத் தெரிந்து விட்டதல்லவா!" என்று கேட்டார்.

"ஏன், இப்படிச் சந்தேகத்துடன் கேட்கிறீர்கள்! என்னைப் பார்த்தால் புரிந்து கொள்ள முடியாதவன் போல் தோன்றுகிறதோ!" என்று கேட்டேன்.

"இல்லை......இல்லை......நாங்கள் அரசாங்கத்துக்கு வரி கொடுக்க மாட்டோம் என்று சொல்லவில்லை. இன்று இந்த வரி மூலம் என்ன வருமானம் சர்க்காருக்கு வருகிறதோ அதைக் கொடுக்கத் தயாராயிருக்கிறோம்; ஆனால் அது ஒரு முனையில் வசூலிப்பதாக இருக்க வேண்டும் என்றுதான் சொல்லுகிறோம். 'வரி கொடுக்க மாட்டோம்' என்று சொல்லுவதாகத் தப்பாக நினைத்து விடக் கூடாதே என்பதுதான் என் கவலை!" என்றார்.

"இப்படி 'வரி கொடுத்துத்தான் தீருவோம்' என்று ஒரே பிடிவாதமாகச் சொல்லும் வர்த்தக சமூகம் இருக்கும்போது சர்க்காருக்கு என்ன கவலை!" என்றேன் நான்.

அதற்குள் ரயில் 'கூ' என்று கூவிற்று.

## அட்டைப் பட விளக்கம்

சொல்லு மழலையிலே—கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்!
—பாரதியார்

"அம்மா! இந்தக் கண்ணாடிக்குள் பார்த்தாயா? ஒரு பாப்பா என்னைப் பார்த்து முறைக்கிறது!" என்று அக்குழந்தை கண்ணாடியில் தன் பிரதி பிம்பத்தைப் பார்த்தே கூறுகிறது; மழலை மொழியில் கூறுகிறது.

அந்த மழலை மொழியைக் கேட்டு அந்தத் தாய் அடைந்த மகிழ்ச்சி கொஞ்ச நஞ்சமல்ல. அது அவளுடைய இதழ்களில் தங்கியிருக்கும் புன்முறுவலிலிருந்தே தெரிகிறதல்லவா?

"அந்தப் பாப்பா யார் தெரியுமா? அது நீயேதான்!" என்று கூறினாள் தாய். அதைக் கேட்ட அந்தக் குழந்தையின் பிரமிப்பையும் மகிழ்ச்சியையும் என்னவென்று சொல்வது!

தாயின் புன்முறுவலையும் குழந்தையின் வியப்பையும் நமது சித்திரக்காரர் ராகவன் இவ்விதம் அட்டைச் சித்திரமாகத் தீட்டியிருக்கிறார்.


KAMINIA
OIL
KAMINIA
PERFUMERY Co
BOMBAY
காமினியா
ரிஜிஸ்டர்ட் ஆயில் ரிஜிஸ்டர்ட்
காமினியா ஆயிலின் (ரிஜிஸ்டர்ட்) ஜீவசக்தியுள்ள சரக்குகள், இந்த பிரசித்தி பெற்ற ஹேர் ஆயிலை மற்றெல்லா ஹேர் ஆயில்களினின்றும் மாறுபட்டு விளங்கச் செய்கிறது. கேசத்தை வளப்படுத்துவதற்கு அவசியமானவற்றைத் தவிர வேறென்றுமே இல்லை. இந்த பாட்டிலில் பூராவும் காமினியா ஆயில்தான். வேறென்றும் இத்துடன் கலக்கப்படுவதில்லை. இதில் அடங்கியுள்ள தைலம் பூராவும் உபயோககரமாக செலவழிக்கப் படுகிறது. எனவே, நீங்கள் காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) வாங்குவதானால் உங்கள் பணத்திற்கான முழு மதிப்பையும் பெறுகிறீர்கள்.
சாம்பிள் பெற தபால் செலவிற்கு அணா 4 ஸ்டாம்பு அனுப்பவும்.
ஆங்கிலோ இந்தியன் டிரக் & கெமிகல் கோ.
பம்பாய்–2




மார்ச்சு மாதம். இருபத்தோராம் தேதி. நடுப் பகல். வெய்யில் நன்றாகக் காய்ந்து கொண்டிருந்தது. ஈரோட்டிலிருந்து கொடுமுடிக்குச் செல்லும் நீண்ட சாலையில் போய்க்கொண்டிருந்தோம். கொங்கு நாட்டுச் சாலைகளே தனி அழகு. ஏற்றமும் இறக்கமுமாக, வளைச்சலும் திருப்பமுமாக இருக்கும். ஒரே மட்டமான சாலைகளை அங்கு தஞ்சை ஜில்லாவிலே போலக் காண முடியவில்லை. சாலையின் இருபுறமும் பச்சைப் பசேல் என்று நெற் பயிர்கள் வளர்ந்துள்ள வயல்கள். அதல பாதாளத்திலிருந்து பூமியில் உள்ள மலைப் பாறைகளை வெடி வைத்துப் பிளந்து தோண்டப்பட்ட ஆழமான கிணற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வந்து நிலங்களுக்குப் பாய்ச்சுகிறார்கள். கொங்கு நாட்டு மக்களின் சளியாத உழைப்பால் விளைந்துள்ள நெற் பயிர்கள் காற்றிலே அசைந்து ஆடிய காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

இம்மாதிரி இயற்கை வளம் உள்ள சூழ்நிலையில் ஓர் இடத்தில் புத்தம் புதிதாகப் பூமியிலிருந்து முளைத்து எழுந்தது போல ஒரு சின்னஞ் சிறு ஊர் தோன்றி இருப்பதைக் கண்டோம். அங்கு பெரிய பந்தலும் வாழை மரங்களும் தோரணங்களும் கட்டியிருந்தன. "இதுதான் சின்னம்மாபுரம்" என்றார் எங்களுடன் இருந்தவர்.

ஒழுங்காகப் பிளான் செய்து போடப்பட்ட வீதி. வீதியின் இரு புறத்திலும் வரிசையாகச் சிறிய வீடுகள் தென்பட்டன. இந்த வீடுகள் ஏழை ஹரிஜன மக்களின் குடும்பங்கள் வசிப்பதற்காகக் கட்டப்பட்டவை என்று அறிந்தேன். ஒவ்வொரு வரிசையிலும் இருந்த வீடுகள் அச்சில் வைத்து வார்த்தது போல் இருந்தன. வரிசைக்குப் பதினாறு வீடுகளாக இரண்டு வரிசைகள் முப்பத்திரண்டு வீடுகள் எதிரும் புதிருமாக அமைந்து இருந்தன. ஒவ்வொரு வீடும் சுத்தமாகவும் வசதியாகவும் இருந்தது. ஒரு சமையல் அறை, ஒரு கூடம், திண்ணை, புறவடை எல்லாம் இருந்தன. ஒவ்வொரு வீட்டின் மத்தியிலும் தீண்டாமையை ஒழித்து ஏழை ஹரிஜன மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்ட காந்தி மகாத்மாவின் திருவுருவப் படம் மாட்டி இருந்தது. ஊரின் தலைவாசலிலே அழகான சின்னம்மா மண்டபமும், தெருக் கோடியில் சிறிய அம்மன்கோயிலுமிருந்தன.



திருமதி சின்னம்மாள்

சென்னை, திருச்சி, மதுரை முதலிய பெரிய நகரங்களில் வசிக்கும் மத்தியதர வகுப்பாருக்கு இந்த மாதிரி வீடு குடி இருக்கக் கிடைத்து விட்டால் மோட்ச வீடே கிடைத்து விட்டது போல் மகிழ்ந்து போவார்கள்.

ஹரிஜனங்கள் வசிப்பதற்கு என்று நிர்மாணிக்கப்பட்ட அந்த வீடுகளுக்கு எல்லாமாகச் சேர்த்துப் பொதுவாக 'பிளஷ்-அவுட்' என்று சொல்லப்படும் சுகாதார வசதிகள் அமைந்திருப்பதை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். நவீன சுகாதார முறையில் பூமிக்குள் பெரிய தொட்டிகள் கட்டி 'பிளஷ்-அவுட்' அமைத்து இருக்கிறார்கள். இதனால் அசுத்தம் காற்றைக் கெடுக்காது. சின்னம்மாபுரத்தில் வசிக்கும் ஹரிஜன மக்கள் சுத்தமான காற்றைச் சுவாசித்து நோய் நொடி இல்லாமல் வாழ்வார்கள்.

சின்னம்மாபுரத்தைச் சுற்றியுள்ள திறந்த வெளியில் பலன் தரக்கூடிய மர வகைகள் வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருப்பதாக அறிந்தேன். இப்போது ஒவ்வொரு வீட்டுக் கொல்லையிலும் இரண்டு தென்னம் பிள்ளைகள் வைத்திருக்கிறார்கள். குழந்தைகள் விளையாடுவதற்கு வேண்டிய விளையாடும் சதுக்கம், குடி தண்ணீருக்கு வேண்டிய கிணறு, குளிக்கும் அறைகள் முதலிய பல வசதிகளும் செய்து கொடுக்க முடிவு செய்திருக்கிறதாம். கூட்டுறவுப் பண்டகசாலை, பள்ளிக்கூடம், வைத்திய சாலை ஆகியவைகள் ஏற்படுத்துவதற்குத் திட்டம் இட்டிருக்கிறதாம்.



இவ்வளவும் ஒரே ஒரு மனிதரின் கைங்கர்யம்தான். சுமார் பதினெட்டாயிரம் ரூபாய் செலவிலேயே இந்த அழகிய புது ஊரை அமைத்து ஹரிஜனங்களுக்கு வழங்கியிருக்கிறார் என்பதை மார்ச் மாதம் இருபத்தோராம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை சின்னம்மாபுரம் திறப்புவிழாவில் தெரிந்து கொண்டேன்.

** ** **

இந்த ஊரை நிர்மாணிப்பதற்குச் சுமார் பதினெட்டாயிரம் ரூபாய்தான் செலவாயிற்று என்பதை அறிந்தபோது எனக்கு ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது.

இதே காரியத்தைச் சர்க்கார் இலாகா மூலம் செய்து இருந்தார்களானால் 'பிளான்' தயார் செய்வதற்கே இவ்வளவு ரூபாயையும் செலவழித்திருப்பார்கள். பிறகு கட்டிடங்கள் கட்டி முடிப்பதற்குப் பன்மடங்கு தொகை செலவழித்திருப்பார்கள்.

ஒரே ஒரு மனிதர் உற்சாகத்தோடு, தியாக உணர்ச்சியோடு செய்ததால் குறைந்த செலவில் வெகு சீக்கிரத்தில் இந்தக் காரியத்தைச் செய்து முடித்திருக்கிறார்.

இப்படித் திறமையாகச் செய்த புண்ணியவான் யார்! எதற்காக இந்த ஊரை நிர்மாணித்து ஹரிஜனங்களுக்கு வழங்கினார்! முப்பத்திரண்டு வீடுகளைத் திருகதானம் செய்தார்!


கொங்கு நாட்டுக் கவுண்டர் குலத்தைச் சேர்ந்த மூத்தாயி பாளையம் திரு மு. மு. சிற்றம்பலம் என்னும் பெரியார்தான் இந்தச் சின்னம்மாபுரம் என்ற ஊரை அமைத்திருக்கிறார். காலம் சென்ற தம் அருமை மனைவியார் ஸ்ரீமதி சின்னம்மாளின் நினைவுச் சின்னமாக—இந்த நல்ல திருப்பணியைச் செய்திருக்கிறார்.

உழைத்துப் பாடுபடும் கொங்கு நாட்டுக் கவுண்டர்கள் தருமத்துக்கும் தாராளத்துக்கும் பெயர் போனவர்கள். அவர்கள் வண்மையும், வரையாது வழங்கும் பெருந்தன்மையும் சரித்திரப் பிரசித்தமானவை.

பல ஆண்டுகளுக்கு முன் காளிங்கராயக் கவுண்டர் என்று ஒரு பெரியவர் இருந்தார். அவர் ஒரு வாய்க்கால் வெட்டினார். முன்னால் ஒரு நல்ல பாம்பு சென்றதாம். அது சென்ற வழியிலேயே வாய்க்காலை வெட்டிக் கொண்டு போனாராம். அதனால்தான் அந்த வாய்க்கால் வளைந்து வளைந்து செல்லுவதாகச் சொல்லுகிறார்கள். இன்று கூட அந்த வாய்க்காலுக்குக் காளிங்கராயன் வாய்க்கால் என்றே பெயர் வழங்கி வருகிறது. அந்தக் காளிங்கராயக் கவுண்டரின் சந்ததியார் இன்னமும் அங்கு இருக்கிறார்கள். அவர்கள் காளிங்கராயன் வாய்க்கால் தண்ணீரைக் குடிக்க மாட்

1. சம்பிரதாய முறையில் கட்டியிருந்த நாடாவைக் கத்தரித்துச் சின்னம்மா புரத்தைத் திறந்து வைக்கிறார் ஸ்ரீ பழனிசாமிக் கவுண்டர். 2. சின்னம்மாபுரத்தை ஒட்டியுள்ள புறவடையில் வைத்திருக்கும் தென்னம் பிள்ளைகளைப் பார்வையிடுகின்றனர் 3. திறப்பு விழாவில் கலந்து கொண்ட கிராமவாசிகளின் கூட்டத்தில் ஒரு பகுதி. 4. திறப்பு விழா அன்று இரவு ஆயிரக்கணக்கானவர்களுக்கு அறுசுவை உண்டி அளிக்கப் பட்டது.

டார்கள். அந்தத் தண்ணீர் பாய்ந்து விளைந்த நெல்லை உபயோகிக்க மாட்டார்கள். தாங்கள் செய்த தருமத்தின் பயனைத் தாங்களே அநுபவிக்கக் கூடாது என்பதற்காக அப்படிப்பட்ட விரதத்தை அநுஷ்டித்து வருகிறார்கள். இப்படியாகப் பயன் கருதாது தொண்டாற்றுவதில் பெருமை கொள்ளும் கொங்குநாட்டுக் கவுண்டர் குலத்தைச் சேர்ந்தவர்களின் சரியான பிரதிநிதி முத்தாயிபாளையம் திரு மூ. மூ. சிற்றம்பலக் கவுண்டர் அவர்கள்.



முத்தாயிபாளையம் மூ. மூ. சிற்றம்பலம் அவர்கள் தலைவர்களை வரவேற்றுப் பேசுகிறார்.

திரு சிற்றம்பலம் அன்பும் பண்பும் நிறைந்த திருமதி சின்னம்மாளை வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார். திருமதி சின்னம்மாள் ஏழை எளியவர்களிடம் மிகுந்த இரக்கமும், உற்றார் உறவினர்களிடம் பாரபட்சமற்ற பிரியமும், கணவரிடம் மாறாத அன்பும் கொண்டவர். முப்பதாண்டுகள் முடிவதற்கு முன்னமே இரண்டு சின்னஞ் சிறு குழந்தைகளையும், திரு சிற்றம்பலத்தையும் இவ்வுலகில் தனியே தவிக்க விட்டு விட்டு அம்மை என்னும் கொடிய நோய்க்குப் பலியானார்.

மனைவியை இழந்த திரு சிற்றம்பலம் துடியாய்த் துடித்தார். தாயற்ற தம் குழந்தைகளின் ஏக்கம் நிறைந்த முகங்களைப் பார்த்துக் கண்ணீர் வடித்தார். திருமதி சின்னம்மாள் இருந்த இடத்தில் இன்னொரு பெண்ணைக் கொள்ள மறுத்தார். அந்த அம்மையாரின் நினைவாக, ஏதாவது நல்ல காரியம் செய்ய வேண்டும் என்று நினைத்தார்.

இந்தச் சமயத்தில் அவர் எண்ணம் உருவாகக் கூடிய ஒரு சம்பவம் நிகழ்ந்தது. கடந்த ஆறு ஆண்டுகளாகப் பருவ மழை பெய்யாதிருந்து, நாட்டில் நல்ல ஆட்சி ஏற்பட்ட பின் சென்ற ஆண்டில் அமோகமாக மழை பொழிந்ததும், நாடு செழித்ததும் உலகம் அறிந்தது தானே! அப்படிப் பெய்த பெரு மழையால் சில கெடுதல்களும் ஏற்பட்டன. கொங்கு நாட்டில் உள்ள குனத்துப் பாளையம் ஹரிஜன மக்கள் குடியிருந்த தெருவுக்குள் மழைத் தண்ணீர் புகுந்து விட்டது. அவர்களுடைய மண் குடிசைகள் இடிந்து விழுந்து விட்டன. வீடுகளை இழந்த ஹரிஜனங்கள் திரு சிற்றம்பலம் அவர்களிடம் வந்து முறையிட்டுக் கொண்டனர். எங்கேயாவது மேட்டுப் பாங்கான இடம் கொடுத்தால் அதில் குடிசை கட்டிக் கொள்வதாகச் சொல்லிக் கொண்டார்கள்.

அந்த ஏழைகளின் தீனக் குரலைக் கேட்டதும், திரு சிற்றம்பலம் அவர்களுக்கு, ஏழைகளிடம் மாறாத அன்பு காட்டும் தம் மனைவி சின்னம்மாளின் நினைவு வந்து விட்டது. தம் மனைவியின் ஞாபகார்த்தமாக அந்த ஏழை மக்களுக்கு வேண்டிய வீடுகளைத் தாமே கட்டிக் கொடுக்கத் தீர்மானித்தார். தாமே பாடு பட்டுச் சேர்த்து வைத்திருந்த பதினையாயிரம் ரூபாயைக் கொண்டு இந்தத் திருப்பணியைச் செய்ய எண்ணி, ஹரிஜனங்கள் சொன்ன நிபந்தனைகளையெல்லாம் நிறைவேற்றி, அவர்கள் மனம் திருப்திப் படும்படி அருமையான வீடுகளைக் கட்டிக் கொடுத்தார். மேற்கொண்டு ஆன செலவுகளுக்குக் கடன் வாங்கியும் செய்திருக்கிறார் என்று அறிந்தேன்.

1. கனம் மந்திரி திறப்பு விழாப் பிரசங்கம் நிகழ்த்துகிறார். மேடைமீது டாக்டர் ல. கி. முத்துசாமி, திரு ம. ப. பெரியசாமித் தூரன் முதலியவர்கள் அமர்ந்திருப்பதைக் காணலாம். 2. கொடுமுடி ஸ்ரீ சங்கர வித்யாசாலை எலிமெண்டரி ஸ்கூல் மாணவிகள் அபிநய நாட்டியம் ஆடி விழாவுக்குச் சிறப்பளித்தார்கள். ³. விழாவில் கலந்து கொண்ட மாபெரும் கூட்டத்தில் ஒருபகுதி.



சென்ற ஆண்டு ஈரோடு டாக்டர் திரு ல. இ. முத்துசாமி அவர்கள் சின்னம்மா புரத்துக்கு அடிப்படைக் கல் நாட்டினார்கள். தேச பக்தியும், தியாக உணர்ச்சியும், ஏழைகளிடம் அன்பும் அனுதாபமும் கொண்ட டாக்டர் முத்துசாமி இட்ட அடிப்படைக் கல் அப்படியே பூமிக்குள் அமுங்கிப் போகாமல் முப்பத்திரண்டு வீடுகள் கொண்ட அழகிய ஊராக மேலே வந்தது.

அந்த ஊராகிய சின்னம்மா புரத்தின் திறப்பு விழாதான் சென்ற மார்ச் இருபத்தோராம் தேதி ஆசிரியர் "கல்கி" அவர்கள் தலைமையில், கனம் மந்திரி வி. கி. பழனிசாமி கவுண்டரால் மிகச் சிறப்பாக நடத்தி வைக்கப் பட்டது. அச்சமயம் ஸ்ரீமதி சின்னம்மாளின் படம் ஸ்ரீ பெரியசாமித் தூரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.


சின்னம்மா புரம் திறப்பு விழா தமிழ் நாட்டின் பண்போடு, அன்பு உணர்ச்சியோடு, உற்சாகம் பொங்கிப் பெருக மங்களகரமாக நடந்தது!

அந்தப் புதிய ஊருக்கு முன் புறத்தில் சுமார் பத்தாயிரம் பேர் உட்காரக் கூடிய பந்தல் அமைத் திருந்தார்கள். பந்தலுக்கு முன்னால் வாழை மரங்களும் தோரணங்களும், வரவேற்பு வளைவுகளும் கட்டி அலங்கரித்திருந்தார்கள். பந்தலுக்கு மேலே நமது தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது. வந்தவர்களுக் கெல்லாம் சந்தனம் தாம்பூலம் வழங்கினார்கள்.

சின்னம்மா புரத்தைச் சுற்றிலும் மூன்று நான்கு மைல் தூரத்துக்கு ஊரே தென்பட வில்லை. இருந்தும் மாலை மூன்று மணிக்கே 'சுள்' ளென்று எரிக்கும் வெய்யிலையும் பொருட் படுத்தாமல் சுற்று வட்டாரங்களில் இருந்தும், இன்னும் தூரத்தில் உள்ள கிராமத்தில் இருந்தும், மக்கள்



சின்னம்மாபுரத்தில் வசிக்கும் பாக்கியம்பெற்ற ஒரு ஹரிஜனக் குடும்பம்



விழாவில் கலந்துகொண்ட மூவர். (1) திரு மீனாட்சிசுந்தர முதலியார், (2) டாக்டர் ல. இ. முத்துசாமி. (3) திரு கே. எஸ். பெரியசாமி.

மோட்டார் காரிலும், மாட்டு வண்டியிலும், குதிரை வண்டியிலும் கால் நடையிலுமாக வந்து கூடி யிருந்தனர். ஆண்களும் பெண்களும் சட்டை அணிந்தவர்களும், சட்டை அணியாதவர்களுமாகப் பலதிறப்பட்ட மக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் வந்து கூடி யிருந்தனர்.

தலைவர்கள் வாசலுக்கு வந்தவுடன் தாரை, தப்பட்டை, கொம்பு, மேளம் முதலிய வாத்தியங்கள் வெற்றி முழக்கம் செய்ய, திரு சிற்றம்பலம் அவர்கள் கூப்பிய கரங்களுடன் அடக்கமே வடிவாக நின்று தலைவர்களை வரவேற்றார்.

மேடைமீது விழாத் தலைவர் கல்கி ஆசிரியரும், கனம் மந்திரி பழனிசாமிக் கவுண்டரும், திரு ம. ப. பெரியசாமித் தூரனும் பலத்த கரகோஷத்துடன் வந்து அமர்ந்தார்கள்.

கொடுமுடி ஸ்ரீ சங்கர வித்யாலயா எலிமெண்டரி பாடசாலை மாணவிகளான குமாரி கே. ஆர். ராஜலக்ஷ்மி, குமாரி கே. பி. கே. பிரேமாவதி ஆகிய மாணவிகள் பிரார்த்தனை கீதம் பாடினார்கள். அவர்களுடன் சேர்ந்து இன்னும் சில மாணவிகள் திருமதி சின்னம்மாளின் இனிய பண்புகளைக் குறிப்பிட்டு இயற்றி இருந்த அழகிய பாடலைப் பாடிக் கொண்டு அபிநயத்துடன் வெகு அழகாக நடனம் ஆடினார்கள்.

முத்தாயி பாளையம் திரு மு. மு. சிற்றம்பலம் அவர்கள் தலைவர்களை வரவேற்று ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார். தாம் தம்முடைய மனைவியின் ஞாபகார்த்தமாக "சின்னம்மாபுரம்" என்ற ஊரை அமைத்த காரணத்தை விளக்கினார். அதற்காகத் தாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளைக் கூறி, அதற்கு எல்லா வகையிலும் உதவி புரிந்த தம் சகோதரர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். அவருடைய அருமைப் புதல்வர்களான இரண்டு சிறுவர்களும் தலைவர்களுக்கு


ஏப்ரல்
9 ம் முதல்
இல்லறஜோதி
மாடர்ன் தியேட்டர்ஸ்
தயாரிப்பு...

மாலைகள் அணிவித்துத் தங்கள் மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர்.

விழாத் தலைவரின் தலைமையில் பிரமுகர்கள் புடைசூழ மந்திரி கனம் பழனிசாமிக் கவுண்டர் சின்னம்மா புரத்துத் தலை வாசலில் உள்ள சின்னம்மா மணி மண்டபத்துக்கு வந்தார். அங்கு சம்பிரதாய முறையில் கட்டி வைத்திருந்த நாடாவைக் கத்தரிக்கோலால் கத்தரித்துச் சின்னம்மா புரத்தைத் திறந்து வைத்தார்.

சின்னம்மா மண்டபத்தில் பெரிய அளவில் வைத்திருந்த திருமதி சின்னம்மாள் படத்தைத் திரு ம. ப. பெரியசாமித்தூரன் திறந்து வைத்தார். திருமதி சின்னம்மாள் சாந்தமே உருவமாக, முகத்தில் கருணை ததும்ப, கண்களில் அன்புச் சுடர் வீச அமர்ந்திருப்பதைப் பார்க்கும் போது, பக்தியும் மரியாதை உணர்ச்சியும் மேலிட்டு வணக்கம் செய்யத் தோன்றியது.

பிறகு சின்னம்மா புரத்தில் வசிக்கப் போகும் ஹரிஜனங்களும், ஸ்ரீ பழனிசாமிக் கவுண்டரும், இதர தலைவர்களும் ஊருக்குள் புகுந்து சென்று ஒவ்வொரு வீடாகப் பார்த்தார்கள். வீட்டுப் புறவடையில் வைத்திருந்த தென்னம் பிள்ளைகளைக் கூர்ந்து பார்த்தார்கள். "அடாடா! கிருகதானம் என்றால் இப்படி அல்லவா செய்ய வேண்டும்!" என்று வாய் விட்டுப் புகழ்ந்தார்கள். பின்னர் எல்லோரும் திறப்பு விழாப் பந்தல் மேடைக்குத் திரும்பி வந்தார்கள்.

ஸ்ரீ பழனிசாமிக் கவுண்டர் திரு சிற்றம்பலம் அவர்களின் தாராளத்தையும், அவர் மனைவியின் பெயரால் சின்னம்மா புரம் என்ற ஊரை அமைத்து ஏழை ஹரிஜனங்களுக்கு வழங்கிய பெருந்தன்மையையும் பாராட்டினார். இது போல் ஒவ்வொரு கிராமத்தில் உள்ளவர்களும் ஒன்று சேர்ந்து சேரி வாழ் மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தால் ஹரிஜனங்களின் நிலை உயரும், அதற்குச் சர்க்காரும் உதவி புரிவார்கள் என்றார்.

ஸ்ரீ பெரியசாமித் தூரன் தாமும் ஸ்ரீ சிற்றம்பலமும் பால்ய வயதில் பழகிய சம்பவங்களை ரஸமாக எடுத்துச் சொன்னார். ஸ்ரீமதி சின்னம்மாளின் சிறப்பை எடுத்துச் சொல்லும்போது உணர்ச்சி மேலிட்டால் அவர் உதடுகள் துடித்தன. வார்த்தைகள் திக்கித் திக்கி வந்தன. "ஒரு நாட்டு மன்னன் தம் மக்களின் நலனுக்காகக் கிணறு வெட்டினான். பாதாளம் வரையில் தோண்டியாகி விட்டது. தண்ணீர் வரவில்லை. அதே கவலையால் படுக்கையில் படுத்திருந்தான். கனவில் நாக கன்னிகை தோன்றி 'உன் மனைவியை நாக கன்னிகைக்குப் பலியிடு! கிணற்றில் தண்ணீர் ஊறும்' என்றாள். இதைத் தம் மனைவியிடம் எப்படிச் சொல்ல முடியும் என்று மன்னன் தவித்தான். மன்னனின் மனத்தை அறிந்த மகாராணி தாமே கிணற்றில் இறங்கி நாக கன்னிகைக்குப் பலியானாள். கிணற்றில் தண்ணீர் ஊறியது. மக்களின் தண்ணீர் பஞ்சமும் நீங்கியது" என்ற கதையை உருக்கமாகச் சொல்லி, அந்த மகாராணியின் தியாகத்துக்குத் திருமதி சின்னம்மாளின் உயர்ந்த பண்பை ஒப்பிட்டுக் கூறினார்.

ஈரோட்டில் அரிய கல்வித் திருப்பணி செய்து வருகிறவரும் அருள் நெறித் திருக் கூட்டத்தின் தலைவருமான திரு மீனாட்சிசுந்தர முதலியார் அவர்கள் பின்னர் ஆசி உரை வழங்கினார். திரு

## தேசபக்தரின் பிரிவு

தமிழ்த் தாயின் தலைசிறந்த புதல்வர்களில் ஒருவரும் தேசபக்த வீரருமான பாகனேரி திரு எஸ். ஓ. எஸ். பி. உடையப்பா அவர்கள் காலமான செய்தி நம்மைப் பெருந் துயரில் ஆழ்த்தியது.

திரு உடையப்பா அவர்கள் 1903-ம் ஆண்டில் பழம் பெரும் விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். இளம் பிராயத்திலேயே பொது வாழ்க்கையில் ஆர்வம் கொண்டார். 1926-ம் வருஷத்திலேயே காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து தேசிய இயக்கத்தில் ஈடுபட்டார். 1941-ம் ஆண்டில் காந்தி மகாத்மாவின் ஆசியோடு தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு ஆயிரம் ரூபாய் அபராதமும் ஆறுமாதம் கடுங்காவல் தண்டனையும் பெற்றார்.



1932-ம் வருஷம் சிவகங்கை தாலுகா போர்டுக்கும், இராமநாதபுரம் ஜில்லா போர்டுக்கும் போட்டியின்றி அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1949-ம் வருஷத்தில் ஜில்லா போர்டின் தலைவராகிப் பல அருமையான பணிகள் செய்தார். அவற்றில், பரமக்குடியில் வைகையாற்றுக்குக் கட்டப்பட்ட உடையப்பா பாலம் குறிப்பிடத் தக்கதாகும்.


1952-ல் நடந்த தேர்தலில் ஸ்தல ஸ்தாபனத் தொகுதி வோட்டர்கள் திரு எஸ். ஓ. எஸ். பி. உடையப்பா அவர்களை அபரிமிதமான வாக்குகளால் சென்னை மேல் சபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

திரு உடையப்பா அவர்கள் தமிழ்த் தொண்டில் மிக்க ஆர்வம் கொண்டவர். தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் டைரக்டராகப் பதவி யேற்றுத் தமிழ்ப் பணி புரிந்து வந்தார்.

இத்தகைய தேசபக்தரும், தமிழ் அறிஞரும், செயலாற்றும் திறன் படைத்தவருமான திரு உடையப்பா அவர்கள் இவ்வளவு இளம் வயதில் காலமானது தமிழ் நாட்டுக்கும், முக்கியமாகப் பாண்டிய நாட்டுக்கும் பெரு நஷ்டமாகும்.

ஸ்ரீ உ. சுப்பிரமணியம் முதலிய நாலு புதல்வர்களையும் இரு புதல்வியரையும் அருமை மனைவியாரையும் துயரக் கடலில் பரிதவிக்க விட்டுத் திரு உடையப்பா அவர்கள் மார்ச்சு மாதம் பதினோராம் தேதி இறைவன் திருவடியை அடைந்தார்.

அவருடைய பிரிவால் வருந்தும் அவர் குடும்பத்தாருக்கும் உறவினருக்கும் நண்பர்களுக்கும் நமது மனமார்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



மன்னார்குடி நகராட்சி மன்றத்தினர் நடத்தும் அகில இந்திய சுதேசி கைத் தொழில் பொருட் காட்சியை மார்ச் 21ல் சென்னை மதுவிலக்கு மந்திரி ஸ்ரீமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் திறந்து வைத்தார்கள். பொருட்காட்சியின் வெளித் தோற்றத்தையும், மதுவிலக்கு மந்திரி கண் காட்சியில் தபால் தந்தி இலாக்காவைப் பார்வையிடுவதையும், மேற்படி வைபவத்துக்கு விஜயம் செய்த பிரமுகர்களையும் மேலேயுள்ள படங்களில் காணலாம். போட்டோ: என். ராமகிருஷ்ணு

சிற்றம்பலத்தின் அரிய செயலைப் பழந் தமிழ் நாட்டின் பாரி வள்ளலின் செயலுக்கு ஒப்பிட்டு வாழ்த்தினார். மற்றும் திரு சுப்பிரமணியம், திரு காட்டராயன், குட்டப்பாளையம் திரு பெரிய சாமி ஆகியவர்கள் திரு மு. மு. சிற்றம்பலத்தின் வள்ளன்மையைப் பாராட்டிப் பேசினார்கள். அவர்கள் சகோதரர்களுக்குள் இருக்கும் ஒற்றுமையைப் போற்றி வியந்தார்கள். ஒரு நல்ல குடும்பத்துக்குத் திரு சிற்றம்பலம் சகோதரர்கள் எடுத்துக்காட்டு என்று புகழ்ந்தார்கள்.

கடைசியில் விழாத் தலைவர் கல்கி ஆசிரியர் தம் தலைமை உரையை நிகழ்த்தினர்.

"பாரி வள்ளல் அவன் முன்னோர்கள் வைத்துப் போன முந்நூறு ஊர்களையும் தானமாக வழங்கினன். ஆனால் திரு மு. மு. சிற்றம்பலம் அவர்களோ தாமே சம்பாதித்த பொருளைக் கொண்டு ஒரு ஊரையே கட்டி ஏழை ஹரிஜனங்களுக்கு வழங்கி யிருக்கிறார். சிற்றம்பலம் பாரியை விடச் சிறந்த கொடையாளியாகி விட்டார்" என்றார்.

"மனைவி இறந்து போனவுடன் அவள் ஞாபகார்த்தமாக இன்னொரு மனைவியை மணந்து கொள்வதுதான் எல்லாரும் செய்யும் காரியம். ஆனால் ஸ்ரீ சிற்றம்பலம் அவர்கள் தம் மனைவியின் பெயரால் ஒரு கிராமத்தையே கட்டி விட்டார். திரு சிற்றம்பலம் காட்டிய வழியை இன்னொருவர் பின்பற்ற முடியாது. ஆனால் பலர் சேர்ந்து தாலுகாவுக்கு ஒரு 'சின்னம்மாபுரம்' எழுப்பலாம். ஆனால் அதற்காகச் சர்க்கார் உதவியைத் தேட வேண்டியதில்லை. சர்க்கார் உதவி இல்லாவிட்டால் குறைந்த செலவில், நல்ல கட்டிடமாக வெகு விரைவில் கட்டி விடலாம்" என்று கூறியபோது சபையோர் சிரித்து மகிழ்ந்தனர்.

"ஸ்ரீ சிற்றம்பலம் அவர்களின் முன் யோசனையைப் பாராட்ட வேண்டும். ஒவ்வொரு வீட்டுக்கும் இரண்டு தென்னம் பிள்ளை வீதம் வைத்திருக்கிறார். தமிழ்நாட்டில் மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருப்பதால், தென்னை மரம் வளர்ந்த பின் அதில் என்ன விளையுமோ என்று யாரும் கவலைப் பட வேண்டியதில்லை" என்றபோது விழாப் பந்தல் அதிரச் சபையோர் கைகொட்டி மகிழ்ந்தனர்.


டாக்டர் திரு வ. கி. முத்துசாமி அவர்கள் நல்ல தமிழில் இந்த விழாவில் பங்கு கொண்ட எல்லாருக்கும் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

இந்த அபூர்வமான கிருகதான விழாவை முன்னிட்டு, அன்றிரவு ஆயிரக் கணக்கான ஏழை மக்களுக்கு அன்னம் வழங்கினார்கள்.

** ** **

கொங்கு நாடு எப்பொழுதுமே எல்லாக் காரியங்களிலும் முன்னணியில் இருந்து வருகிறது. சுதந்திரத்துக்கு முன் தேசிய இயக்கங்களில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டு வழிகாட்டியது. சுதந்திரம் பெற்றபின் ஆக்க வேலையில் முன்னணியில் நின்று ஜனநாயக சர்க்காரின் வளர்ச்சிக்கு நல்ல முறையில் வழி காட்டி வருகிறது. தங்கள் ஊரில் செல்லும் காவேரியின் நீர்வளத்தைத் தஞ்சைக்குத் தானம் வழங்கி விட்டுப் பாதாளத்திலிருந்து தண்ணீர் கொண்டுவந்து பயிர் செய்யும் பண்பு கொங்கு நாட்டின் பெருமைக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

ஸ்ரீ வினோபாஜி பூமிதான இயக்கம் ஆரம்பித்தார், விரைவிலேயே கிருகதான இயக்கம் தொடங்கப் போவதாக ஸ்ரீ ஜயப்பிரகாச் சொல்லி வந்தார். அவர் சொல்லி வந்ததைக் கொங்கு நாடு செயலில் காட்டி விட்டது. கிருகதான இயக்கத்தில் இந்தியாவுக்குத் தமிழ் நாடு வழிகாட்டியிருக்கிறது. இந்த அற்புதமான பணியைச் செய்து காட்டிய ஸ்ரீ மு. மு. சிற்றம்பலம் அவர்களுக்குத் தமிழ் மக்களின் சார்பாக நன்றி கூறுகிறேன். வாழ்க ஸ்ரீ மு. மு. சிற்றம்பலம்! வாழ்க அவருடைய மனைவியாரின் திருநாமம்!




## 4. தாமரை முகம்

சமுத்திரத்தைப் பார்த்த அதிசயமே பூபதிக்கு இன்னும் தீர வில்லை. அதற்கு இடையில் இந்தக் கப்பலையும் பார்த்ததும் பூபதிக்கு ஆச்சரியத்தால் மூச்சு நின்று விடும் போலிருந்தது. படகுகள் கப்பலை நெருங்கி நின்றதும் வீரர்கள் பூபதியை அப்படியே பிடித்துத் தூக்கிக் கொண்டு கப்பலில் ஏறினார்கள். மிகப் பெரிய அரண்மனை மாதிரி தோற்றம் அளித்த அந்தக் கப்பலின் உள்ளே போனதும் பூபதி அயர்ந்து போனான். தான் ஒரு கைதி என்பதே அவனுக்கு அடியோடு மறந்து போய் விட்டது.

ஆழ்கடலில் அந்தக் கப்பல் மிதக்கிறது என்பதையே அவனால் நம்ப முடிய வில்லை. அதிசய உணர்ச்சியுடன், திறந்த வாய் மூடாமல் கப்பலின் மேல் தளத்தில் நின்று பூபதி பார்த்துக் கொண்டிருந்தான்.

"தம்பி, தம்பி!" என்ற குரல் கேட்டுப் பூபதி திரும்பினான்.

"இதோ பார், சேனாபதி உனக்கு இந்தக் கப்பலில் நடமாடச் சுதந்திரம் அளித்திருக்கிறார். நீ இந்தக் கப்பலுக்குள் எங்கு வேண்டுமானாலும் போகலாம். ஆனால் உயிரோடு தப்பிச் செல்லும் முயற்சி மாத்திரம் செய்யாதே! ஜாக்கிரதையாக நடந்து கொள்!" என்று எச்சரித்தான் ஒரு வீரன்.

"ஐயா, இந்தக் கப்பல் எங்கே போகப் போகிறது? இந்தச் சேனாபதி யார்? தயவு செய்து இதை யெல்லாம் தெளிவாகச் சொல்ல மாட்டீர்களா?" என்று பூபதி மிகவும் தாழ்மையாகக் கேட்டான்.

"பூம், பூம்!" என்று மிகப் பெரிய தொனி கப்பல் மாலுமியின் அறையிலிருந்து வந்து, கப்பல் முழுவதும் பரவிக் கடல் ஓசையோடு எதிரொலி யிட்டது.

"தம்பி, உன்னோடு பேசிக் கொண்டிருக்க எனக்கு அவகாசம் கிடையாது. கப்பல் புறப்படப் போகிறது!" என்று சொல்லி விட்டு அவசரம் அவசரமாக அந்த வீரன் அங்கிருந்து ஓடினான்.

சில நிமிஷங்களுக் கெல்லாம் மீண்டும், "பூம், பூம்" என்று சத்தம் கேட்டது. உடனே கப்பல் நகர்ந்தது. பூபதிக்கு ஆனந்தம் தாங்க வில்லை.

நீலக் கடலில் எழும்பி எழும்பிக் குதிக்கும் அலைகளுக் கிடையில் அந்தப் பெரிய கப்பல் ஆடி அசைந்து கொண்டு செல்லுவது அவனுக்கு ஒரே ஆச்சரியமா யிருந்தது. கப்பலின் ஒவ்வொரு அறையையும் பார்வை யிட்டான் பூபதி. மாலுமியின் அறைக்குச் சென்று அவன் இயந்திரங்களை இயக்குகின்ற விதத்தையும் பார்த்தான்; கண்ணுக்கு எட்டிய வரையில் விரிந்து பரந்து கிடக்கும் நீலக் கடலையும், மாசு மறுவின்றி விளங்கும் நீல வானத்தையும் பார்த்தான்.

பூபதி கீழே இறங்கிப் பல அறைகளைப் பார்த்து விட்டு ஒரு பெரிய கூடம் போன்றிருந்த அறையில் நுழைந்தான். அங்கே சேனாபதி பல வீரர்களோடு உட்கார்ந்து கொண்டிருந்தான்.

பூபதியைப் பார்த்த சேனாபதி, "பூபதி, எங்கே வந்தாய்? சரி, உன்னுடைய குழலை எடுத்துக் கொஞ்சம் வாசியேன், கேட்கலாம்!" என்றான்.

பூபதி அவன் பேச்சைக் கவனியாதவன் மாதிரி மேலே போகப் புறப்பட்டான்.

“அடே, போக்கிரி பூபதி! என் வார்த்தையை லட்சியம் செய்யாமல் எங்கே போகிறாய்?” என்று சேனாபதி ஒரு அதட்டுப் போட்டான். இதைக் கேட்டதும் பூபதியின் நீர நெஞ்சமும் திடுக்கிட்டது. அப்பொழுது பூபதியை இரண்டு வீரர்கள் வந்து பிடித்துக் கொண்டு மாடிப்படி வழியாகக் கப்பலின் மேல் தளத்துக்கு அழைத்துச் சென்றனர். பூபதி ஏற்கனவே பார்த்த இடமல்ல இது. அழகான மண்டபம் போல அலங்காரம் செய்யப்பட்டு விளங்கியது.


சேனாபதியும் மற்ற வீரர்களும் வந்து அங்கே நடுநாயகமாக அமர்ந்தனர். பூபதிக்குச் சமிக்ஞை காண்பித்துக் குழல் வாசிக்கும்படி உத்தரவிட்டான் சேனாபதி.

பூபதிக்கு அவனைப் பார்த்ததுமே தனது அபாயகரமான நிலை நினைவுக்கு வந்துவிட்டது. அவன் மனம் வேதனைப்படத் தொடங்கியது. ஆனாலும் சேனாபதியின் கட்டளைக்குக் கீழ்ப்படியாவிட்டால் தனக்கு என்ன விபத்து நேருமோ என்ற எண்ணத்தில் குழலை எடுத்து வாசிக்கத் தொடங்கினான்.

ஒரு சின்ன மூங்கிற் குழாயை வைத்துக் கொண்டு இனிய குரல் எழுப்பி இசை பாடும் பூபதியை அந்த வீரர்கள் அதிசயத்துடன் பார்த்தார்கள்.

அவர்களில் ஒருவன் எல்லோரும் திடுக்கிடும்படியாக ஒரு காரியம் செய்தான். சட்டென்று எழுந்து பூபதியினிடம் போய் அவன் கையிலிருந்த குழலை வெடுக்கென்று பிடுங்கினான்; அடுத்த விநாடி அதைத் தன் வாயினால் ஊதத் தொடங்கினான். ஒருவித ஒலியும் அதிலிருந்து கிளம்பாமற் போகவே, எல்லோரும் சிரித்தனர்.

## ஸ்ரீமதி மிருணாளினி ஸாராபாயின் நடனம்



★ பாரத நாட்டுக் கலைகளில் பழம் பெரும் கலை பரத நாட்டியக் கலை. அது தமிழகத்தில் பெரிதும் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. இக் கலையின் உயர்வைச் சமீப காலத்தில்தான் நம் நாட்டின் பெரும்பாலோர் உணரலாயினர். ஏன், மேல் நாடுகளிலும் இதன் புகழ் பரவ ஆரம்பித்து விட்டது! இப்படி உலகம் முழுதும் இந்தக் கலைச் சிறப்பைப் பரவச் செய்யும் பெரும் பணியில் ஈடுபட்டிருப்பவர்களில் ஸ்ரீமதி மிருணாளினி ஸாராபாய் முக்கியமானவர்.

சமீப காலங்களில் ஸ்ரீமதி மிருணாளினி ஸாராபாய் சில புது நடனங்களைச் சேர்த்துக் கொண்டு மேடைகளில் நடனமாடிப் பொது மக்களின் பெரு மதிப்புக்கும், பாராட்டுக்கும் உரியவராகி வருகிறார். 'சரபேந்திர பூபால குறவஞ்சி' என்ற குறவஞ்சி நாடகத்தைக் குறிப்பிட வேண்டும். 'மதனவல்லி' என்ற நங்கையாகத் தோன்றி உள்ளத்தின் தாபங்களையெல்லாம் வெளியிடும்போது, ஸ்ரீமதி மிருணாளினி ஸாராபாய் கலையின் உச்சத்தை அடைந்து விடுகிறாராம்.



“மனுஷ்யன்' என்ற மற்றொரு நடன நிகழ்ச்சியையும் குறிப்பிட வேண்டும். இது கதகளி முறையைப் பின்பற்றியதாகும். மனிதன் பிறப்பு முதல் கடைசிவரை அடையும் பல்வேறு மாறுபாடுகளை இனிய இசையுடனும் நடனத்துடனும் மேடையில் சித்திரிக்கும் போது மயிர்க் கூச்செறிகிறதாம். இப்படிப் பலப் பல புதுமாதிரியான நடன நிகழ்ச்சிகளைப் புகுத்தி நடனக் கலைக்கு அரும்பணி புரிந்துவருகிறார் ஸ்ரீமதி மிருணாளினி ஸாராபாய். அவர் தொண்டு நாளுக்கு நாள் ஓங்குவதாக!

"என்னப்பா, நீ ஏதாவது மந்திரம் தந்திரம் போடுகிறாயா? இந்த வெறும் மூங்கில் குழாய் நீ ஊதினால்தான் ஊதுகிறது! எனக்குச் சிறிதும் ஊதமாட்டேன் என்கிறதே!" என்று பூபதியின் கையிலிருந்து குழலை வாங்கியவன் கேலியாகக் கேட்டான்.

பூபதி அவனுக்குத் தக்க பதில் சொல்ல வேண்டுமானால் அவன் கன்னத்தில் ஓர் அறை பலமாகக் கொடுக்க வேண்டும். இந்த வீரர்களுக்கு இடையில் அப்படிச் செய்ய முடியாதாகையினால், பூபதியின் உள்ளம் தாங்க முடியாத கோபத்தினால் கொதித்தது. அவன் உதடுகள் கோபத்துடன் என்னவோ முணு முணுத்தது.

இந்தச் சமயத்தில் சேனாபதி குறுக்கிட்டு, "அந்தக் குழலை அவனிடம் கொடுத்து விடு. அப்புறம் அவன் அழுதுவிடுவான்" என்று ஏளனமாகக் கூறினான். உடனே அவன் பூபதியிடம் குழலைக் கொடுத்தான்.

இந்த அவமதிப்புகளுக்கெல்லாம் பதில் கொடுக்க முடியவில்லையே என்ற சோக நிலையில் அவன் குழலை மீண்டும் எடுத்து வாசிக்க ஆரம்பித்தான்.

குழம்பிக் கிடந்த அவன் மனம் இன்ப நினைவில் செல்ல வில்லையாதலால் அவன் குழல் ஒரே சோக கீதமாகப் பொழிந்தது. அந்தக் கீதம் கேட்பவர்களின் இருதயத்தைக் கசக்கிப் பிழிந்தது; அந்தச் சூழ்நிலையையும் அங்கு வீசும் காற்றையும் சோக மயமாக்கியது; நரம்புகளில் புகுந்து நடுக்கம் கொள்ளச் செய்தது; எல்லோருடைய கண்களிலிருந்தும் கண்ணீர் ஆறாகப் பெருகி வழியச் செய்தது.

தன்னை மறந்து இசை வெள்ளத்தில் மூழ்கி யிருந்த பூபதியின் கவனத்தை 'டப்' பென்று கதவு திறக்கும் ஒரு சிறு ஓசை எழுந்து கலைத்தது. குழல் வாசித்துக் கொண்டே பூபதி ஓசை வந்த திசையை நோக்கி அண்ணாந்து பார்த்தான். நல்ல வேளையாக அந்தச் சத்தம் மற்றவர்கள் யாருடைய காதிலும் விழவில்லை. அங்கே தெரிந்த வட்ட வடிவமான சாளரத்தின் வழியாகச் செந்தாமரை மலர் போன்ற அழகிய பெண் முகம் தெரிந்தது; அவள் அழகிய கண்களில் கண்ணீர் வழிந்தது.

பூபதியின் குழல் இசை ஒரு கணம் நின்றது. அவன் பார்வை சாளரத்தின் வழியாகத் தெரிந்த முகத்தில் லயித்தது. மறு கணம் அவன் குழலில் பிறந்த இசையில் இன்பம் பொங்கிப் பெருகியது. கேட்பவர்களின் உடல்கள் சிலிர்த்தன. ஆனால் சேனாபதியின் முகம் மட்டும் கடுமையாக மாறி யிருந்தது.

"அடே, போதும். நிறுத்து, உன் இஷ்டத்துக்கு நீ குழல் ஊதக் கூடாது. எங்கள் மனப் போக்கை அநுசரித்துத் தான் குழல் ஊத வேண்டும்!" என்று கடுமையாகக் கூறிவிட்டு எழுந்து சென்றான். பூபதி அதிசயத்தோடு சாளரத்தைக் கவனித்துப் பார்த்தான். (தொடரும்)

# சேலம் பிரமுகரின் மறைவு

கொங்கு நாட்டுப் பிரமுகரும், கூட்டுறவு இயக்க ஸ்தாபனங்களில் பெரும் பங்கு கொண்டு தொண்டாற்றியவருமான கொங்கணாபுரம் திரு என். செங்கோட்டு வேலக் கவுண்டர் இதய நோயினால் மார்ச்சு மாதம் 18-ந் தேதி காலமானதை அறிந்து மிக்க வருந்துகிறோம்.



ஸ்ரீ செங்கோட்டு வேலக் கவுண்டர் பழம் பெரும் தேச பக்தர்; பழுத்த காங்கிரஸ்வாதி. சங்கரிதுர்க்கம் தாலூகா போர்டின் அங்கத்தினராகவும், சேலம் ஜில்லா போர்டின் அங்கத்தினராகவும் பல ஆண்டு காலம் பதவி வகித்துப் பணி யாற்றியவர்.

ஸ்ரீ செங்கோட்டு வேலக் கவுண்டரின் மூத்த புதல்வர் ஸ்ரீ கே. எஸ். அர்த்தநாரி சென்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகராக நின்று மாபெரும் வெற்றி யடைந்தவர். இன்று சென்னைச் சட்ட சபையில் ராஜாஜியின் திட்டங்களைத் தீவிரமாக ஆதரித்துச் சிறந்த முறையில் பணி ஆற்றி வருகிறவர். பெரிய மிராசுதார் என்ற முறையில் நிலவரி அதிகம் கொடுப்பவராக இருந்தும், ஐந்நூறு ரூபாய்க்கு மேற்பட்டு நிலவரி கொடுப்பவர்களுக்கு வரி விகிதம் உயர்த்துவதை வன்மையாக ஆதரித்தார். இதிலிருந்து இக்குடும்பத்தாரின் பொதுநலப் பற்றை நன்கு அறிந்து கொள்ளலாம்.

திரு. செங்கோட்டு வேலக் கவுண்டரின் பிரிவு சேலம் ஜில்லாவுக்குப் பெரும் நஷ்டமாகும். அவர் பிரிவால் வருந்தும் அவருடைய மூத்த குமாரர் கே. எஸ். அர்த்த நாரீசுவரக் கவுண்டர் எம். எல். ஏ. அவர்களுக்கும், மற்றும் அவருடைய குடும்பத்தினருக்கும் நம்முடைய மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தேடிவந்த தைலம்மை

சம்பந்தம்

அப்பொழுதுதான் 'மதுரை பார்சல்' வரும் சத்தம் கேட்டது. நாற்காலியில் அமர்ந்தபடியே தூங்கி வழிந்து கொண்டிருந்த ஸ்டேஷன் மாஸ்டர் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார்.

உடனே டிக்கட் கொடுக்கக் கதவைத் திறந்தார்; அங்கு ஒருவரையுமே காணோம். "நடேசா, அங்கு யாரோ தூங்கிக் கொண்டிருக்காப் போலிருக்கு, எழுப்பி விட்டு டிக்கட்டு வாங்கச் சொல்லு" என்று இங்கிருந்தபடியே இரைந்தார்.

அதற்குள் ரயில் வண்டி 'உஷ்' என்ற சத்தத்துடன் வந்து நின்றது.

அர்த்த ராத்திரியில் வரும் வண்டியில், ஸ்டேஷனில் யார் இறங்கப் போகிறார்கள்! ஒருவரும் இல்லை. வண்டியும் நகர்ந்தது.

உடனே ஸ்டேஷன் மாஸ்டர் உள்ளே வந்தார். தூரத்தில் நடேசன் விளக்குகளை அணைத்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது யாரோ ஒருவன் அவரை நெருங்கி வந்தான். "ஆமாம், ஆமாம்! அவர் மாதிரிதான் இருக்கிறது" என்று அவன் பின்னோடு தூங்கும் குழந்தையைத் தோளில் போட்டுக் கொண்டிருந்தவளும் சொல்லிக் கொண்டே வந்தாள்.

ஸ்டேஷன் மாஸ்டர் முகத்தைச் சுளித்துக் கொண்டே, "யாரப்பா, அது?" என்றார்.

"என் சார், பழைய போர்ட்டர் வடமலை. மறந்தே போயிட்டிங்களா!" என்று சிரித்தான் அவன். ஆள் வெள்ளை வேட்டியும் சட்டையுமா யிருக்கவே அவரால் புரிந்து கொள்ளவே முடிய வில்லை.

"ஆயுசு நூறுடா உனக்கு. உன்னைப் பற்றி இப்போதுதான் நினைத்தேன். வா, வா!" என்று அழைத்துக் கொண்டே ஸ்டேஷன் அறைக்கு வந்தார்.

"சௌகரியமாக இருக்கிறாயா? இந்தத் தடவை விளைச்சல் எல்லாம் எப்படி?"

"ஏதோ உங்க ஆசீர்வாதத்திலே சௌக்கியத்துக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை."

"சரி, என்ன விசேஷம்?"

"நம்ம அனுமந்த புரத்திலே குழந்தைக்கு முடி யிறக்குவதாகப் பிரார்த்தனை. அதற்காகத்தான் திடீரென்று புறப்பட்டோம்" என்று சொல்லிக் கொண்டே மேஜையின் மேல் ஒரு சிறு மூட்டையை வைத்து ஸ்டேஷன் மாஸ்டரிடம் நகர்த்தினான்.

"என்னடா, இது?"

"பச்சை வேர்க்கடலை யென்றால் உங்களுக்குப் பிரியமாச்சே என்று கொஞ்சம் கொண்டு வந்தேன்" என்றான்.

"எத்தனை ஞாபகமடா, உனக்கு!" என்று ஸ்டேஷன் மாஸ்டர் சிரித்துக் கொண்டார்.

"சரி, காலையிலேதானே புறப்படணும். போய்ப் படுத்துக்கோ" என்றார்.

"ஆகட்டும், ஐயா!" என்று சொல்லிக் கொண்டே, அவன் தன் மனைவியுடன் ஒதுப்புறமான இடத்துக்குச் சென்றான்.

அப்பொழுதுதான் வேலையை முடித்துக் கொண்டு நடேசன் அங்கு வந்து நின்றான். "வடமலையைப் பார்த்தாயாடா? தினம் டிக்கட் இல்லாமல் இறக்கி விட்டவர்களோடு ஒரு நாள் அந்தப் பெண்ணும் இறங்கி யிருக்கிறாள். கண்டதும் காதலாகி விட்டதுபோலிருக்கு. முதல் காரியமாகச் சந்தடி செய்யாது அவளை அழைத்துக் கொண்டு போய்த் தன் வீட்டிலிருந்த அம்மாவிடம் ஒப்படைத்து வந்து விட்டான். அப்புறம் அவளையே கலியாணம் பண்ணிக் கொண்டு, வேலையையும் ராஜினாமா பண்ணிவிட்டுப் போயே போய் விட்டான்" என்று சுருக்கமாய்ச் சொன்னார்.

அதையே உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த வடமலை, "சார், அப்படியில்லைங்க! நானும் உங்களிடம் உண்மையைச் சொல்லணும் என்று இருந்தேனே யொழிய, அதைச் சொல்லாமலேயே போய் விட்டேன்" என்று இரைந்து பேசிக் கொண்டே எழுந்து வந்தான். கதவின் பக்கத்தில் நின்று கொண்டே சொல்லத் தொடங்கினான்.

"தைலம்மை என் முறைப் பெண்ணுங்க, என் மாமாவின் பெண் அவள்."

"அட! அப்படியா அது!"

"ஆமாம், அவள் சின்ன வயதா யிருந்த போதே தாயை இழந்தாள். அவள் தந்தை மறு கலியாணம் செய்து கொண்டார்.

"தைலம்மையின் சித்தி பொல்லாதவள். சிறுகச் சிறுக சொத்தைச் சுருட்ட ஆரம்பித்தாள். தன் தாயாரின் வீட்டுக்கு எல்லாவற்றையும் அனுப்பி வைத்தாள்.

"இதெல்லாம் எனக்குத் தெரியுந்தான். நான்தான் தைலம்மையின் சித்தி அடியெடுத்து வைத்ததி லிருந்து அங்கு போவதே கிடையாதே! ஆனால் தவறாமல் அம்மாவோடு சந்தைக்கு மாத்திரம் போய்க் கொண்டிருந்தேன். அங்கு தைலம்மையும் வந்திருப்பாள். நாங்கள் தனிமையில் வெகுநேரம் வரை சிரித்துப் பேசுவோம். மாமாவுக்குத் தனிமையில் யோசனை சொல்லும்படி, தைலம்மையிடம் சொல்லி யனுப்புவேன். அவள் பிரியா விடை பெற்றுச் செல்வாள்.

"தைலம்மையின் சித்திக்கு ஊரிலிருந்த தன் தம்பிக்குத் தைலம்மையை முடிச்சுப் போட்டு வைத்தால் சொத்தெல்லாம் தம் குடும்பத்தோடு சேர்ந்து விடும் என்று அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்தாள்.

"இதைக் கேட்ட தைலம்மை என்னிடம் வந்து அழுதாள். 'கலியாணம் ஏற்பாடாகட்

டும். நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று தைரியம் சொல்லி அனுப்பி வைத்தேன்.

"கலியாணத்துக்கு நான் குறித்து அவள் சித்தி எல்லா ஏற்பாடுகளும் செய்து வந்தான். இதை அறிந்த தைலம்மை கலியாணத்துக்கு இரண்டு தினங்களுக்கு முன்னதாகவே ரயிலேறி என்னைத் தேடி வந்து விட்டாள்" என்று கூறி முடித்தான் வடமலை.

"இல்லைங்க ஐயா, அவர் சொல்கிறதும் சரியில்லை. இத்தனை நாளாகியும் இன்னும் நானே நடந்த உண்மையை அவருக்குக் கூடச் சொல்லவில்லை" என்று சொல்லிக் கொண்டே தைலம்மை எழுந்து வந்தாள்.

அடக்க ஒடுக்கமாய், முந்தானையை யெடுத்து இடுப்பில் செருகிக் கொண்டு தைலம்மை சொல்லத் தொடங்கினாள்:

"அத்தானின் வார்த்தைகள் என மனத்திற்குத் தைரிய மூட்டவில்லை. கலியாணத்துக்கு நாள் நெருங்க நெருங்க என் மனம் அல்லோல கல்லோலப்பட்டது. ஒரு நாள் என் உயிரையே மாய்த்துக் கொள்ளத் தீர்மானித்துக் குளக்கரையை நோக்கிப் புறப்பட்டு விட்டேன். அந்த நள்ளிரவிலும் எனக்கு முந்திக் கொண்டு அங்கு ஒருத்தி வந்து விசித்துக்கொண்டிருந்தாள். 'யாரது?' என்று கேட்டுக் கொண்டே அருகில் சென்றேன். 'ஆ! தைலம்மையா?' என்று என்னைக் கட்டிக் கொண்டு அழுதாள் என் சிநேகிதி பொன்னம்மாள். 'உன் சித்தி தன் தம்பிக்கு உன்னைக் கல்யாணம் முடிக்கப் போகிறாளாமே? அப்படி யென்றால் நானும் அவரும் மாரியம்மன் கோவிலில் கையடித்துச் சத்தியம் செய்து கொண்டிருக்கிறோமே அது என்ன ஆகிறது?' என்று தேம்பித் தேம்பி அழுதாள்.

"எனக்கும் அழுகை அமோகமாய் வந்து விட்டது. என் உள்ளத்தை நானும் திறந்து காட்டினேன். 'ஆ! அப்படி யென்றால் இந்தக் கலியாணத்தை நீ விரும்ப வில்லையா? அப்படி யென்றால் நாம் இருவரும் உயிரை மாய்த்துக் கொள்வானேன்! நானே இதற்கொரு ஏற்பாடு செய்கிறேன்' என்று எனக்குத் தைரிய மூட்டினாள் பொன்னம்மாள்.

"மறுநாள் மாலை நான் எதிர் பாராவிதமாக என் சித்தியின் தம்பியைச் சந்தித்தேன். 'வருத்தப்படாதே, தைலம்மை. கலியாண ஏற்பாடெல்லாம் நடக்கிறபடி நடக்கட்டும். நெருக்கத்தில் நானே உன்னை அழைத்துக் கொண்டு போய் உன் அத்தானிடம் சேர்த்து விடுகிறேன்' என்று எத்தனையோ மரியாதையாகச் சொல்லிச் சென்றார்.

"வார்த்தை தவறாமல் என் சித்தியின் தம்பி கலியாணத்துக்கு இரண்டு தினங்களுக்கு முன் யாருக்கும் தெரியாமல் என்னை ரயிலில் அழைத்து வந்து இங்கு இறக்கிப் போனார்" என்று முடித்தாள் தைலம்மை.

இதைக்கேட்ட வடமலை வியந்து போனான்.

அதற்குள் 'எக்ஸ்பிரஸ் வண்டி' வரும் சத்தம் கேட்டது. ஸ்டேஷன் மாஸ்டர் அங்கிருந்து எழுந்து சென்றார்.

# யோகாசன சிகிச்சை

**வி. என் குமாரஸ்வாமி**

## 15. கனிப் பொருள்கள்

நமது தேகத்திலே பதினேழுக்கு மேற்பட்ட கனிப் பொருள்கள் இருக்கின்றன. இவைகளெல்லாம் எந்த அளவுக்கு இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு இருந்தால்தான் உடல் ஆரோக்கியமாகவும், பலமாகவும் இருக்கும். தினசரி நாம் உழைப்பதிலும், மற்றும் வியர்வை, மலம், நீர் மூலமாகவும் இந்தத் தாது உப்புக்கள் கழிக்கப் படுகின்றன. அப்படிக் கழிந்த கனிப் பொருளை நாம் உணவின் மூலம்தான் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். எந்தெந்த உணவில் எவ்வளவு இருக்கிறது, தினசரி நம் உடலுக்கு எந்த அளவு தேவை, அவ்வாறு நம் தினசரி உணவில் மேற்படி கனிப் பொருள்கள் வேண்டிய அளவு சேரா விட்டால் என்ன குறை உண்டாகும் என்பதை அறிய வேண்டும்.

நமது உடலில் பதினேழு வகைக் கனிப் பொருள்கள் இருந்தாலும், அவைகளில் சுண்ணாம்புச் சத்து, எரியம், இரும்பு, அயோடின் ஆகிய இந்நான்கு கனிப் பொருள்கள்தான் முக்கியமானவை. இந் நான்கு பொருள்களும் தினசரி உணவில் நமது உடலுக்கு வேண்டிய அளவு உட்கொண்டால் மற்ற கனிப் பொருள்கள் இருக்க வேண்டிய அளவு இருந்து விடும்.

சுதயம் :—சாதாரணமாய், சுமாராக நமது தேகத்தில் இரண்டு ராத்தல் சுண்ணாம்புச் சத்து இருக்கிறதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த இரண்டு ராத்தல் சுண்ணாம்புச் சத்தில் நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது சத விகிதம் எலும்புகளில் இருக்கின்றன.

தினசரி நமக்கு வேண்டிய அளவு: முதியோர்களுக்கு, எட்டு கிராம் நிறை ஆகும். அதாவது ஐந்தில் நான்கு பங்குள்ள கிராம். வளரும் குழந்தைகளுக்கு ஒன்று முதல் ஒன்றரை கிராம் தேவை. குழந்தைகள் வளருவதால் முதியோர்களை விட இரண்டு மடங்கு தேவைப் படுகிறது. அப்படி அதிகம் கொடுக்கப் பட்டால்தான் குழந்தைகள் நன்கு வளருவார்கள். இல்லையானால் வளர்ச்சியிராது. எலும்பு பலப் படாது. ஸ்திரீகளுக்குக் கர்ப்ப காலத்திலும், பால் கொடுக்கையிலும், ஒன்றரை கிராம் முதல் இரண்டு கிராம் வரை தேவை. இவர்கள் மற்றொரு ஜீவனையும் போஷிக்க வேண்டி இருப்பதால் அதிகம் கொடுக்க வேண்டும். இல்லையானால் தாய்க்குச் சுண்ணாம்புச் சத்து குறைந்து பலவீனமாய் விடும்.

இந்த அளவு தினசரி உட்கொண்டால்தான் எலும்புகளும், பற்களும் நல்ல பலமாய் இருக்கும். இல்லை யானால் எலும்புகள் வளையவும் குழி விழவும் செய்யும். பற்கள் சொத்தையாகும். பல் சோனாறுகள் பல உண்டாகும். எலும்புகள் வளைவதற்குக் கால்ஷியமும், பாஸ்பரஸூம், வைடமின் 'டி'யும் கொடுத்து வந்தால் எலும்பு நல்ல உறுதியடையும். சில குழந்தைகளுக்குக் கால் எலும்பு வளைந்திருக்கும். சில குழந்தைகளைத் தூக்கினால் எலும்பு வளைந்து கொடுக்கும். அவர்களுக்குப் போதுமான சுண்ணாம்பும், பாஸ்பரஸூம் வைடமின் 'டி'யும் உணவில் சேரவில்லை என்று தெரிய வேண்டும். இப்பேர்ப்பட்ட குழந்தைகளுக்கு மேற்படி கால்ஷியமும், பாஸ்பரஸூம் வைடமின் 'டி'யும் கலந்த உணவைக் கொடுத்து வந்தார்களானால் எலும்பு உறுதிப்படும்.

இரத்தத்தில் போதுமான சுண்ணாம்புச் சத்து இல்லையானால், இரத்தம் நீர்த்து இருக்கும். எங்காவது ஒரு இடத்தில் அடிபட்டு இரத்தம் ஒழுகினால் தன் பாட்டுக்குப் போய்க் கொண்டேயிருக்கும். நிற்காது. அதனால் உயிருக்கே ஆபத்து வரும். சுண்ணாம்பு போதுமான அளவு உட்கொண்டால் இரத்தம் உறையும். சொறி, சிரங்கு, இருமல், க்ஷயம் மற்றும் பல நோய்களுக்குச் சுண்ணாம்புச் சத்துள்ள மாத்திரைகளைச் சாப்பிடுவார்கள். அப்படி மாத்திரைகளைச் சாப்பிடுவதை விடுத்து எந்தெந்த வஸ்துவில் எவ்வளவு சுண்ணாம்பு இருக்கிறது என்று தெரிந்து அம்மாதிரி வஸ்துக்களை அதிகமாக உணவில் சேர்த்து வந்தோமானால் இந்தக் கால்ஷியம் மாத்திரைகளை வாங்க வேண்டிய அவசியமில்லை. மருந்தின் பேரால் வெளிநாடுகளுக்குச் செல்லும் பணமும் மிச்சமாகும்.

ஆனால், இம்மாதிரி மாத்திரைகளைச் சில சமயம் அவசியமானபோது உபயோகிக்க வேண்டியதாய்த்தான் இருக்கும். நோயாளி சுண்ணாம்புச் சத்து குறைவால் வாடுகிறான். மற்ற கால்ஷிய சத்துள்ள ஆகாரம் கொடுத்தால் அதனை அந்தச் சமயம் ஜீரணித்துக் கொள்ளச் சக்தியில்லை என்ற நிலையிலுள்ள நோயாளிகளுக்கு அவசியம் கால்ஷிய மாத்திரை வேண்டியதுதான். இதுவே வேறு பல வைடமின் மாத்திரைகளுக்கும் பொருந்தும்.

ஆனால், டாக்டர்கள் பெரும்பாலும் மாத்திரைகளை விழுங்கச் சொல்லி எழுதித் தருவார்களே தவிர, இன்ன சத்து, இன்ன ஆகாரத்தில் இருக்கிறது, அதைச் சாப்பிடு என்று சொல்லுவதில்லை. ஏதோ சில உண்மையுள்ள இருதயம் படைத்த டாக்டர்கள் சொல்லுவார்கள். சுண்ணாம்புச் சத்து போதுமான அளவு உடலில் இருக்கப் பார்த்துக் கொண்டால் போதும். மற்றக் கனிப் பொருள்கள் தத்தம் அளவில் இருந்து கொள்ளும். இந்தச் சுண்ணாம்புச் சத்து இருதயத் துடிப்பையும் ஒழுங்குபடுத்த உதவுகிறது.

சுண்ணாம்புச் சத்து இருக்கும் வஸ்துக்களைக் கீழே பாருங்கள். 100 கிராம் அதாவது 3½ அவுன்சு எடையுள்ள கீழ்க்கண்ட பொருளில் எவ்வளவு கால்ஷியம் இருக்கும் என்பதைக் குறித்திருக்கிறது.

எள்ளு கிராம் 1-45, அகத்திக் கீரை கிராம் 1-13, கருவேப்பிலை கிராம் 0-81, கீரைத்தண்டு கிராம் 0-50, முருங்கைக் கீரை கிராம் 0-44, சுண்டைக்காய் வற்றல் கிராம் 0-37, கேழ்வரகு கிராம் 0-33, பாதாம் பருப்பு கிராம் 0-23, பொன்னாங்கண்ணி கிராம் 0-51, மணத்தக்காளி கிராம் 0-41, ஐந்து ஆழாக்குப் பால் கிராம் 1-0.

மேற் சொன்ன இத்தனை பொருள்களும் நாம் சாதாரணமாய்ச் சாப்பிடக் கூடியவைகளே.

துர் அதிர்ஷ்ட வசமாய் நாம் எல்லோரும் அரிசியையே பிரதான உணவாய்ச் சாப்பிடுபவர்களாய் இருக்கிறோம். அதிலும் இயந்திரத்தில் நன்கு தீட்டிய அரிசிதான் பெரும்பாலும் உபயோகிப்பது. அதில் சுண்ணாம்புச் சத்தின் அளவு வெகு சொற்பம். 0-01 அளவுதான் இருக்கிறது. கேழ்வரகைச் சாப்பிடுபவர்கள் அரிசியை விட முப்பத்தி மூன்று தடவை சுண்ணாம்புச் சத்தைப் பெறுகிறார்கள். எனவே நாமும் அடிக்கடி கேழ்வரகைச் சேர்த்து வந்தால் நல்லது. கேழ்வரகு என்றால் நம்மவர்

களுக்கு அது மட்டமாய்ப் படுகிறது. ஆனால் கேழ்வரகைச் சாப்பிடும் ஏழைகள் திடமாக இருக்கிறார்கள். அதனால் தான் அவர்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகிறது.

கேழ்வரகு மாவையும், அரிசி நொய்யையும் கூழ் செய்து மறுநாள் தயிர் கலந்து உப்பு போட்டுச் சாப்பிட்டால் திவ்யமாய் இருக்கும். நமது உஷ்ண நாட்டுக்கு வெகு நல்ல ஆகாரம். நாம் தினசரி சாப்பிடா விட்டாலும் வெய்யில் காலத்திலாவது சாப்பிடலாம். கேழ்வரகு அடை செய்து சாப்பிடலாம். கேழ்வரகு மாவுடன் வெல்லம், தேங்காய், வாழைப் பழம் இவைகளைப் போட்டுப் பிசைந்து அடை செய்தால் இன்னும் நாலு கொண்டு வா என்று கேட்கும். தயிர் விட்டுக் களி செய்து சாப்பிடலாம். இம்மாதிரி எத்தனையோ செய்து சாப்பிடலாம்.

முருங்கைக் கீரைப் பிரட்டலில் எள் பொடி செய்து போட்டுச் சாப்பிட்டால் கால்ஷியம் நிறையக் கிடைத்து விடும். முருங்கைக் கீரையிலும் கால்ஷியம் இருக்கிறது. எள்ளிலும் நிறைய இருக்கிறது. இரண்டையும் கலந்து சாப்பிடுவதில் இரண்டத்தனை கால்ஷியம் கிடைத்து விடுகிறது. இதைத் தவிர, முருங்கை மரத்திலிருந்து ஒரு அற்புத மருந்தை எடுக்க முடியுமென்று பெங்களூர் இந்திய விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம் கண்டு பிடித்திருக்கிறது. அது பெனிஸிலினைப் போல் டைபாயிட், நிமோனியா, க்ஷயம், வயிற்றிரைச்சல் முதலிய வியாதிகளுக்குக் காரணமான நுண்ணிய கிருமிகளைக் கொல்ல வல்லதாம். எனவே, முருங்கைக் கீரை சாப்பிட்டால் இவ்வியாதிகளெல்லாம் வராமலாவது இருக்குமல்லவா! மணத்தக்காளி ஒரு சிறந்த ஒளஷதம். இதையும் அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால், சுண்ணாம்புச் சத்து கிடைப்பதுடன், வயிற்றில் புண் இருந்தால் ஆறும். வீரியம் அதிகமாகும். அகத்திக் கீரையைச் சிலர் சாப்பிடமாட்டார்கள். ஏன் சிலர் கீரை தினுசுகளை மட்டமென்று ஒதுக்குவார்கள். மற்ற காய்கறிகளை விடக் கீரைகள் மிக்க சிலாக்கியமானவை. அதிலும் அகத்திக் கீரை மிக உத்தமமானது.



"கையில் வலியா? வெறும் 'கேஸ்வாயுவா' யிருக்கும் பயப்படாதீங்க!"

"வெறும் 'கேஸ்வாயு' இல்லீங்க. அது வக்கீல் வாயுங்க! கேஸ் ஜெயித்து விட்டது என்று என் வக்கீல் கை குலுக்கிறார்."

கருவேப்பிலையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். நமது தென்னாட்டுச் சமையலில் கருவேப்பிலையைத் தாளிக்காத சமையல் வகையே யில்லையெனலாம். கருவேப்பிலை துவையல் செய்வார்கள். மிக அருமையாயிருக்கும். கீரைத் தண்டு இருக்கவே இருக்கிறது. அரையணா போட்டு ஒரு கட்டு வாங்கினால் பத்துப் பேர் சாப்பிடலாம். ஏழைகளுக்கு ஏற்ற உணவு. சுண்டைக்காய் வற்றல், பச்சை சுண்டைக்காய் இவையெல்லாம் அடிக்கடி உபயோகிக்க வேண்டியவை. ஆனால் நாகரிகமாய்த் தோன்றாது. எனினும் பழைய காலத்து ஆட்களுக்கு இதன்மேல் அலாதி பிரியந்தான். பொன்னாங்கண்ணி ஒரு ஒளஷதமாகும். பருப்புப் போட்டுக் கூட்டு செய்யலாம். பருப்பும் தேங்காயும் போட்டுப் பொரியல் செய்தால் திவ்யமாயிருக்கும். பாதாம் பருப்பு பணக்காரர்களுக்கு ஏற்றது. அதில் மற்றவைகளை விட குறைந்த அளவு சுண்ணாம்புச் சத்து இருக்கிறது. ஆனால் உயர் ரகமான புஷ்டி தரக் கூடியது; நரம்புகளை உறுதியாக்குவதிலும் சிறந்தது.

இம்மாதிரி மேற் சொன்ன வகையில் தினசரி ஒன்றையோ இரண்டையோ சேர்த்துக் கொண்டு வந்தால் நமக்கு வேண்டிய சுண்ணாம்புச் சத்து தானாகவே கிடைத்து விடும். பால் ஒரு சிறந்த ஆகாரம். அதில் எல்லா சத்துக்களும் நிறைந்திருப்பது போல சுண்ணாம்புச் சத்தும் இருக்கிறது. அதையும் கால்படி முதல் அரைப்படி வரை ஒருவர் தினம் உபயோகித்து வரலாம்.

இவைகளெல்லாவற்றைத் தவிர, நமது நாட்டில் மற்றொரு நல்ல பழக்கம் இருக்கிறது. அதுதான் வெற்றிலை போடும் பழக்கம். இது எப்படியோ நமது நாட்டில் பரவலாக வழக்கமாய் விட்டிருக்கிறது. இது மங்களகரமான சின்னமாகவும், மரியாதைக்குரிய பொருளாகவும் அமைந்து விட்டிருக்கிறது. இவைகளை யெல்லாம் நினைத்துப் பார்த்தால் நமது பெரியோர்கள் எவ்வளவு முன் யோசனையுடன் இவைகளை யெல்லாம் பழக்கப் படுத்தி விட்டிருக்கிறார்கள் என்று ஆச்சரியப் படாமலிருக்க முடியாது. சாப்பிட்டவுடன் தாம்பூலம் போடும் பழக்கம் இருக்கிறது. யாராவது வந்தால் தாம்பூலம் வைத்துக் கொடுக்கிறோம். விசேஷ காலங்களில் முதலில் தாம்பூலம்தான் கொடுக்கப்படுகிறது. வெற்றிலையில் அவ்வளவு கால்ஷியம் இல்லா விட்டாலும் வெற்றிலைக்குத் தடவும் சுண்ணாம்பு முழுக்க முழுக்கக் கால்ஷியமே. வெற்றிலையை ஒரு தடவை போட்டாலே நமக்கு வேண்டிய கால்ஷியம் கிடைத்துவிடும். ஏழைகள் மற்றப் பொருள்களின் மூலம் கால்ஷியத்தை அடைகிறார்களோ என்னமோ; ஆனால் வெற்றிலை போடுவதன் மூலம் கட்டாயம் கால்ஷியம் அடைந்து விடுகிறார்கள். அடிக்கடி வெற்றிலை பாக்குப் போடுவதாலும், புகையிலை போடுவதாலும் அநேகருக்கு வாய்ப் புற்று உண்டாகி விடுகிறது. ஆகையால் ஒரு தடவை மட்டும் வெற்றிலை போடுவதில் குற்றமில்லை; நல்லதுதான்.

வெற்றிலையைப் போட்டுக் கொண்டால் முகம் களையாக இருக்கும். வேண்டிய சுண்ணாம்புச் சத்துக் கிடைத்து உடல் ஆரோக்கியம் உண்டானால் அழகுக்குக் கேட்க வேண்டுமா! (தொடரும்)



# எந்த ஒளியிலும் ப்ளாஷ் இருக்கென்றால் உங்களுக்கு படம் நிச்சயம்!

இன்டோர் அல்லது அவுட்டோர் எதானாலும் சரி. இந்த "கோடக்" காமரா உபயோகித்து அழகான ஸ்னாப்ஸ் எடுக்கமுடிகிறது. ஒளி மங்கலாகவிருக்கலாம். ஒரு "கோடக்" ப்ளாஷ் ஹோல்டர் உங்கள் படத்திற்கு பிரகாசம் அளித்து விடும். உங்கள் காமராவில் இதைப் பொருத்தி, பட்டனை அமர்த்தி விடுங்கள். அவ்வளவுதான்.

சிரமகரமான டைம் எக்ஸ்போஷர்களின் அவசியமில்லை. இந்த விலை குறைந்த ப்ளாஷ் பல்புகளுக்கு வேண்டும் பணம், அதனால் நீங்கள் வீண்போகாமல் சேமிக்கும் பிலிம்களிலிருந்தே கிடைத்துவிடும்.

இன்றே உங்கள் கோடக் வியாபாரியை பாருங்கள்.



"கோடக்" ட்யூ ஆப்லெக்ஸ் காமரா உபயோகிப்பதற்கு மிக எளிது. மிக பெரிதான வ்யூபைண்டர் தவறுதலேற்படாமல் படம் பிடிப்பதற்கு உபகரிக்கிறது. சிக்கனமானதும்கூட—ஒவ்வொரு ரோல் பிலிமிலிருந்தும் உங்களுக்கு 12 படங்கள் கிடைக்கும் இந்த காமராவை உபயோகிப்பதில் நீங்கள் பெருமை அடைவீர்கள். ரூ. 59/-

'கோடக்' DX—ப்ளாஷ் ஹோல்டர் ரூ. 22/12/-

அசல் லதர் கேஸ் ரூ. 11/-



ப்ரௌனி ரெப்லெக்ஸ் காமரா ப்ரகாசமான பூர்ணஸைஸ் வியூபைண்டர் வழி குறிபாருங்கள்—பட்டனை அமர்த்திவிடுங்கள். அவ்வளவேதான். 12 ஆல்பம் சைஸ் ஸ்னாப்ஸ் ஒவ்வொரு ரோல் பிலிமுக்கும் கிடைக்கும். பலம் பொருந்திய கேஸுடன் வருகிறது ரூ. 45/-

'கோடக்' டைப் B ப்ளாஷ் ஹோல்டர் ரூ. 22/12/-



ஸிக்ஸ்—20 "ப்ரௌனி" காமரா மாடல் E குறைந்த விலையில் அற்புதமான பொருள்! அதிசயப்படியாகப் பொருத்தப்பட்டிருக்கும் லென்ஸ் ஒப்பில், மெய்யெனத் தோற்றமளிக்கும் படங்களை அளிக்கிறது. செப்—கன்டைன்ட் கலர் பில்டர் உபயோகித்து, அழகான ஆகாயத்தையும் மேகங்களையும் சேர்த்து படங்கள் பிடிக்கலாம் ரூ. 34/-

"கோடக்" டைப் B ப்ளாஷ் ஹோல்டர் ரூ. 22/12/-

லதர் கேஸ் ரூ. 8/- கேன்வாஸ் கேஸ் ரூ. 3/-

மேல்கொடுத்திருக்கும் விலைகளில் செயில்ஸ் டாக்ஸ் சேராது.

கோடக் லிமிடெட்
(இங்லேண்டில் இணைக்கப்பட்டது)
பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்.

இன்னும் பல! கோடக்கிடம் எந்த போட்டோக்காரருக்கும் தகுதியான காமராக்கள் இருக்கிறது. ரூ. 17/8/-லிருந்து, விதவிதமான சைஸ், தரம் விலைகளில். இன்றே உங்கள் கோடக் வியாபாரியிடம் சென்று ஒன்றை பெறுங்கள்!




சரோஜா ஸ்ரீநிவாசன்


மாதம் முப்பது நாட்களும் உழைத்த உழைப்பின் ஊதியம் நூற்றுப் பத்து ரூபாயும் அவன் பர்ஸில் கனத்துக் கொண்டிருந்தது. 'முதல் தேதிக்கே' உரிய அலாதி சந்தோஷமோ குதூகலமோ அவன் முகத்தில் தாண்டவமாடவில்லை. அதற்கு மாறாக முதல் தேதி ஏண்டாப்பா வருகிறது என்ற எல்லையற்ற சலிப்பும் விசாரமும் தான் அவன் உள்ளத்தில் பரவிக் கிடந்தது. அந்த மாத செலவுத் திட்டங்களைப் பற்றிய பிரச்னைகளை விடுவிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தான் சுந்தரம். பழக்கத்தின் காரணமாகக் கால்கள் தன் போக்கில் சென்று கொண்டிருந்ததே யொழிய, நடை ஏனோ துரிதமில்லாமல் மந்த கதியில் வளர்ந்து கொண்டிருந்தது.

சென்ட்ரல் வந்து விட்டது. பிளாட்பாரத்தோடு நடந்து கொண்டிருந்த அவனை உராய்ந்தபடி 'சர்' என்ற சத்தத்துடன் இரண்டாம் நம்பர் பஸ் ஒன்று வந்து நின்றது. சுந்தரம் திரும்பிப் பார்த்தான். திருவல்லிக்கேணி போகும் பஸ்தான் அது. பஸ்ஸில் ஏறிக் கொள்ளும்படி சோர்ந்து போயிருந்த அவன் கால்கள் கெஞ்சின. ஆனால் மனம் மாத்திரம் அதற்குச் செவி சாய்க்காமல் இணங்கத் தயங்கிற்று. பஸ்ஸில் போவதானால் இரண்டணாச் செலவு. நடந்தே போய்விடலாமென்றாலோ தலைவலி அரைமணி நேரமாக மண்டையைப் பிளந்து கொண்டிருந்தது. ஒரு கப் காப்பி வயிற்றுக்குள் சென்றால் தான் நடையைக் கட்ட முடியும். எப்படியும் செலவு என்னமோ இரண்டணாத் தான். ஒரு கண நேரந்தான் இந்தப் போராட்டம். 'சே... முதல் தேதி கூடவா இந்தத் தரித்திரம் ...... தீராத யோசனை' என்ற நினைப்பு அவன் உணர்ச்சிகளை விழிப்புறச் செய்தது. நகர்ந்து கொண்டிருந்த பஸ்ஸில் ஓடிச் சென்று தொத்திக் கொண்டான். சுந்தரம் பஸ்ஸின் உட்புறம் பார்வையை ஓட்டினான். சே என்ன துர் அதிர்ஷ்டம்! களைப்பினாலே கெஞ்சும் உடலுக்குத் தஞ்சம் அளிக்க ஒரு சீட்டுக் கூடக் காலியாயில்லை. வாரைப் பிடித்தபடி திரிசங்கு சொர்க்கத்தில் ஊசலாட ஆரம்பித்தான். திருவல்லிக்கேணியில் இறங்க நினைத்த சுந்தரம் கண்டக்டர் வந்து டிக்கட் கேட்டபோது ஓரணா கொடுத்து மவுண்ட் ரோடுக்கு ஒரு டிக்கட் வாங்கிக் கொண்டான். மவுண்ட் ரோடில் இறங்கிக் கொண்டால் வீட்டுக்குக் கொஞ்ச தூரம் நடந்தாலும் தினத்தைவிடச் சீக்கிரமாகப் போய் விடலாம். தவிரக் கமலாவின் கையினால் நல்ல காப்பியும் கிடைக்கும். ஓரணாவும் மிச்சமாகும் என்ற நினைவுடன் மீதி ஓரணாவைப் பர்ஸில்வைத்துக்கொண்டான் சுந்தரம்.

ஓர் அணா செலவு செய்ய ஆயிரம் புனராலோசனைசெய்யும் கஞ்சப் பேர்வழி அல்ல சுந்தரம். அவனுக்கு மனசு தாராளம். இருந்தால் முன் பின் யோசியாமல் எல்லாவற்றையும் வாரி வழங்கி விடுவான். ஆனால் அவனுடைய மாத வருமானம் என்னவோ அவன் தாராள மனப்பான்மையோடு ஒத்துழைக்க மாட்டேனென்று சத்தியாக்கிரகம் செய்தது. சுந்தரம் என்ன செய்ய முடியும்? எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்து விட்டுப் பத்து மணி நேரம் பைல்களோடு போராடி விட்டு முதுகு ஒடிய வேலை செய்யும் கம்பெனி ஒன்றில் குமாஸ்தா கூட்டத்தில் அவனும் ஒருவன். அவன் உழைப்புக்கு ஊதியமாக மாதம் பிறந்தால் நூற்றுப்பத்துரூபாய் சுளையாகக்கிடைத்தது. ஆனால் மாதம் பிறப்பதற்கு முன்பே 'வெள்ளையப்பனை' எதிர்பார்த்து எத்தனையோ செலவுகள் தவம் கிடக்கும். அவனும் அவன் மனைவியும்தான் குடும்பம். இருந்தாலும் பட்டண வாசத்திலே வீட்டு வாடகை கொடுத்து ஒரு குடித்தனம் நடத்துவது என்பது இலகுவாக இல்லையே?

நல்ல வேளையாகக் கமலா இங்கிதமறிந்து பாங்காகக் குடித்தனம் நடத்தி அவன் கருத்துக்கு இசைந்தவளாக வாய்த்து விட்டாள். அது வரையில் சுந்தரம் அதிர்ஷ்டசாலிதான்.

"சார் மவுண்ட் ரோடு!" கண்டக்டரின் அபயக் குரலைக் கேட்ட சுந்தரம் பஸ்ஸை



பத்து மணி நேரம் பைல்களோடு போராடிவிட்டு...

விட்டுப் பரபரப்பாக இறங்கினன். பஸ் ஸ்டாண்டில் மணம் பரப்பிக் கொண்டிருந்த ஜாதிப்பூ அவனுக்குக் கமலாவை நினைவூட்டியது. மிச்சம்பிடித்த ஒரு அணவுக்குப் புஷ்பம் வாங்கிக் கொண்டு உற்சாகமாக நடக்க ஆரம்பித்தான் சுந்தரம்.

அவன் வீட்டு வாசற்படி ஏறும்போதே திண்ணையில் உட்கார்ந்திருந்த அவன் மருமான் சேது பிரசன்ன வதனத்துடன் காட்சி அளித்தான். சுந்தரத்தைக் கண்டதும் தன் உடம்பை ஆயிரம் வளைவுகளாக நெளித்துக் கொண்டு பயத்துடன் எழுந்து நின்முன்.

"எங்கேடா வந்தே இப்படி? என்ன விசேஷம்..." என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் சுந்தரம்.

"ஹி...ஹி... ஒண்ணுமில்லே, மாமா! சும்மாத்தான் இப்படிசாயங்காலம் வந்தேன். அம்மா வந்து...மாமியிடம் எல்லாவற்றையும் சொன்னேன்" என்று ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதபடி உளறினன், சேது. சுந்தரத்திடம் அவ்வளவு பயம் அவனுக்கு.

அவன் சொன்னதைக் காதில் வாங்காமலே உள்ளே நுழைந்து கோட்டைக் கழற்றி ஆயாசத்துடன் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டான் சுந்தரம். சுந்தரத்தைக் கண்டதும் அவசரமாகக் காப்பியைக் கலந்து கொண்டு வந்த கமலா, "ஏது... இன்னிக்கு இவ்வளவு சீக்கிரம்...... பஸ்ஸில் ஏறி வந்தீர்களா?" என்று பரிவுடன் கேட்டாள்.

"ஆமாம்..." என்று தலையை ஆட்டிய சுந்தரம் ஆவலுடன் காப்பியை வாங்கிப் பருக ஆரம்பித்தான்......

சுந்தரம் காப்பியைக் குடித்து முடித்ததும் காலி டம்ளரை வாங்கிக் கொண்ட கமலா தொண்டையைக் கனைத்தபடியே, "சேது... வந்திருக்கான்" என்று தாழ்ந்த குரலில் சொன்னுள்.

"பார்த்தேன்......வாசலிலே இருந்தான்... என்ன சமாசாரம்......?" என்று வினவினன் சுந்தரம்.

"போன மாசம் பள்ளிக்கூடச் சம்பளமே சேதுவும், ராமுவும் இன்னும் கட்டவில்லையாம்...பால்காரனுக்கு இரண்டு மாசப் பணம் பாக்கியாம்......

"அதற்காக......" என்று இழுத்தான்.



மருமான் சேது பிரசன்ன வதனத்துடன்...

"இருபத்தைந்து ரூபாய் கொடுத்தனுப்பும்படி கேட்டு அனுப்பிச்சிருக்கார் உங்கள் அக்கா!" என்ருள் கமலா.

சுந்தரத்துக்குக் கோபம் வரக் கூடாதே என்று மென்று விழுங்கியபடி பயந்த குரலில் சொன்னுள் கமலா.

ஆனல் சுந்தரம் ஆவேசக்காரனுகி விட்டான். 'விருக்' கென்று எழுந்தான்...... "என்னது...பணமா? எங்கிட்ட என்ன கொட்டியாகிடக்கு வாரி வழங்க...மனுஷன் நிலைமையைச் சமாளிக்க முடியாமல் கிடந்து திண்டாடித் திணற வேண்டியிருக்கு...கழுகுக்கு மூக்கிலே வேர்க்கிறப்போல முதல் தேதி எப்போ வரும்னு எதிர்பார்த்துப் பணத்துக்கு அனுப்பிருளா?...ஒவ்வொரு மாசமும் இதுவே பெரிய தொல்லையாப் போச்சு. என்னுலே இனிமே ஒரு சல்லி தரமுடியாது...... தினம் எட்டு மணி நேரம் ரத்தம் சுண்ட உழைச்சும் எனக்குச்சுகமில்லே... நல்ல வேஷ்டி, ஷர்ட் மூணு மாசமாய்க் கிடையாது" கோபத்துடன் பட பட வென்று பொரிந்து தள்ளினன் சுந்தரம். கமலாவுக்குத் தர்ம சங்கடமாகியது.

"ஏன் இப்படிக் கத்துகிறீர்கள்? சேது வாசலிலே இருக்கான். அவன் காதிலே விழப் போகிறது. தயவு செய்து மெதுவாய்ப் பேசுங்களேன், ஆத்திரப்படாதீர்கள்."

"வாயை மூடு...அவன் பெரிய மனுஷன்... காதிலே விழுந்தால் என் தலையைச் சீவி விடுவானு என்ன?"

"ஐயோ! பேசாமலிருங்களேன். அவர்களுக்கு ஏதோ கஷ்டம். பணம் கேட்டிருக்கிருர்கள். முடிந்தால் கொடுக்கிறோம். இல்லை என்ருல் பேசாமல் போகிருன். ஏன் இப்படி வீணுக வாய் வார்த்தையைக் கொட்டுகிறீர்கள்?" கமலா கெஞ்சும் குரலில் சுந்தரத்தை வேண்டிக் கொண்டாள்.

"ஹூம்...கூடப் பிறந்தவளாச்சேன்னு... கொடுத்துக் கொடுத்துக் கண்ட பலன், நான் இன்று சம்பளம் வாங்கின அன்றும் சந்தோஷமில்லாமல் திண்டாடிக் கவலைப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கு. சம்பாதிக்க ஆரம்பித்தும் சுகம் இல்லை......'தம்பி செய்கிருனே...இன்னும் செய்யட்டும்' என்ற தைரியத்தில்தான் அந்த மனுஷன்—அத்திம்பேர்—தன்னுடைய

குடும்பம் என்ற கவலை எள்ளத்தனை கூட இல்லாமல் ஹாய்யாக இருக்கிறாள். இரண்டு குடும்பத்தையும் தாங்கி எல்லாக் கஷ்டமும் அனுபவிக்க எனக்குத்தலையெழுத்தா என்ன?''

''உங்கள் உடன் பிறந்த அக்கா கஷ்டப் படுகிறாள். ஏதோ நம்மால் முடிந்ததைச் செய்கிறோம். செய்ததை யெல்லாம் சொல் லிக் காட்டாதீர்கள். செய்ததும், செய்வ தும், செய்ய வேண்டியதும் நம் கடமை...'' அமைதியான குரலில் சொன்னாள் கமலா...

''ஹூம்......பெரிய கடமையைக் கண்டு விட்டாய் நீ! எனக்கு ஹிதோபதேசம் செய்ய வந்து விட்டாய். ஏது இவ்வளவு பரிவு நாத்தனார் மீது? அவ்வளவு அன்பும் கரிசன மும் இருப்பவள் உங்கப்பா சீதனம் கொடுத்து பாங்கிலே போட்டு வைத்திருக்கும் ஆயிர ரூபாயிலே நூறு ரூபாய் வேண்டுமானாலும் தாராளமாய் எடுத்துக் கொடேன்! நான் வேண்டாம்னு தடுக்கவில்லை......?'' இடக்கும் பரிகாசமும் கலந்த குரலில் ஏளனமாகச் சொன்னான் சுந்தரம்......

கமலாவின் உள்ளத்தில் அவன் வார்த்தை சுரீரென்று தைத்தது. தன் பிறந்தகத்து 'இல்லாமையை' அவன்—தன் கணவன்—சுட்டிக் காட்டியது அவளுக்குப் பொறுக்க முடிய வில்லை. கணத்தில் அவளுடைய கண்கள் கலங்கி விட்டன.

''ஏன், என் பிறந்த வீட்டைப் பற்றி இழுக் கிறீர்கள்? அங்குதான் வழி இல்லை என்பது வெட்டவெளிச்சமான உண்மையாச்சே...... நீங்கள் பணம் கொடுத்தால் கொடுங்கோ இல்லாவிட்டால் பேசாமலிருங்கள்...உங்கள் பாடு; உங்க அக்கா பாடு. நான் ஏன் குறுக்கே



அந்த மனுஷன் அத்திம்பேர்...

விழுந்து சிபாரிசு செய்ய வேண்டும்? நீங்கள் பணம் கொடுக்க வில்லை என்ற வருத்தத்தில் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று என்னைப் பற்றி ஊராரோ, உங்கள் அக்காவோ குற்றம் சொல்லாமல் இருந்தால் சரி.'' விக்கலுக்கிடையே வார்த்தைகள் அவள் தொண்டையிலேயே சிக்கிக் கொண்டன. பொங்கி வந்த கண்ணீர் கமலாவின் கன்னங் களில் உருண்டோடிற்று.

''சேச்சே! இந்த வீட்டிலே மனுஷனுக்கு மூதல் தேதி கூட நிம்மதி கிடையாது. என்றைக்கும் ஓயாத போராட்டம்தான்!'' வெறுப்பும் சலிப்பும் மேலிட முணுமுணுத்த சுந்தரம் கோபத்துடன் எழுந்து வெளியே சென்றான். மேஜையின்மீது கிடந்த ஜாதிப் பூப் பொட்டலம் கவனிப்பாரின்றி மணத்துக் கொண்டிருந்தது.

* * *

மல்லிகைப். பூவைப் போல் 'கொல்' லென்று வானத்திலே நக்ஷத்திரங்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. கீழ்க் கோடி யிலே வெள்ளிக் கடலிலே குளித்தெழுந்த பூர் ணிமை நிலவு மெதுவாக வெளியே எட்டிப் பார்த்தது. பேரிரைச்சலோடு உயிரே பொங்கி எழும்பி நுங்கும் நுரையுமாகக் கரை யிலே வந்து மோதி உடைந்து சிதறிக்கொண் டிருந்தன வெண்ணிற அலைகள். உள்ளத்தைக் குளிர்விக்கும் ரம்மியமான காட்சிகளினின் றும் வெகு தூரத்துக்கு விலகி யோக நிலை யிலே மணற்பரப்பில் சாய்ந்து கொண்டிருந் தான் சுந்தரம். அலைகளின் அலைப்பினால் கரைந்து கொண்டிருந்த வெண் மணலைப் போல அவன் உள்ளத்திலும் எண்ணற்ற எண்ணக் குவியல்கள் சிதறிக் கலைந்து கொண் டிருந்தன. தனிமைக்குத் துணையான மனச் சாட்சியோடு அவன் உள்ளம் போராடிற்று.

''சே! கமலுவிடம் எவ்வளவு கடினமாகப் பேசி அவள் உள்ளத்தை நோக வைத்து விட்டு வந்தேன். அவள் சொன்னது நியாய மான வார்த்தைதான். உடன் பிறந்தவளுக்கு உதவி செய்ய வேண்டியது என் கடமைதான். அதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அதற்கும் ஒரு எல்லை — வரம்பு என்பது கிடையாதா? இன்றா, நேற்றா? நாலு வருஷங் களாகத் தான் அக்கா மீனு அவலமாக வாழ்க்கை நடத்துகிறாள். பட்டண வாசத் திலே குடும்பம், எட்டுக் குழந்தைகள். குடும்பத்தின்மீது பொறுப்பில்லாமல் திரியும் வகையற்ற கணவன். இவ்வளவையும் எப் படியோ சமாளித்துக் கொண்டுதான் வரு கிறாள். ஆனால் அவள் சகிப்புத் தன்மையும், பொறுமையும் அத்திம்பேரின் பொறுப் பற்ற தனத்துக்கு இன்னும் ஒரு படி உயர மும் தைரியமும் அல்லவா அளிக்கிறது? நிரந்தரமாக ஒரு உத்தியோகம் இல்லை. கட்டின கணவனிடம் சண்டை போட்டுக் கால் வயிற்றுக்கு வகை செய்யும்படி. கேட்க மீனுவுக்குத் துணிவு இல்லை. கவலை

விட்டது என்று நிம்மதியாக வளைய வருகிறான். ஆனால் அதன் விபரீதம் கடைசியில் என்னையல்லவா வந்து தாக்குகிறது? நான் மட்டும் என்ன பணத்தில் புரளுகிறேனா? நித்திய கண்டம் பூர்ணாயுசாக ஏதோ கம்பெனியில் உத்தியோகத்துடன் கிடந்து அலைய வேண்டியிருக்கு. சாவும் வாழ்வும் இன்பமும் துன்பமும் அந்தப் புண்ணியவான் முதலாளி கொடுக்கும் நூற்றுப் பத்து ரூபாயில்தானே அநுபவித்தாக வேண்டும். இந்த அழகில் எப்படி என்னால் உதவி செய்ய முடியும்? முடிந்த சமயம் ஐந்தோ பத்தோ அரிசியோ சாமானோ கடனாவது வாங்கிக் கொடுத்து மீனாவின் கண்ணீரைத் துடைக்க வேண்டியிருக்கிறது! ஆனால் இதற்காக நான் எத்தனை தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது? அதை ஒரு கணமாவது என் அக்கா மீனா சிந்தித்துப் பார்த்தாளா?

"கமலா அவன் பொறுமையின் அவதாரம் தான். இளமைக் கனவுகளும், பருவ ஆசைகளும் உள்ளத்தினுள்ளே கிளர்ந்து எழுந்தாலும் ஒரு நாளாவது, தன் அபிலாஷைகளை என்னிடம் வாய் திறந்து கேட்டதுண்டா? இளம் ஜோடிகள் புதுமணத் தம்பதிகள் என்பதற் கிணங்கத் தினமும் சினிமாவும் டிராமாவும் கச்சேரியுமாக ஆனந்தமாகப் போகத்தான் முடிகிறதா? வீடுதான் சொர்க்கமாகி விட்டது எனக்கு.

"ஒவ்வொரு மாதமும் இப்படித்தான் ஏதேனும் மீனாவின் தொல்லை. அதற்கு முடிவேயில்லை. ஆனால் என் நிலைமை தெரிந்து மீண்டும் இந்த மாதமும் இருபத்தைந்து ரூபாய்க்கு அடிபோட்டால் என்ன அர்த்தம்? இனிமேல் சல்லிகூடத் தர என்னால் முடியாது. மீனாவுக்கு மனத்தாங்கலாகத்தான் இருக்கும். ஆனால் அவளுக்கு இட்டு நிரப்ப எனக்குக் கட்டி வரவில்லையே சம்பளம். இந்தத் தொல்லை தீர வேறு எங்காவது மாற்றல் கிடைத்தாலும் போய் விடலாம்..." சுயநலத்துக்கு அடிமையான சுந்தரத்தின் உள்ளம் கற்பாறையைப் போல் ஆகி விட்டது.

"சுந்தரம், சுந்தரம்!" சிந்தனையின் சிடுக்கு பட்டென அறுந்து போகத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான் சுந்தரம்.

அவன் நண்பன் நாராயணன்தான் வந்து கொண்டிருந்தான்.

"என்னப்பா, சுந்தரம்! தனியாக இன்றைக்கு இந்த நேரத்திலே! ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்? உன் 'அவள்' வரவில்லையா? ஏதேனும் தாம்பத்யக் கலகமோ?" என்று கண்களைச் சிமிட்டியபடியே குறும்பாகக் கேட்டான் நாராயணன். புன்னகையும் நாராயணனும் என்றுமே இணைபிரியாத தோழர்கள்தான்.

அவன் கிண்டலை ரசிக்கும் தெம்பிழந்து மௌனமாக மணலை அளைந்து கொண்டிருந்தான் சுந்தரம்.

"சுந்தர், என்ன விஷயம்..." நாராயணன் பரிவோடு கேட்டான்.

சுந்தரம் படபடவென்று தன் மனத்திலிருந்ததை நாணாவிடம் கொட்டித் தீர்த்தான்.

நாராயணன் மௌனமாக அதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"சுந்தரம் இதற்காகவா இத்தனை கவலையும் விசாரமும்? என்னைவிட நீ எத்தனையோ




"மெதுவாகப் பேசுங்களேன். சேது வாசலிலே இருக்கான். காதில் விழப் போகிறது!"

மடங்கு அதிர்ஷ்டசாலியாச்சே! மஞ்சளும் குங்குமமுமாய்க் கணவனுடைய நிழலின் கீழ் இருக்கிறாள் உன் அக்கா! அக்காவுக்கு முடிந்த சமயம் பண உதவி செய்வதோடு உன் கடமை முடிகிறதே என்று சந்தோஷப்படு! சுந்தரம், என்னைப் பார்! உள்ளத்திலே குமிழியிடும் இன்பக் கற்பனைக் கனவுகளோடு என்று தன் கரம் பிடிக்க வருவான் என்று கணவனை எதிர்பார்த்துக் கல்யாணத்துக்கு நிற்கும் ஒரு தங்கை, நாலு குழந்தைகளோடு கைம்பெண்ணாகி, இன்பத்துக்கும் துன்பத்துக்கும் என்னையே வாழ்வு முழுவதும் நம்பி என்னிடம் சரண் புகுந்திருக்கும் பெரிய அக்கா ஜகதா, காலேஜிலே படிக்கும் தம்பி ஒருத்தன், இன்பமளிக்கும் ஆசை மனைவி ஒரு புறம், அன்புத் தாய் மற்றொரு புறம், இவ்வளவு பேரும் புடைசூழ உன்னைப் போன்ற சம்பளத்தில்தானும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறேன். எனக்கு மாத்திரம் வறுமை இல்லையா? ஆனால் என்றேனும் ஒரு நாளாவது புன்னகையைத் தவிர முகச்சுளிப்பை என்னிடம் நீ கண்டதுண்டா? என்னைப் பார்த்து இதை நீ நம்புகிறாயா சுந்தரம்?"

"நிஜமாகவா நாணா?" ஆச்சரியத்தில் சுந்தரத்தின் விழிகள் விரிந்தன.

"சத்தியமாகச் சுந்தரம்."

"உன்னையும் உன் குஷியையும் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே, நாணா?"




"அதுதான் வாழ்க்கையின் ரகசியம் சுந்தரம்! எப்பொழுதும் புன்னகையுடன் 'ஜெயமுண்டு பயமில்லை' என்ற திட நம்பிக்கையுடன் வாழ்வோடு எதிர் நீச்சல் போட வேண்டும். வாழ்க்கை என்பது நீ நினைப்பது போல்—எதிர் பார்ப்பது போல்—இன்பப் பூங்கா அல்ல. அதில் எத்தனையோ நெருஞ்சி முள்ளும், வேல முள்ளும், மண்டிக் கிடக்கின்றன. நீரோடையைப் போல் ஒரே இன்பமாக வாழ்வு ஓடிக் கொண்டிருந்தால் அந்த ருசி கசந்து தெவிட்டிவிடாதா? இன்பமும், துன்பமும், கடமையும், காதலும் கலந்த மேடு பள்ளமான போராட்ட வாழ்க்கையினூடே அடிபட்டு, வெற்றியோடு முன்னேறும் போதுதான் மனித வாழ்வு பூரணமாகிறது, சுந்தரம்! அதில் கிட்டும் இன்பமே அலாதி. நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் இருந்து விட்டால், எந்தச் சோதனையிலும் வெற்றி உண்டு சுந்தரம்." மூச்சு விடாமல் உணர்ச்சி வசத்திலே பேசித் தீர்த்தான் நாராயணன். சுந்தரம் பிரமித்துப் போய்ச் சிலையாகி விட்டான்.

சுந்தரத்துக்கு வாழ்வின் தத்துவம் நன்றாகப் புரிந்து விட்டது.

நேரம் ஆகிவிடவே, சுந்தரம் சலனமற்ற உள்ளத்தோடு தன் வாழ்வின் வழி காட்டியான நாராயணனைப் பின் தொடர்ந்தான்.

* * *


சுந்தரம் சமையலறையில் நுழைந்த போது அங்கு அவன் கண்ட காட்சி அவனை மெய் சிலிர்க்க வைத்தது.

தட்டிலிருந்த சாதத்தை ஆவலோடு அள்ளிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான் சேது. அவனுக்கு அருகில் அமர்ந்து பரிவோடு பரிமாறிக் கொண்டிருந்தாள் கமலா.

"நான் சொன்னது புரிந்ததா, சேது? நாளைக்கு மாமா பணம் தருவார். பள்ளிக் கூடச் சம்பளத்தை உடனே கட்டி விடு. மாமா கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறார். வீண் பொழுது போக்கிப் பரீட்சையில் தோற்று விடாதே...... பிறகு மாமா மனசு வருத்தப் படுவார். கடமையை உணர்ந்து சமர்த்தாகப் படித்துத் தேறி முன்னுக்கு வரவேண்டும் தெரிந்ததா?" கமலா கனிவான குரலில் அவன் கடமையை அவன் இளம் உள்ளம் உணருமாறு ஹிதோபதேசம் செய்து கொண்டிருந்தாள்.

"ஆகட்டும் மாமி!" கடமையின் தத்துவம் புரிந்தவன்போல் தலையை ஆட்டினான் சேது.

பாரதப் பெண்ணுக்குரிய பண்பைக் கமலாவிடம் கண்ட சுந்தரம் உணர்ச்சி வசமாகி நின்றான். தன் வாழ்வின் வழி காட்டி கமலாவா அல்லது நாராயணனா என்பதை எடை போட முடியாமல் சுந்தரத்தின் மனத் தராசு திணறிக் கொண்டிருந்தது.



# மீண்ட வாழ்வு

நே. வீரராகவன்



"அம்மா! இன்றைக்குத் தேதி மூப்பத்தொன்று. சம்பளம் கட்டாமற் போனால் நிச்சயமாய்ப் பெயரை அடித்துவிடுவார்கள். ஒவ்வொரு மாதமும் இப்படியே சம்பளம் கட்டாமல் வெளியிலே நிற்பதும், பெயரை அடிப்பதும், அபராதம் செலுத்தின பிறகு பள்ளிக்கூடத்தில் சேருவதும் எனக்கு அவமானமாயிருக்கிறது!"

"தம்பி! நானும் எங்கெங்கேயோ கேட்டுப் பார்த்து விட்டேன். இதற்கு முன் வாங்கின கடனை யெல்லாம் கொடுக்கவில்லை யென்று கோபித்துக் கொண்டு யாரும் கடன் தரமாட்டேன் என்கிறார்கள். என்ன செய்கிறது! உன்னைப் பத்தாவது வகுப்பு முடியவாவது படிக்க வைக்க வேண்டும் என்று நானும் படாதபாடு படுகிறேன். இந்த மாதச் சம்பளம் கட்ட இந்த ராட்டினத்தைத்தான் விற்றாக வேண்டும்!"

"ராட்டினத்தை விற்றுவிட்டால் அப்புறம் எப்படி அம்மா நூல் இழைப்பாய்! அந்த ராட்டினம் தானே இன்று நமக்குச் சோறு போடுகிறது! சித்தப்பாவை மூன் பணமாகக் கொஞ்சம் கேளேன்!"

"மூத்து! அவரை நான் கேட்கவில்லை என்று நினைக்கிறாய்! ஒரு வாரப் பணத்தை முன் பணமாகக் கொடுத்தால் அடுத்த வாரம் இரண்டு வாரத்துக்கும் சேர்த்து, நூல் இழைத்து, தார் சுற்றிக் கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லிக் கெஞ்சிக் கேட்டேன். கொஞ்சமாவது அவருக்கு மனம் இளகணுமே......!"

"கூடப்பிறந்த அண்ணன் மகன், பள்ளிக்கூடத்துச் சம்பளம் கட்ட முடியாமல், படிப்பையே நிறுத்திவிட வேண்டிய நெருக்கடி வந்து விட்டதே யென்று நினைக்காமல், 'பணம் இல்லை' யென்று சொல்ல வேணுமானால் எவ்வளவு இரும்பு நெஞ்ச இருக்கும் அவருக்கு! அதுவும் நீ இனாமாகவா கேட்டாய்! ஒரு வாரக் கூலியை முன் பணமாகத் தரும்படிதானே கேட்டாய்! தகப்பன் இல்லாப் பிள்ளையாயிற்றே என்று, தாமே பணம் தந்து படிக்க வைக்க வேண்டியது போக, கடன் கொடுக்கவும் மறுக்கும் இவரா என் தகப்பனுருடன் கூடப்பிறந்தவர்! இவரோ, இவரது பிள்ளையோ என் நிலையிலிருந்து, என் தகப்பனர் இன்றைக்கு உயிருடனிருந்தால், தாம் எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும் இப்படிப் பார்த்துக் கொண்டிருப்பாரா! தங்கத்தோடு மண்ணும் கலந்து வருவது போல், கருணைமூர்த்தியான என் தகப்பனுருடன் இந்தக் கல் நெஞ்சரும் பிறந்தாரே!"

"தம்பி! இப்போதுதான் நடந்தமாதிரி இருக்கிறது. அப்போது ஊரெல்லாம் ஒரே மலேரியாக் காய்ச்சல். உன் சித்தப்பாவுக்கும் அந்தக் காய்ச்சல் வந்து விட்டது. உன் அப்பா ஒருவரிடத்தில் கூலிக்குத் தறி நெய்து கொண்டிருந்தார். தினக் கூலி எட்டணா. நான் நூல் இழைத்துத் தார் சுற்றிக் கொடுப்பேன். எனக்குத் தினம் இரண்டு அல்லது மூன்றணா கிடைக்கும். அதை வைத்துக் கொண்டுதான் நாங்கள் மூன்று பேரும் பிழைத்து வந்தோம்.

தம்பிக்கு வைத்தியம் பார்க்க உன் அப்பா கையிலே காசு இல்லை. என் தாலியை அழித்துக் கொஞ்சம் தங்கத்தை எடுத்து விற்று வைத்தியத்துக்கும் வைத்தியனுக்கும் கொடுத்தார். என்ன மருந்து கொடுத்தும் ஜுரம் இறங்கவில்லை. ஒரு நாள் இரவு பத்துப் பதினெரு மணி இருக்கும். உன் சித்தப்பாவுக்கு நினைவு தப்பிப்போய்ப் போட்ட கை கால் போட்டபடியே கிடந்தன. நான் போய் ஒரு மூலையிலே குந்திக் கொண்டு அழுதேன். பெண் பிள்ளையான நான் வேறென்னடா செய்வேன்! உன் அப்பா 'ஐயோ! என் தம்பி போகிறனே! என் தம்பி போகிறனே!' என்று ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தார். நான் எப்போது தூங்கினேனே, எனக்கே தெரியாது! மணி இரண்டிருக்குமோ, மூன்று இருக்குமோ! விழித்துப் பார்த்தேன். உன் அப்பாவை வீட்டிலே காணவில்லை. பயந்து போய் அவரைக் கூப்பிட்டுக் கொண்டே வெளியே வந்தால் அவர் என்ன செய்து கொண்டிருந்தார், தெரியுமா! அதோ இருக்கிறதே, அந்த வேப்ப மரத்தில் ஒரு கயிறைக் கட்டி விட்டு, இன்னொரு முனையைக் கழுத்திலே கட்டிக் கொள்ளப் போனார். நல்ல வேளை! நான் 'ஐயோ! ஐயோ! இப்படிச் செய்யலாமா!' என்று கத்தினேன். 'என் தம்பியைச் சாகக் கொடுத்து விட்டு, நான் உயிரோடு இருக்கமாட்டேன். அவன் சாவதற்கு

## நல்ல வேளை !




முன்னால் நான் போய்விடுகிறேன் என்றார். உங்கள் தம்பி கண்ணைத் திறந்து, 'எங்கள் அண்ணன் எங்கே!' என்று கேட்கிறார் என்று சொல்லி அவரை உள்ளே இழுத்து வந்தேன்."

"ஏனம்மா, சித்தப்பாவுக்கு இந்த விஷயமெல்லாம் தெரியுமோ !"

"தம்பிக்காக உயிரை விடப் போனவர் என்று ஊரெல்லாம் சொல்லிக் கொண்டது, அவர் காதிலே மட்டும் விழாமல் இருக்குமா !"

"சித்தப்பா வேலை ஏதாவது செய்வாரா !"

"இஷ்டமிருந்தால் உன் அப்பாவோடு வேலைக்குப் போவார். இஷ்டம் இல்லாவிட்டால் ஊர் சுற்றப் போய் விடுவார்."

"அம்மா ! அது எப்படியாவது போகட்டும். எனக்கும் படிப்புக்கும் அதிர்ஷ்டமில்லை யென்று இதுவரையில் நடந்து வந்த நிகழ்ச்சிகளிலிருந்து நன்றாகத் தெரிகிறது. அப்படியே நான் பத்தாவது வகுப்பைப் படித்து முடித்தாலும், எனக்கு என்ன உத்தியோகம் வந்துவிடப் போகிறது ! பி. ஏ ; எம். ஏ. படித்தவர்களெல்லாம் இருபது ரூபாய் வேலைக்கு 'ஆலா'ய்ப் பறக்கும் போது எனக்கு என்ன வேலை கிடைக்கும் ! உத்தியோகமும் கிடைக்காமல், பரம்பரைத் தொழிலையும் பழக்கிக் கொள்ளாமல், இரண்டுங் கெட்டுச் சாவதை விட, இன்றிலிருந்து என் தகப்பனார் பாட்டனார் செய்து வந்த நெசவுத் தொழிலையே நானும் கற்கப் போகிறேன். சித்தப்பா தயவு இனி நமக்கு வேண்டாம். அவர் வீட்டுப் பக்கம் கூட நீ போக வேண்டாம்...வேறு எங்கேயாவது வேலை தேடிக் கொள்ளலாம் !"

"நம் பரம்பரைத் தொழில் எங்கேயடா ஓடிப் போகிறது ! இவ்வளவு தூரம் படித்துவிட்டு, முக்கால் கிணறு தாண்டின மாதிரி, கடைசியிலே படிப்பை விடக்கூடாது. நம்மிடம் இருக்கிற இரண்டு ராட்டினத்திலே ஒன்றை விற்றுப் பணம் வாங்கி வருகிறேன் !"

'வேண்டாம், அம்மா ! வேண்டாம்! ராட்டினத்தை விற்காதே. நம் தரித்திரத்தைப் போக்கும் சக்ராயுதம் அதுதான். இந்த நிமிஷம் முதல் நான் ஒரு நெசவாளி. நெசவாளியின் மகன் நெசவாளியாகவே பிழைக்கிறேன். என் முடிவைக் கலைக்கப் பார்க்காதே. நான் இப்போது செய்துவிட்ட உறுதி இறுதியானது. இப்போதே ராட்டினத்தை எடுத்து வருகிறேன். எனக்கு நூல் இழைக்கக் கற்றுக் கொடு" என்றான் முத்து.

*　　*　　*

முத்துவின் தகப்பன் பெரியசாமி ஒரு பிறவி நெசவாளி ; தன் தொழிலில் ஒரு கலைஞன். தன் குடும்பத்தை நாளொரு பட்டினியிலும் பொழுதொரு கவலையிலுமேதான் நடத்தி வந்தான். இன்பத்தின் நிழல் ஒரு வேளைகூடப் பெரியசாமியின் குடும்பத்தின் மீது விழுந்தது கிடையாது.

பெரியசாமி தினமும் காலையிலே, ஒரு பாத்திரத்தில் தனக்கும் சின்னச்சாமிக்கும் சோற்றை எடுத்துக் கொண்டு'தம்பியுடன் வேலைக்குப் புறப்பட்டு விடுவான். இடையில், உணவு உட்கொள்ளும் நேரம் போக, மற்றப்படி மாலை ஆறு மணி வரையிலும் தறியில் வேலை செய்வான். சின்னச்சாமி நூல் இழைப்பான் ; தார் சுற்றுவான், அல்லது துண்டுகளின் குஞ்சங்களைப் பின்னுவான். பெரியசாமிக்குத் தினக்கூலி எட்டணா. சின்னச்சாமிக்கு மூன்றணா. வீட்டு வேலையை முடித்து விட்டுப் பார்வதியும் நூல் இழைத்தல், தார் சுற்று

தல் போன்ற வேலைகளைச் செய்து தினமும் மூன்று அல்லது நான்கணா சம்பாதிப்பாள். வாரக் கடைசியில் தான் மூவருக்கும் கூலி வரும். அந்தக் கூலிக்குள்தான் அவர்களது சுகதுக்கங்கள் நடந்தாக வேண்டும். பார்வதியின் நற்பண்புகளும், பெரிய சாமியின் பெருந்தன்மையும், அவர்கள் குடும்பத்தின் வறுமையையும், பிற குறைகளையும் பிறர் காணாதவாறு மறைத்து வந்தன. சின்னச்சாமியின் விபரீதப் போக்கு சில சமயங்களில் பெரிய சாமியை வருத்தத்துக்கு உள்ளாக்கும். எனினும் தாய் தந்தையற்ற தம்பியாயிற்றே என்பதை எண்ணும்போது வருத்தம் அன்பாக மலரும்.

மில் ஜவுளிகள் மலிவாகக் கிடைக்கத் தொடங்கவே கைத்தறித் துணிகள் கேட்பாரற்றுத் தேங்கி விட்டன. அதன் பலனாகப் பல நெசவு முதலாளிகள், கைத்தறி ஜவுளிக்குக் கிராக்கி இல்லையென்று சொல்லிக் கதவடைப்புச் செய்தனர். வேலையை யிழந்த நெசவாளிக் குடும்பங்களிற் பல, பிச்சையெடுத்துக் கொண்டே ஊரூராய் அலைந்தன. மானமுள்ள சில குடும்பங்கள் வெவ்வேறு வகைகளில் தம் தலைவிதியைப் பரிசோதித்துக் கொண்டன. ஏழைப் பாட்டாளியான சின்னச்சாமிக்குத் தன்னைப் பெரிய தலைவனாக்கிக் கொள்ள அந்த நிலை ஒரு வாய்ப்பைக் கொடுத்தது. ஆரம்பத்தில் தொழிலாளிக் கொடியைத் தூக்கிச் சென்ற சின்னச்சாமி, நாளடைவில் ஒரு பேச்சாளியாக மாறி, முடிவில் உள்ளூர்ப் பாட்டாளிகளின் சங்கத் தலைவனாகவும் உயர்ந்து விட்டான்.


பெரியசாமியின் முதலாளி, தன்னிடம் தேங்கி விட்ட சரக்குகளைப் பெரியசாமியிடம் ஒப்படைத்து விற்று வரச் செய்தான். இந்த ஏற்பாடு ஓரளவு லாபம் பயக்கவே, பெரியசாமி தன் எஜமானனின் சரக்குகளை எடுத்துக் கொண்டு அடிக்கடி வெளியூர் செல்லும்படி ஏற்பட்டது. அப்படி வெளியூர்களுக்குப் போயிருந்த போது பெரிய சாமி ஒரு கிராமத்தில் ஒரு வீட்டில் ஓர் இரவு தங்கும்படி நேர்ந்தது. அந்த வீட்டுக்காரனும் ஒரு பரம்பரை நெசவாளி. அவனிடமிருந்து நீலச் சாயக் கலவை முறையைப் பெரியசாமி தெரிந்து கொண்டான். அதற்குக் காரணம் அவனுடைய நல்லதிர்ஷ்டத்தைத் தவிர வேறு என்னவாயிருக்க முடியும்! ஏனென்றால் அதற்கு முன்னும் சரி, பின்னும் சரி! அந்த ரகசியம் அந்த நெசவாளியின் வாயை விட்டு வெளிவந்ததில்லை. தான் கேட்டறிந்த முறையைப் பெரியசாமி ஒரு காகிதத்தில் குறித்துக் கொண்டு ஊர் வந்து சேர்ந்ததும், தன் எஜமானனின் தறியில் தயாரித்த துண்டுகளில் பரீட்சை செய்து பார்த்தான். பெரியசாமி புதிதாகத் தயாரித்த நீலத் துண்டுகள் ஒரு புது மினுமினுப்புடன் பார்த்தவர்களைக் கவரக் கூடியனவாயிருந்தன. பெரியசாமி தயாரித்த அந்த நீலத் துண்டுகளுக்கு உள்ளூரிலேயே நல்ல கிராக்கி ஏற்பட்டது.

அந்தச் சமயத்தில்தான் அரசாங்கம் கைத்தறி நெசவாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு உண்மை நெசவாளிகளுக்கு நூல் ரேஷன் கார்டுகள் வழங்கிச் சகாய விலையில் நூலும் விநியோகம் செய்ய முன் வந்தது. பெரிய சாமி கூலிக்கு நெய்வதை நிறுத்திக்கொண்டு, சிறிது கடன்பட்டுத் தன் வீட்டிலேயே இரண்டு தறிகளை அமைத்தான். கண்ட்ரோல் விலையில் பெரியசாமி நூலை வாங்கி வந்து, தான் அறிந்து வந்த முறைப்படி தயாரித்த நீலச்சாயத்தில் தோய்த்துச் சின்னச்சாமியுடன் நெய்வான். நாற்பது ஐம்பது துண்டுகள் சேர்ந்ததும், பெரியசாமி தானே அத் துண்டுகளை அக்கம் பக்கத்திலுள்ள ஊர்களுக்கும், சந்தைகளுக்கும் எடுத்துச் சென்று விற்று வருவான். உழைப்புக்குத் தகுந்த அளவு ஊதியம் வராவிட்டாலும் லாபம் ஓரளவு வந்தது. சிறிது சிக்கனமாக இருந்து பொருள் சேர்த்துத் தொழிலை மேலும் விரிவுபடுத்தலாமென்று எண்ணிய பெரியசாமியின் எண்ணத்தில் இடி விழச் செய்தது சின்னச்சாமியின் ஊதாரித்தனம். சங்கத்துக்கென்றும் சந்தாவுக்கென்றும், கைக்கு வரும் காசைச் சின்னச்சாமி கரியாக்கி வந்தான். தனி மனிதனின் உழைப்பும் சமூகத்தின் கூட்டு முயற்சியுமே நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கும். புரட்சிப் பேச்சுகளும் கிளர்ச்சி எழுத்துக்களும் பயன்படாது என்று அதிகம் படிக்காத பெரியசாமி, அனுபவத்தில் கண்டறிந்த உண்மையை வெகு நாசுக்காகத் தம்பிக்கு எடுத்துக் காட்டினான். ஆனால் சின்னச்சாமி தன் அண்ணனின் பேச்சுக்களைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ஒரு 'கால் கட்டை'க் கட்டினால் சின்னச்சாமி சீர்படுவானோ என்று நினைத்த பெரியசாமி, தேவானையை அவனுக்குக் கல்யாணம் செய்து வைத்தான். ஆனால் அதுவும் பலன் அளிக்கவில்லை.

சின்னச்சாமியின் ஊதாரித்தனமும் உறியடி வழுக்கு மரமா யிருந்த கைத்தறி வியாபாரமும் சேர்ந்து பெரியசாமியின் குடும்பத்தை வறுமையில் கொண்டு வந்து விட்டன. பெரியசாமி தன்னிடம் தேங்கிவிட்ட மூந்நூறு துண்டுகளையும் எடுத்துக் கொண்டு ஏற்கெனவே தனக்குப் பழக்கமாக இருந்த ஊர்ப் பக்கம் விற்று வருவதற்காகச் சென்றான். ஊரை விட்டுப் புறப்பட்டு நாற்பது நாட்களுக்கு மேலாகியும் பெரியசாமியிடமிருந்து








கடிதம் வராமற் போகவே, பார்வதி புழுவாய்த் துடித்தாள். பெரியசாமியின் மகன் மூத்து 'அப்பா! அப்பா!' வென்று அழுதான். அந்த நிலையில் விசாகப்பட்டினம் ஜில்லா வைத்திய அதிகாரியிடமிருந்து சின்னச்சாமிக்கு வந்த ஒரு தந்தி பார்வதியை உயிருடன் நெருப்பில் தூக்கி எறிந்தமாதிரி துன்புறுத்தியது. பெரியசாமி ஒரு பஸ்விபத்துக்கு ஆளாகிப் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியிலிருப்பதாக அந்தத் தந்தி கூறியது.

அப்போது பார்வதி பத்து மாத கர்ப்பிணியாக இல்லாவிட்டால் பெரியசாமியிடம் பறந்து சென்றிருப்பாள். சின்னச்சாமியை அனுப்பி விட்டு நல்ல செய்தி வரவேண்டுமே யென்று எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக் கொண்டாள். மூன்று நாள் கழித்துப் போன மச்சான் திரும்பி வந்தான் தனியாக. டாக்டர் தந்தி கொடுத்த அன்று மாலையே பெரியசாமியின் சரித்திரம் முடிந்து விட்டதாகவும் இறந்து இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் ஒருவரும் வராததால், பெரியசாமியின் இறுதிச் சடங்கை ஆஸ்பத்திரித் தோட்டிகளே அரசாங்கச் செலவில் செய்து முடித்து விட்டதாயும், சாகும் போது பெரியசாமியிடம் ரூ. 3-4-6-யும் சில துண்டுகளுமே பாக்கியிருந்ததாகவும், மற்றப்படி வேறு விவரங்களைத் தெரிந்து கொள்ள முடியவில்லை என்றும் கூறிச் சின்னச்சாமி தன் பிரயாண வரலாற்றை முடித்தான். சுடர் விட்டெரியத் தொடங்கிய பார்வதியின் குடும்ப விளக்குத் திடீரென்று அணைந்தது. விதவையான பார்வதி பிறகு சில நாட்களில் மூத்துவுக்கு ஒரு தம்பியைப் பெற்றாள். எனினும், தன் தாயின் வறுமைத் துன்பம் தன்னால் அதிகப்படக் கூடாதென்று நினைத்தோ என்னவோ, அந்தப் புது ஜீவாத்மா தன்னை மரணக் கணக்கில் பதிவு செய்து கொண்டு மண்ணுலகை விட்டு மறைந்து விட்டது.

அண்ணன் அநாதையாக மாண்டதும், அண்ணி விதவையானதும், மூத்து தகப்பனை இழந்ததும், 'பாட்டாளிகளின் தலைவன்'ன சின்னச்சாமியின் உள்ளத்தைத் தீண்டவே யில்லை. சின்னசாமிக்குத் தகுந்த ஜோடியான தேவானையும் அண்ணிக்கு ஆறுதல் அளிக்க முன்வரவில்லை. விசாகப் பட்டினத்திலிருந்து மீண்ட சில தினங்களுக்குள்ளாகவே, சின்னச்சாமி தேவானை ஆகிய இருவரது போக்கிலும் பெருத்த மாறுதல் காணப்பட்டது. பார்வதியும் மூத்துவும் அவ்விருவரது கருத்திலிருந்தும் கண்ணிலிருந்தும் சிறிது சிறிதாக மறைந்தனர். கணவனை இழந்த சில மாதங்களுக்குள்ளாகவே, வயிறு வளர்க்கத் தொழில் தேடி வீட்டை விட்டுப் பார்வதி வெளியேறும்படி ஆகி விட்டது.


தன் அண்ணிக்கும் தேவானைக்கும் ஒத்துக் கொள்ளவில்லை யென்று பொய்க் காரணம் கூறித் தனிக் குடித்தனம் வைத்தான் சின்னச்சாமி. ஆரம்பத்தில் வாரத்துக் கொருமுறை அண்ணி வீட்டுக்கு வந்து கொண்டிருந்த சின்னச்சாமி கையில் காசு ஏற ஏற அதையும் குறைத்துக் கொண்டான். நாலு தறிகள் போட்டு, எழெட்டுப் பேர்களுக்கு வேலை தரும் செல்வ நிலை, சின்னச்சாமிக்கு எப்படி வந்திருக்கலாம் என்பதைப் பற்றி ஊரில் பற்பல விதமாக வதந்திகள் உலவின. ஆயினும், பார்வதி அவற்றைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. தினக்கூலி வேலைக்கு வெளியே போய்த் திண்டாடாமல் மைத்துனர் கருணை கூர்ந்து தனக்கு வேலை தருகிறாரே என்று ஒருவாறு மனம் தேறிக் கிடைக்கும் கூலியைக் கொண்டு வயிறு வளர்த்ததோடு மூத்துவைப் பள்ளியிலும் படிக்க வைத்து வாழ்க்கையை நடத்தி வந்தாள்.

உலகம் சுழன்றது. முத்துவின் கைராட்டினமும் அதைவிட வேகமாகச் சுழன்றது. தங்கள் வயிற்றைக் கழுவத் தாயும் மகனும் இரவு பகலாய்ப் பாடு பட்டும், சிற்சில வேளைகளில் யாராவது ஒருவர் பட்டினி கிடக்கவே நேர்ந்தது.

பாச்சைப் பூச்சிகளுக்குப் பாதுகாப்பளித்துக் கொண்டு பயனற்றுப் பரண்மேல் கிடந்த தன் தகப்பனாரின் கைப் பெட்டியைப் பற்றிய நினைவு வரவே, முத்து ஒருநாள் அதை விற்றுவிட முடிவு செய்து கீழே இறக்கித் திறந்து பார்த்தான். நூல் சுற்றும் சில தகரக் குழாய்களும், செல்லரித்த சில காகிதங்களும் அதில் இருந்தன. அந்தக் காகிதங்களை எடுத்து முத்து படித்து வரும்போது நீலச்சாயக் கலவை முறையைப் பற்றிப் பெரியசாமி எழுதி வைத்திருந்த காகிதத் துண்டு கிடைத்தது. தன் தகப்பனார் தலையுடன் அந்த அருங்கலை அழிந்து விட்டதாக நினைத்து வருந்திக் கொண்டிருந்த முத்துவுக்கு அந்தக் காகிதத்துண்டு, செத்த உடலில் ஜீவனைப் புகுத்திய மாதிரி ஆயிற்று. அந்தச் சீட்டு, முத்துவின் வீட்டுக்குத் திருமகளை வரவேற்கும் வரவேற்பிதழாயிற்று. முத்துவின் வீட்டில் முன்னர் இருந்த இரண்டு தறிகளும் நீலத் துண்டுகளை நெய்தன. தாயும் மகனும் சொந்தத் தொழில் தொடங்கினர்.

பெரியசாமிக்கே உரிமையான நீலத் துண்டுகள் மறுபடியும் அவன் மகனை முத்துவினால் வெளிவரவும், பொது மக்களும் வியாபாரிகளும் 'மகனறிவு தந்தையறிவு' என்பது போல் பெரியசாமியின் முத்திரை முத்துவின் துண்டுகளிலும் காணப்படவே, ஆவலோடு வாங்கினர். முத்துவின் தொழில் வளர்மதி போல் பெருகிற்று. தன் வீட்டுக்குப் பின்னாலிருந்த காலி யிடத்தை முத்து வாடகைக்கு வாங்கி ஒரு கொட்டகை போட்டுப் பல தறிகளை . அங்கு அமைத்தான். நீலத் துண்டுகள் தயாராயின. இதனிடையில் சென்னை அரசாங்கத்தார், கைத்தறித் துணிகளுக்கு ஆதரவு காட்ட விரும்பி, சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லா ஆஸ்பத்திரிகளின் உபயோகத்துக்காகக் கைத்தறித் துண்டுகளையே வாங்க முடிவு செய்து அதற்கான விளம்பரமும் செய்தனர். பல நெசவாளிகள் மாதிரித் துண்டுகளை அரசாங்கத்தார் பார்வைக்கு அனுப்பி வைத்தனர். முத்துவும் தான் தயாரித்த நீலத் துண்டை அனுப்பி வைத்தான். வெற்றி நீலத் துண்டுக்குக் கிடைத்தது. வருஷத்துக்கு ஐம்பதினாயிரம் நீலத் துண்டுகள் வீதம் ஐந்து வருஷங்களுக்கு நீலத் துண்டுகள் விநியோகம் செய்யுமாறு முத்துவுக்கு உத்தரவு வந்தது.

முத்துவின் தறிக் கட்டடம் இப்போது "பார்வதி விலாச"மாக மாறி நீலத் துண்டுகளை உற்பத்தி செய்யும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டது. பார்வதி விலாசத்தில் பலர் தொழில் பெற்றனர். ஒருநாள் நடுப்பகல் மணி ஒன்றிருக்கும். முத்துவும் பார்வதியும் தனியறை யொன்றில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கையில் தலைவிரி கோலத்துடன் உள்ளே பாய்ந்த தேவானை, பார்வதியின் காலில் விழுந்து, "அக்கா......அக்கா எங்களை மன்னிச்சுக்கோ......எங்களை மன்னிச்சுக்கோ......நாங்கள் உங்களைத் துரோகம் செய்ததற்குக் கடவுள் எங்களை......நன்றாய்த் தண்டித்து விட்டார். அண்ணாவின் முந்நூறு ரூபாயை...... உங்கள்......மச்சான் திருடி......வியாபாரம் செய்தார். இப்போது எல்லாம் போச்சு......அவரையும் போலீஸார்......பிடித்துக் கொண்டு போயிட்டாங்க......எங்களைக்...காப்பாத்துங்க....காப்பாத்துங்க" என்று உளறினாள்.




தன் காலடியில் விழுந்து கிடந்த தேவானையைப் பார்வதி தூக்கி நிறுத்தி, "தேவானை, பதறாதே! என்ன நடந்தது! நீ சொல்வது புரியவில்லை. விளங்கச் சொல்" என்றாள்.

போன்றே உரிமையுண்டு. நான் இப்போதே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், ஜாமீன் கொடுத்து அவரை மீட்டு வருகிறேன். நீ கவலைப் படாமல் இங்கேயே இரு" என்றான் முத்து.

* * *

"முத்து!"

"சித்தப்பா!"

"உன்னை எப்படியடா நான் போற்றுவேன்!"

"என்னை எதற்குச் சித்தப்பா போற்ற வேண்டும்! தெய்வத்தைப் போற்றுங்கள்."

"நீதானடா என் கண்கண்ட தெய்வம். என்னைக் காப்பாற்றிய கடவுள்!"

"இல்லை! நான் உங்கள் மகன், சித்தப்பா!"

"உனக்குச் சித்தப்பனாயிருக்கும் யோக்கியதை எனக்கில்லை. வெட்கம் என்னைக் கொல்லுகிறது."

"மகன், தகப்பன் உறவிலே அன்புக்கும், மரியாதைக்கும் இடம் உண்டே தவிர, வெட்கம் குறுக்கிட அவசியமே யில்லை. நீங்கள் என் சிறிய தகப்பனாரா யிருப்பதில் நான் பெருமை கொள்கிறேன்."

"முத்து! பிறர் சிறுமைகளை மறக்கும் பெருந்தன்மை, சிறுவனாகிய உன்னிட மிருக்கிறது. எனக்கு வயதாகியும் என்ன! துரோகி! திருடன்!"

"பணம் போனால்...வரும். என் சிறிய தகப்பனாரை நான் இழந்தால், மறுபடியும் அவர் எனக்குக் கிடைப்பாரா!"

"அந்த எண்ணம் எனக்குமல்லவா இருக்க வேண்டும்! உங்களை வஞ்சித்தேன்; நடுத்தெருவில் விட்டேன்! அப்படிப்பட்ட என்னைச் சிறை புகுவதிலிருந்து மீட்டாயே!"

"தயவுசெய்து இனி இப்படிப் பேசாதீர்கள். என் தகப்பனாருடன் நீங்கள் பிறந்த அப்புனிதச் செயல் ஒன்றே போதும் எனக்கு, நான் உங்களுக்கு என் கடமையைச் செய்ய!"

"சரி, முத்து! நான் அதைப் பற்றி இனிமேல் பேசவில்லை. ஆனால் கொஞ்சநாள் தவணை கொடு. எங்காவது வேலைசெய்து அந்த மூந்நூறு ரூபாயையும் இப்போது நீ கொடுத்த அபராதத் தொகை இருநூறு ரூபாயையும் தந்து விடுகிறேன்."

"நீங்கள் எங்கும் போகக்கூடாது. இது உங்கள் வீடு...நான் சிறியவன். தொழில் அநுபவமில்லாதவன்...பார்வதி விலாஸத்தின் பொறுப்பை நீங்கள் ஏற்று நடத்த வேண்டும்."

## மன்னார்குடி நகராட்சி - அகில இந்திய



# இழந்த நாணயம்

ரா. வீ.

**1879**-ம் வருஷம் என்று ஞாபகம். அப்பொழுது ருஷ்யச் சரித்திர இலாக்காவுக்குத் திரு கௌண்ட் ஸ்டிரா கோனுப் என்பவர் தலைவராயிருந்தார்.

ஒரு நாள் அந்தி மயங்கும் மாலை நேரத்தில்-அப்பொழுது நல்ல கடுங்குளிர் காலம் என்று எண்ணுகிறேன்.-கௌண்ட் ஸ்டிரா கோனுப்பின் அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்த எழில் மிகுந்த மாளிகையிலே நகரத்தின் பல பாகங்களிலிருந்தும் பல பிரமுகர்கள் வந்து கூடியிருந்தனர், கௌண்ட் ஸ்டிரா கோனுப்பின் அழைப்புக் கிணங்க. வந்திருந்த விருந்தினர்கள் அனைவரும் சாதாரணமாகச் சோடை போகக் கூடியவர்கள் அல்ல. அறிவு உலகத்திலேயே விரல் விட்டு எண்ணிவிடக் கூடியவர்கள்; அறிவின் மேல் அடுக்குகள் பல கொண்ட மாளிகைக்குத் தாங்கும் தூண்களைப் போன்றவர்கள். சமூகத்தில் அவர்களுக்கு இருந்த செல்வாக்கும் மதிப்பும் கௌண்ட்ஸ்டிரா கோனுப்புக்குச் சிறிதும் தாழ்ந்ததல்ல. அறிவுத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் கூட அவர்கள் கௌண்டுக்குச் சரிநிகர் சமானமானவர்களாகவே இருந்தார்கள். யாரையும் ஏற்றித் தாழ்த்திச் சொல்லிவிட முடியாது. தம் அந்தஸ்துக்கு லவலேசம் கூடக் குறைந்திருந்தால், கௌண்ட்தான் அவர்களுக்கு அழைப்பு அனுப்பி யிருப்பாரா? அல்லது அவர்கள்தான் கௌண்டின் வீட்டுக் குத்துக் கல் ஏறி யிருப்பார்களா?

சரித்திர ஆராய்ச்சித் துறை அதிபர் என்ற முறையில் கௌண்ட் ஸ்டிரா கோனுப்பின் புகழ் பாரெங்கும் பரவியிருந்தது. சரித்திர ஆராய்ச்சியாளர் சங்கத்தின் சார்பில் கிடைத்த சரித்திர மகத்துவம் வாய்ந்த எந்தப் பொருளையும் பாதுகாத்து வரும் பொறுப்பு ஸ்டிரா கோனுப்பைத் தான் சேர்ந்தது. அன்று மாலை நடந்த விசேஷக் கூட்டம் சரித்திர ஆராய்ச்சி சம்பந்தமான ஏதோ முக்கிய விஷயத்தைப் பற்றிப் பரஸ்பரம் அபிப்பிராயம் பரிமாறிக் கொள்ள வேண்டித்தான் கூட்டப்பட்டிருந்தது.

ஹெர்மிடேஜ் கண்காட்சிச் சாலையின் அறிவு மிகுந்த அதிபரை ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டு கௌண்ட் ஸ்டிரா கோனுப் கூறினார்: "நண்பர்களே! பழங் காலத்து நாணயங்களை நாம் நாட்டு மக்களின் நலனுக்காகவே சேர்த்து வைத்திருக்கிறோம் என்பதை நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். அதன் காரணமாகவேதான், நான் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த பல்வேறு நாணயங்களை என் கஜானாவில் உள்ள இரும்புப் பெட்டியில் மிகவும் ஜாக்கிரதையாகச் சேர்த்து வைத்து வருகிறேன்."

கடைசி வாக்கியத்தை முடிக்கும் பொழுது ஸ்டிராகோனுப் அங்கே கூடியிருந்த அறிவில்



முதிர்ந்த எல்லா விருந்தினர்களையும் நம்பிக்கை மிகுந்த பார்வையுடன் ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார்.

நம்பிக்கை மிகுந்த அந்தப் பார்வையின் பொருளைப் புரிந்து கொண்டார் பேராசிரியர் காலா காப். அவர் அநுபவமும் வயதும் ஒருங்கே முதிர்ந்த பேராசிரியர். ஸ்லாவோனிக் இலக்கியத்தில் அவர் மிகத் தேர்ந்தவர் என்பது மக்களின் அபிப்பிராயம். ஸ்டிராகோனுப்பின் அபிப்பிராயத்தை ஆதரிக்கும் முறையில் அவர், "நான் தங்கள் அபிப்பிராயத்தை முழு மனத்துடன் ஆதரிக்கிறேன். பண்டைய காலத்து நாணயங்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமே. பாரிஸில் உள்ள கண்காட்சி சாலையில் வித விதமான எத்தனை நாணயங்கள் நேர்த்தியான முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷய மாகையால் நான் சொல்லத் தேவையில்லை!'' என்றார்.



"கிடைத்தற்கரிய நாணயங்களைப் பற்றிய பேச்சு இங்கே இச்சமயம் எழுந்திருந்திருப்பதால்......'' என்று ஆரம்பித்தார் பைரன் ஸ்திகலிஜ். அவர் ஸெண்ட் பீடர்ஸ் பர்க்கில் உள்ள ஸ்திகலிஜ் கலைக் காட்சியின் ஸ்தாபகர். தம் பரந்த அறிவைப் பிறர் பார்த்துப் பொறாமைப் படவேண்டும் என்ற பாணியில் அவர் பேசினார்: "இதோ பாருங்கள்! நான் உங்களுக்கெதிரே ஒரு கிடைத்தற்கரிய நாணயத்தை வைக்கிறேன். இதன் உதவியைக் கொண்டு மாபெரும் சரித்திரத்துக்கு மறைவிடமாக இருக்கும் இரகசியம் வெளியாகலாம். இந்த நாணயம் கான்ஸ்டன்டெயின் என்னும் அரசர் காலத்தில் வழங்கி வந்ததாகத் தோன்றுகிறது. இது அவர் காலத்தில் ருஷ்யாவில் செலாவணி ஆகி வந்த நாணயம்தான் என்பதில் எள்ளளவும் சந்தேகத்துக்கு இடம் இல்லை!''

இதைச் சொல்லி முடித்ததும் அவர் தம் சட்டைப் பையிலிருந்து பளபள வென்று ஜொலிக்கும் வெள்ளி நாணயம் ஒன்றை மேஜையின்மீது எடுத்து வைத்தார்.

''கான்ஸ்டன்டெயினின் நாணயமா? இப்பொழுதுதான் நாணய சாலையிலிருந்து வார்த்து வந்தது போல் அல்லவா இருக்கிறது! பைரன், இது உங்களுக்கு எங்கே கிடைத்தது? எப்படிக் கிடைத்தது?''

அதைக்கேட்ட கௌண்ட் ஸ்டிராகோனுப்பின் குரலில் வியப்பும் மகிழ்ச்சியும் குமிழியிட்டுக் கொண்டு வெளிவந்தன.

வந்திருந்த விருந்தினர்களின் வதனங்களிலும் வியப்பு உணர்ச்சி கோடிட்டது. எல்லோருடைய நாவிலும் மனத்திலும் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு முந்திய சரித்திரத்தின் மங்கித் தூசி படிந்த ஏடுகள் ஒவ்வொன்றாகப் புரண்டு கொடுத்தன.

கான்ஸ்டன்டெயின் முதலாவது அலெக்ஸாண்டரின் சகோதரன். அவனுக்கு ருஷ்யாவின் தெய்விக சக்தி வாய்ந்த ஜார் மன்னாக ஆகும் பாக்கியம் ஒரு பொழுதும் கிட்டவில்லை. ஆயினும்

## அறிவை அழிக்கும் போட்டிகள்

**ப**ல வருஷ காலமாகவே போட்டிப் பந்தயங்களும், அவற்றை ஒழிக்க வேண்டுமென்ற அபிப்பிராயமும் இந்நாட்டிலே இருந்து வந்திருக்கின்றன. ஆனால் இப்போது விஷயம் விபரீதமாகி விட்டது. தினத்துக்கொரு புதுப் போட்டிப் பந்தயம், பல்லாயிரக் கணக்காகப் பணம் பரிசு அளிப்பதாகச் சொல்லிக் கிளம்புகிறது. பணத்துக்குக் கஷ்டப் படும் மக்கள் இவ்வளவு எளிய வழியில் கொள்ளைப் பணம் கிடைத்தால் விடுவானேன் என்று போட்டியில் ஈடுபட்டுத் தம் பணத்தை இழக்கின்றனர்.

குறைவான மாத வருமானம் உள்ள பலர் மாதம் பத்துப் பதினைந்து என்று இப்போட்டிகளுக்குச் செலவிடுவதை நாம் பார்க்கலாம். அந்தப் பணம் போனது நிச்சயம்; பரிசு வருவது நிச்சயமில்லை. ஆனால் அவர்கள் அதைப் பாங்கியிலோ, சேமிப்பு நிதியிலோ போட்டு வைத்தால் அங்கே பணம் சேருவது நிச்சயமாயிருந்திருக்கும். கம்பளி வரப் போகிறது என்று கந்தலையும் எறிந்து விட்டுக் குளிரால் வாடிய இடையன் கதிதான் இவர்களுக்கு ஏற்படுகிறது.

பாமர மக்கள் குடியால் கெட்டு விடுகிறார்கள் என்று மது விலக்குச் செய்தோம். இப்போது படித்தவர்கள்கூட – அரசாங்கத்திலும் பெரிய காரியாலயங்களிலும் நிறையவும் சுமாராகவும் குறைவாகவும் சம்பளம் வாங்கும் எல்லாரும் அறிவை இழந்து, ஆசைக்கு அடிமையாகி, இப் போட்டிகளில் கலந்து கொண்டு கைப் பொருளையும் இழக்கிறார்களே, இதற்கு நாம் ஒரு விலக்குச் செய்ய வேண்டாமா!

இப்போட்டிகளில் லக்ஷக் கணக்கானவர்கள் கலந்து கொண்டு பொருளை இழக்கிறார்கள். யாரோ ஒருவருக்கு வெற்றி கிடைத்தது என்று பரிசளிக்கிறார்கள். அந்தப் பரிசளிப்பு வைபவத்தை உயர்தர உத்தியோகஸ்தர்களும், ராணுவத் தலைவர்களும், மந்திரிகளும், அரசியல் தலைவர்களும், கூட இருந்து நடத்தி வைக்கிறார்கள். அதனால் அவர்கள் எல்லாம் இப் போட்டிகளை ஆதரிக்கிறார்கள் என்று ஆகிறதே; பல்லாயிரம் புது நபர்கள் போட்டிக்குப் பலியாகத் தொடங்கி விடுகிறார்களே! இது எப்போது நிற்கும்!

மயிலாப்பூர்
21-3-54

ஸ்ரீநிவாசன்

தவிர்க்கமுடியாத சில பிரமைகளின் காரணமாக அவன் பேரில் நாணயங்கள் சில வார்க்கப்பட்டு விட்டன. கி. பி. 1825-ம் ஆண்டில் முதலாவது அலெக்ஸாண்டர் காலமாகி விடவே, பரம்பரை வழக்கப்படி ஜார் அரசனின் சிங்காதனத்துக்கு வாரிசானவன் கான்ஸ்டன்டைன். ஆனால் அவன் ஒரு சாதாரண குடும்பத்துப் பெண்ணை மணந்து கொண்டதனால் இகலோக ராஜ வாழ்வை இழக்கும்படியாகி விட்டது. சிங்காதனத்தின் உரிமையைப் பறி கொடுக்கும்படியாகி விட்டது. சிங்காதனம் ஏறியதும் அவன் சிங்காதனத்திலிருந்து இறக்கப்பட்டு விட்டான். ஆனால் அதற்குள்ளாக அவன் பேரில் நாணயங்கள் வார்க்கப்பட்டு விட்டன.

கான்ஸ்டன்டைன் சிங்காதனத்திலிருந்து இறக்கப்பட்டதும், முதலாவது நிகோலஸ் ஜார் அரசனானான். கான்ஸ்டன்டைனின் பெயரில் வார்க்கப்பட்டிருந்த நாணயங்கள் கிடைத்தற்கரிய நாணயங்களின் வரிசையில் சேர்க்கப்பட்டு விட்டன.

கிடைத்தற்கரிய நாணயங்களில் ஒன்றைத்தான் பைரன் ஸ்திகலிஜ் பெருமிதமும் பெருவகையும் கொண்ட உள்ளத்துடன் விஜயம் செய்திருந்த அறிவாளிகளுக்குக் காட்டிக் கொண்டிருந்தார்.

"ஆம்; நான் 1825-ம் ஆண்டின் டிஸம்பர் மாதத்தை ஒரு நாளும் மறக்க முடியாது."

சரித்திர ஆராய்ச்சியிலே அதிகம் தேர்ந்தவரான பேராசிரியர் புல்லேப் சரித்திர அறிவென்னும் தம் பொக்கிஷத்தையே வாரி வழங்கத் தொடங்கி விட்டார்: "சக்கரவர்த்தி கான்ஸ்டன்டைனின் முத்திரையிட்டு வார்ஸாவுக்குக் கடிதங்கள்கூட அனுப்பப்பட்டு விட்டன. சேனைத் தலைவர்கள் தங்கள் தங்கள் படையுடன் புதிய சக்கரவர்த்தியிடம் நம்பிக்கை தெரிவித்து விசுவாசப் பிரமாணம்கூட எடுத்துக் கொண்டு விட்டார்கள். ஆனால் காலச் சக்கரம் அதற்குள்ளாகச் சுழன்று கொடுத்து விட்டது. வாலிபனான நிகோலஸை அரசன் என்று அரசியல் அவை பிரகடனம் செய்து விட்டது. அஞ்சா நெஞ்சம் படைத்த நிகோலஸின் வீரத்தை நாம் மெச்சித்தான் ஆகவேண்டும். அவன் தன் நாட்டை மோசம் போவதிலிருந்து காத்து விட்டான். கான்ஸ்டன்டைனின் ஆசைகளைத் தன் வாளின் பலங்கொண்டு வெட்டி வீழ்த்து விட்டான். ......கடவுள் அவனுக்கு அழியாப் புகழ் அளிப்பாராக!"

பேராசிரியரின் பேச்சு கடல் மடை திறந்து விட்டது போலப் போய்க்கொண்டேயிருந்தது. அதற்கு மடை போடுவதுபோல் பரிசாரகன் உள்ளே நுழைந்து வணக்கம் தெரிவித்தான். அடுத்த கணம் தும்பைப் பூ போன்ற வெள்ளையுடை தரித்த பரிமாறுபவர்கள் மேஜைமீது சுடச் சுட ஸாண்ட்விச், கேக், முட்டை முதலியவற்றை அழகிய தட்டுகளில் நேர்த்தியாக அலங்கரித்துக் கொண்டு வந்து வைத்தார்கள்.

**சி**ற்றுண்டி அருந்தி முடிந்ததும் பைரன் ஸ்திகலிஜ் எழுந்து, "நண்பர்களே! நான் விடை பெற்றுக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். தயவு செய்து தவறாக நினைக்காமல் நான் கொண்டு வந்த நாணயத்தை என்னிடம் திருப்பிக் கொடுத்து விடுங்கள்!" என்றார்.

கௌண்ட் ஸ்டிரா கோனுப், "ஆம், நண்பர்களே! நீங்கள் எல்லோரும் பைரன் ஸ்திகலிஜ் கொண்டு வந்த நாணயத்தை நன்றாகப் பார்த்து விட்டீர்கள். எனவே, அதை அவரிடம் திருப்பிக் கொடுத்து விடலாம் அல்லவா?" என்று கேட்டார். பிறகு, பேராசிரியர் காலாகாப்பின் பக்கம் திரும்பிய

படி நாணயத்தை உங்களிடம்தானே கொடுத்தேன்?" என்று கேட்டார்.

"ஆம், என்னிடம்தான் கொடுத்தீர்கள். ஆனால் நான் அதை மிஸ்டர் புஸ்லைப்பிடம் கொடுத்து விட்டேனே!" என்றார் காலாகாப்.

இப்படியே ஒவ்வொருவரும் தம் தம் பக்கத்தில் உள்ளவர்களின் பெயர்களைச் சொன்னார்கள். உண்மையில் ஒவ்வொருவரும் அந்த நாணயத்தைத் தங்கள் தங்கள் கையில் வாங்கிப் பார்த்திருந்தார்கள். ஆனால் அது என்ன ஆயிற்று, திடுதிப்பென்று எப்படி மறைந்தது என்பதுதான் புரியவில்லை.

கௌண்ட் ஸ்டிரா கோனுப் தம் கோட்டைக் கழற்றி உதறினார். எல்லா விருந்தினர்களையும் அப்படியே செய்யுமாறு வேண்டிக் கொண்டார். அவருடைய வேண்டுகோளின் படியே எல்லோரும் தம் தம் கோட்டுகளைக் கழற்றினார்கள். ஆனால் பேராசிரியர் காலாகாப் மட்டும் தம் கோட்டைக் கழற்றவும் இல்லை; உதறவும் இல்லை. ஏன்? தம் பையில் கைவிட்டுத் தேடிக் கூடப் பார்க்கவில்லை.

கௌண்ட் அதைச் சுட்டிக்காட்டி, "பேராசிரியர் அவர்களே! நான் மிகவும் வருந்துகிறேன். ஆனால் வேறு வழியின்றிச் சொல்லித்தான் ஆக வேண்டியிருக்கிறது. தயவு செய்து தாங்களும் தங்கள் கோட்டைக் கழற்றி உதறிப் பாருங்கள்!" என்றார்.

"மன்னிக்க வேண்டும். நான் என் கோட்டைக் கழற்றி உதற முடியாததற்கு மிக மிக வருந்துகிறேன்!" என்றார் பேராசிரியர் காலாகாப்.


கௌண்ட் ஸ்டிரா கோனுப் வியப்பில் ஆழ்ந்தார். ஆயினும் அவர் மறுபடியும் ஒரு முறை, "பேராசிரியர் அவர்களே! தாங்கள் தீய நோக்கம் கொண்டவர் என்பது என் சந்தேகம் அல்ல. ஆயினும் இன்று உங்களைப் போன்ற மதிப்புக்குரிய பெரியார்களை இங்கே வரவழைத்தவன் என்ற முறையில் சொல்கிறேன். ஏனெனில் பைரன் ஸ்திகனிஜ் கொண்டு வந்த நாணயம் கெட்டுப் போனது என் வீட்டில் அல்லவா?" என்று கேட்டார்.


"ஆமாம். ஆயினும் தங்கள் பேச்சை இவ்விஷயத்தில் கேட்க முடியாமைக்கு நான் மிகவும் வருந்துகிறேன்!" என்று திரும்பவும் அதே பதிலைத் தான் சொன்னார் பேராசிரியர் காலாகாப்.

பைரன் ஸ்திகனிஜினால் பேசாமல் உட்கார்ந்திருக்க முடியவில்லை. "அது எப்படி முடியும்? நாணயத்தைப் பூதம் வந்து எடுத்துக் கொண்டு போயிருக்க முகாந்திரம் ஏதும் இல்லையே!" என்றார்.

கௌண்டும் பைரனும் எவ்வளவோ சொல்லியும் கூடப் பேராசிரியர் தம் கோட்டைக் கழற்றி உதறவில்லை. கடைசியில் கௌண்ட் ஸ்டிரா கோனுப் கொதித்தெழும் கோபக் குரலில், "பைரன்! நான் வெறும் 'செக்'கில் கையெழுத்திட்டுத் தருகிறேன். நீங்கள் அந்த நாணயத்தை எங்கு பெற்றிருந்தாலும் சரி, எவ்வளவு செலவழித்துப் பெற்றிருந்தாலும் சரி, அதே மாதிரி நாணயம் இப்பொழுது ஐம்பது மடங்கு விலையில் கிடைத்தாலும் சரி, வாங்கிக் கொண்டு விடுங்கள். இந்தச் சிரமம் தங்களுக்குத் தர நேருவதற்காக என்னை மன்னிக்குமாறு வேண்டுகிறேன்......அப்புறம் பேராசிரியர் அவர்களே! தாங்கள் என் நண்பர் என்பதை எண்ணும்பொழுது என்னை வெட்கம் பிடுங்கித் தின்கிறது. இன்று முதல் தாங்கள் என் வீட்டு வாசற்படியில் அடியெடுத்து வைக்காதீர்கள்!" என்றார்.

சமீப காலம் வரை பம்பாய் ஜெனரல் மோட்டார்ஸ் இந்தியா லிமிடெட் கம்பெனியின் பொக்கிஷதாராக இருந்த ஸ்ரீ ஆர். நாராயணய்யர் பம்பாய் பார்க் டேவிஸ் அண்டு கம்பெனியின் பிரதான நிர்வாகப் பொறுப்பாளராகப் பதவி ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்னும் மகிழ்ச்சியூட்டும் செய்தி வந்திருக்கிறது. ஸ்ரீமான் அய்யர் இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஜெனரல் மோட்டார்ஸ் கம்பெனியாருடன் தொடர்பு பூண்டிருந்தார். 1950ல் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் உள்ள கம்பெனியின் தொழிற்சாலைகளைப் பார்வை யிட்டார். மேலும் யுத்த காலத்தில் இந்திய அரசாங்கத்தின் ராணுவக் கணக்கு இலாக்காவில் உதவி கண்ட்ரோலராகவும், கப்பற் படைக் கணக்கு இலாக்காவில் உதவி கண்ட்ரோலராகவும், அரசாங்கத்தின் உதவிப் பொருளாதார ஆலோசகராகவும் பணியாற்றி யிருக்கிறார்.






பேராசிரியர் காலாகாப் பதில் பேசாமல் அங்கிருந்து விடை பெற்றுக் கொண்டார். எல்லோருடைய சந்தேகப் பார்வையும் பேராசிரியரை விழுங்கி விட்டுத் தான் மறு காரியம் என்பது போல் கண் மறையும் வரை அவரையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தன.

* * *

**வ**ருஷா வருஷத்தைப் போலவே இந்தத் தடவையும் அக்டோபர்மாதத்தில்கௌண்ட் ஸ்டிரா கோனுப் தம் மாளிகையைத் தூசு தும்பட்டை அடித்துச் சுத்தம் செய்யச் சொல்லிக் கொண்டிருந்தார். வர்ணம் பூசும் வேலை முடிந்து விட்டது. தரைக்குப் போடப்பட்டிருந்த விரிப்புகள் வெளுப்பதற்காக அனுப்பப்பட்டு விட்டன.

அன்றுமாலை வழக்கம்போலக் கௌண்ட் தமது வேலைக்காரர்களுள் முதல்வனைக் கூப்பிட்டு, "ஒரு பொருளும் கெட்டுப் போகவில்லையே! எல்லாம் சரியாக இருக்கின்றன அல்லவா?" என்று கேட்டார்.

"ஒன்றும் கெட்டுப் போகவில்லை. ஆனால் சில பொருள்கள் கிடைத்திருக்கின்றன. இவை தாம் அவை" என்று கூறி அவன் சில சிறிய சிறிய பொருள்களைக் கொண்டு வந்து கௌண்ட் ஸ்டிராகோனுப் பின் மேஜை மீது வைத்தான்.

அவற்றைப் பார்த்த கௌண்டுக்கு உண்டான வியப்புக்கு ஓர் எல்லையில்லை. கெட்டுப் போன, கிடைத்தற்கரிய பொருள் என்று எண்ணியிருந்த காணயம் திரும்பவும் அவர் எதிரே கிடந்ததுதான் அவருடைய அந்த வியப்புக்குக் காரணம். அவர் ஆச்சரியத்துடன் அந்த வேலைக்காரனைப் பார்த்து "ஏனப்பா, இது உனக்கு எங்கே கிடைத்தது?" என்று கேட்டார்.

"எசமான்! இது விருந்தினர்கள் வந்தால் உபசரிக்கும் அறை இருக்கிறதல்லவா? அந்த அறையில் விரிப்புக்குக் கீழே கிடந்து கிடைத்தது!" என்றான் அவன்.

கௌண்டின் முகத்திலே ஆனந்தமும் அநுதாபமும் ஏக

# கடுமையான வெப்பத்திலும் உற்சாகமும் சுருசுருப்பும்!



வெய்யில் அதிகரித்தால் குடல் மந்திப்பது சகஜம். அதன் பயனாக சரீரத்தில் விஷக்கழிவுகள் சேர்ந்து, 'களை' உணர்ச்சியும் அலுப்பும் சோர்வும் உண்டாக்கும். புத்துணர்ச்சி தரக்கூடிய தள தளக்கும் ஈனோஸ் 'ப்ரூட்ஸால்ட்' சாப்பிடுங்கள். அதன் சௌமிய விரேசக குணம் எல்லா விஷக் கழிவுகளையும் வெளியேற்ற உதவி, உங்களை குளுமையாக, உற்சாகம் ததும்ப வைத்திருக்கிறது.

# ஈனோஸ் 'ப்ரூட் ஸால்ட்'

உங்களை தெம்பாகவும் சுருசுருப்பாகவும் வைத்திருக்கிறது

புதுமை கெடாமலிருக்க புட்டிகளில் விற்கப்படுகிறது.

'ஈனோ' மற்றும் 'ப்ருட்ஸால்ட்' என்ற பதங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்குகள்



## இடம் இல்லை!

நான் ஓர் ஹையர் கிரேடு டிரெயினிங் முடிந்த உபாத்தியாயினி. என் குடும்பம் சுமார் பன்னிரண்டு பேர் அடங்கியது. வயது சென்ற தாய் தந்தையர், சகோதர சகோதரிகள் அடங்கியது. ஆனால் ஏழைக் குடும்பம். எவருக்கும் ஒரு தொழிலும் தெரியாது. நான் ஒருத்திதான் சம்பாதித்து என் பெரிய குடும்பத்தைக் காக்க வேண்டும். இதன் பொருட்டே வயது இருபத்தாறு ஆகியும் நான் விவாகம் செய்து கொள்ளாமல் இருக்கிறேன். சுமார் மூன்று வருஷங்களாக நான் தென்னாற்காடு ஜில்லா போர்டில் வேலை தரும்படி எட்டு விண்ணப்பங்கள் போட்டிருக்கிறேன். ஆனால் இதுவரை எனக்கு எந்தவிதமான பதிலும் வந்தது கிடையாது.

15-12-53 ல் நான் நேரில் போய் விசேஷ அதிகாரியைக் கண்டு என் கஷ்டத்தையும் குடும்ப நிலவரத்தையும் சொல்லி வேலை தரும்படி கேட்டேன். "எங்கே வேலை கொடுத்தாலும் போக முடியுமா?" என்று அவர் கேட்டார். தடையில்லாமல் போகிறேன் என்று சொன்னேன். "நீங்கள் போகலாம். இன்னும் ஒரு வாரத்திற்குள் உத்தரவு அனுப்புகிறேன்" என்று சொன்னார். ஆனால் உத்தரவு ஒன்றும் வரவில்லை.

வேலை விஷயமாகப் பல தடவைகள் ஜில்லா போர்டு காரியாலயத்தை முற்றுகையிட்ட பிறகு, 24-2-54-ல் ஜில்லா போர்டிலிருந்து ஒரு கார்டு வந்தது. அதில் 'இப்போது இடமில்லை' என்று எழுதப் பட்டிருந்தது. இதைப் பார்த்த என் ஏழை நெஞ்சு பட்டபாடு கடவுளுக்குத்தான் தெரியும். இதற்காகவா இவர்களை நம்பி ரூ. 56- வரையில் கடன் வாங்கிச் செலவு செய்தேன்! இந்தப் பதிலை மூன்று வருஷங்கள் கழித்தா சொல்ல வேண்டும்? எனக்குப் பிறகு இந்த மூன்று வருஷங்களாக ஜில்லா போர்டில் யாருக்கும் வேலை கொடுக்க வில்லையா! அநேகம் பேருக்கு வேலை கொடுத்திருப்பதையும் நான் அறிந்திருக்கிறேன்.

என்போன்ற ஏழைகளுக்கு இந்த ராஜ்யத்திலேயே இடம் இல்லை போலும்! என்னைப் போல் எவ்வளவு பேர் இப்படி கஷ்டப்படுகிறார்களோ! கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

நரசம்பேட்டை
15—3—54 — என். மேரி

காலத்தில் குமிழி யிட்டன. 'அப்படியானால் பேராசிரியர் காலாகாப் இந்த நாணயத்தைத் திருடவில்லையா? நான்தான் எல்லாருக்கும் எதிரே அவரை வீணில் அவமானப் படுத்தினேனா? பழி ஓரிடம், பாவம் ஓரிடம் என்கிறார்களே! அது எவ்வளவு உண்மை!'—இப்படியாக அவர் மனத்திலே சிந்தனை ஓடியது.

"ஆமாம். பேராசிரியர் காலாகாப் தாம் நிரபராதி என்பதை ஏன் அப்பொழுதே நிரூபித்திருக்கக் கூடாது? அவர் ஏன் சட்டையை உதறாமல் பிடிவாதமாக எழுந்து சென்று விட்டார்?' என்ற எண்ணம் வேறு எழுந்து அவர் மூளையைக் குழப்பியது.

அதை நினைக்க நினைக்க அவரால் அங்கே உட்கார்ந்திருக்க முடியவில்லை. நண்பரை அவமானப்படுத்தியது முள்ளாகக் குத்தியது. உடனே தம் நண்பரைக் காணக் காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

"பேராசிரியர் அவர்களே! என்னை மன்னிக்கணும். தங்களை நான் வீணில் அவமானப் படுத்தி விட்டேன்" என்று கூறி முதல் காரியமாகப் பேராசிரியர் காலாகாப்பை அன்புடன் ஆலிங்கனம் செய்து கொண்டார், சரித்திர ஆராய்ச்சிக் கழகத் தலைவரான கௌண்ட் ஸ்டிரா கோனுப்.

"தாங்கள் தங்கள் தவறைப் பின்னால் புரிந்து கொள்வீர்கள் என்பது எனக்கு அப்பொழுதே தெரியும். அதனால்தான் நான் அப்பொழுது எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டேன்!" என்றார் பேராசிரியர் காலாகாப். அப்பொழுது அவருடைய உதடுகளில் இலேசாகப் புன்னகை படர்ந்தது.

"அதிருக்கட்டும், புரொபஸர்! அன்று தாங்கள் எல்லோருக்கும் சந்தேகம் வரும்படி நடந்து கொண்டீர்களே, எதற்காக?" என்று கேட்டார் கௌண்ட் ஸ்டிரா கோனுப்.

"அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை!"

"என்ன காரணம்? கடவுள்மீது ஆணை. இன்னும் என்னிடம் ஒளித்து விளையாடாதீர்கள். உண்மையைச் சொல்லுங்கள்!" என்றார் கௌண்ட் ஸ்டிரா கோனுப்.

"நான் பைரனின் நாணயத்தை எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் என்னிடத்திலும் அதே போன்ற கான்ஸ்டன்டைனின் நாணயம் இருந்தது. ஏன்? இன்றுகூட அது என்னிடம்தான் இருக்கிறது. அந்த நாணயத்தைப் பைரன் எந்தக் கடையில் வாங்கினாரோ, அதே கடையில்தான் நானும் என் நாணயத்தை வாங்கினேன். அந்தச் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த நாணயத்தைத் தங்களுக்குக் காட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் கொண்டு வந்தேன். ஆனால் பைரன் என்னை முந்திக்கொண்டு விட்டார். ...இப்பொழுது நீங்களே சொல்லுங்கள். அப்பொழுது அவருடைய நாணயமோ கெட்டு விட்டது. என் கையிலோ அதே மாதிரி நாணயம் இருந்தது. அப்பொழுதிருந்த நிலைமையில் நான் என் கோட்டை உதறி அந்த நாணயம் வெளிப்பட்டிருந்தால், நீங்கள் எல்லோரும் என்ன எண்ணுவீர்கள்?...... கையும் களவுமாகத் திருடன் பிடிபட்டதாக எண்ண மாட்டீர்களா? அப்படிப் பிடிபடுவதைக் காட்டிலும், நான் நடந்துகொண்ட விதம் ஒரு விதத்தில் நல்லதில்லையா?" என்று கேட்டுக் கொண்டே பேராசிரியர் காலாகாப் அதே கிடைத்தற்கரிய நாணயத்தைத் தம் சட்டைப் பையிலிருந்து எடுத்து மேஜை மீது வைத்தார்.

தம் நாணயத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பேராசிரியர் காலாகாப் கையாண்ட யுக்தி கௌண்ட் ஸ்டிரா கோனுப்பைப் பெரும் வியப்பில் ஆழ்த்தியதில் ஆச்சரியம் என்ன? —ருஷ்யக் கதை.


தெம்பூட்டுகிறது
காலையில் உபயோகித்தால்!
மென்மை உணர்ச்சி
மணிக்கணக்காய் மாறுது!
காஷ்மீர் பொக்கே டேல் எவ்வளவு தெம்பூட்டுகிறது! அந்த மென்மை உணர்ச்சி மணிக் கணக்காக நீடிக் கிறது! ஈரத்தை உறிஞ்சி, அரிப்பும் புண் ணும் வராமல் தடுக்கிறது. குளுமை மணம், புத்துணர்ச்சி அளிக்கிறது.
கால்கேட் 1806 முதல்
தரத்துக்குப் பெயர்போனது
காஷ்மீர்
பொக்கே
டால்கம் பவுடர்
ஆண்கள் விரும்பும் நறுமணம்
Cashmere
Bouquet
TALCUM POWDER
CBG/15


நாள் முழுதும்
கவர்ச்சிகரமாய்
இருக்க
பியர்லீன்
ப்ரெஞ்சு லாவண்டர்
பிரிலியன்டைன்
இயற்கையான ப்ரெஞ்சு லாவண்டர் புஷ்பங்களிலிருந்து தயாரிக்கப்பட்டது. தனிச்சிறப்பும், கண்யமும் பெற அதை தினசரி விடாது உபயோகிக்கவும்.
பியர்லீன்
ப்ரெஞ்சு லாவண்டர்
தற்காலத்திற்கேற்ற, ஒரு லட்சியமான புத்துணர்ச்சியளிக்கும் சாதனம் ஸ்நானத்திற்குப் பின்னர் அதை உபயோகித்து நாள் முழுவதும் குளிர்ச்சியுடனிருங்கள்.
பியர்லீன்
ஓ-டி-கொலோன்
PEARLINE-PARIS LTD. P. O. Box No. 493, BOMBAY

# சமாதான வீரர்களின் யாத்திரை

எல். வி. எஸ். மணியன்

## 4


கொரியாவுக்கு விமானங்களில் இந்திய தினசரிகளும், பத்திரிகைகளும் வந்து கொண்டிருந்தன. "ஸ்டார்ஸ் அண்டு ஸ்டிரைப்ஸ்" என்ற அமெரிக்க ஆங்கிலத் தினசரி தினந்தோறும் கிடைத்தது. இவைகளைத் தவிர "சாந்தி சமாசார்" என்ற தினசரித் தான் சாந்தி நகரிலிருந்து (அதாவது பான் மூன் ஜாம்) பொது ஜனத் தொடர்பு அதிகாரிகளால் வெளியிடப் பட்டு வந்தது. நடுநிலைமைக் கமிஷன் காரியாலயத்திலிருந்தும், 'இத்தனை கைதிகள் இன்று திரும்பிச் சென்றார்கள்'— போன்ற தினசரி நடவடிக்கைகளைத் தெரிவிக்க ஒரு செய்தித்தான் வெளியிட்டனர்.

அமெரிக்கர்களால் நடத்தப்பட்ட 64-வது தள ஆஸ்பத்திரியில் தினந்தோறும் திறந்த வெளியில் ஆங்கிலப் பேசும் படம் காட்டப் பட்டு வந்தது. அங்கு நாங்களும் போய்ப் பார்ப்பதுண்டு. ஒரு நாள் அவ்விதம் படம் பார்த்துக் கொண்டிருக்கும் போது, திடீரென்று இந்திய சிப்பாய்கள் முகாமுக்குத் திரும்ப ஆரம்பித்தனர். எங்கோ கைதி முகாமில் கலகம் ஏற்பட்டுள்ளது; அதைச் சமாளிக்கத் தயாராக இருக்க வேண்டும் என்று உத்தரவு வந்திருப்பதாகச் செய்தி பரவியது. நாங்களும் பாதிப் படத்தில் திரும்பினோம். அதற்குப் பிறகு, 'அமெரிக்கர்களோடு பழகக் கூடாது; அவர்கள் காட்டும் சினிமாவுக்குப் போகக் கூடாது' என்ற உத்தரவு வந்தது. நாங்களும் அங்கு போவதை நிறுத்தி விட்டு, டோக்ரா ரெஜிமெண்டில் காண்பிக்கும் படக் காட்சிக்குச் சென்று வந்தோம்.


இன்று 10-10-53: கூடாரத்தைச் சுற்றிக் கால்வாய் வெட்டிக் கொண்டிருந்தார்கள். குளிர் காலத்தில் பனிக் கட்டிகள் விழும். நன்றாக வெய்யில் அடிக்கும் போது அந்த பனிக் கட்டிகள் உருகும். அப்படி உருகிய ஜலம் ஓடுவதற்காகவே இந்தக் கால்வாயை வெட்டிக் கொண்டிருந்தனர். வெட்டும் போது ஓரிடத்தில் ஒரு பெரிய பானை நட்டுப் பட்டது. அதில் கம்பளிச் சட்டைகள், கோட்டுகள், நாலைந்து வெண்கலப் பாத்திரங்கள், பீங்கான் பாத்திரங்கள், ஒரு டார்ச் லைட் முதலியன இருந்தன. பாவம்! யுத்தத்துக்குப் பயந்து ஓடும்போது யாரோ ஏழை அவைகளைப் புதைத்து வைத்திருக்க வேண்டும். துணிமணிகளை மறுபடியும் அந்தப் பானையிலேயே போட்டு மூடி விட்டு, மற்றச் சாமான்களைக் கொரியா ஞாபகார்த்தமாக நாங்கள் கொண்டு வந்தோம்.

12-10-53: இன்று கைதிகளுக்கு ஆரம்பிக்க வேண்டிய 'விளக்கம்' (Explanation) பதினைந்தாம் தேதிக்கு ஒத்திப் போடப் பட்டது. ஆனால் கைதிகளோ அதிகாலையிலிருந்தே, பாடிக் கொண்டும், பாண்டு வாசித்துக் கொண்டும் ராணுவ நடை போட்டுக் கொண்டும் இருந்தார்கள்.

15-10-53: "விளக்கம்" இன்று துவங்கியது. சீனர்கள் விளக்கத்துக்குப் போகச் சம்மதித்தனர். வட கொரியா கைதிகளோ செல்ல இணங்கவில்லை. சீனக் கைதிகளை லாரிகளில் விளக்கக் கூடாரங்களுக்கு அழைத்துச் செல்லும்போது, ஒவ்வொருவரும் கொடி வைத்துக் கொண்டிருந்தனர்; உற்சாகமாகப்



வெடி குண்டுகளால் நாசமான பாங்கிக் கட்டிடமும் இரும்புப் பெட்டியும்



கொரியா யுத்தத்தில் பீரங்கிகளால் சல்லடைக் கண்கள்போல் துளைக்கப்பட்டுள்ள கட்டிடம்

பாடிக் கொண்டு சென்றனர். இவர்கள் செல்லும்போது வட கொரியாக் கைதிகள், கொடியை ஆட்டி உற்சாகப்படுத்தினர்.

உடன்படிக்கை ஒப்பந்தப்படி இந்தியக் கண்காணிப்புப் படையினரின் வசமிருக்கும் கைதிகளுக்கு, அவர்கள் வீடு திரும்புவதைப் பற்றியும், அவர்களுடைய சொந்த சுதந்திரங்களைப் பற்றியும், அவர்கள் எத்தகைய அமைதியான வாழ்க்கை நடத்த முடியும் என்பதையும் தெளிவு படுத்தப் பரிபூர்ண உரிமை உண்டு.

கைதிகள், முகாமிலிருந்து ஒவ்வொருவராக விளக்கக் கூடாரங்களுக்கு அழைத்துப் போகப் பட்டனர். அமெரிக்கர்களால் பதினைந்து விளக்கக் கூடாரங்கள் அமைக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு கூடாரத்திலும், நடுநிலைமை நாட்டினரின் பிரதிநிதிகளும் பத்திரிகைக்காரர்களும் இருந்தனர். 'விளக்கம்' செய்யும் எதிர்க் கட்சியினரும் இருந்தார்கள். கைதி வந்து நாற்காலியில் உட்கார்ந்ததும் தெளிவு படுத்துபவர் "நீ வீடு திரும்பலாம். நீ பயப்பட வேண்டாம். உன் மேல் ஒருவித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. உனக்குப் பூர்ண சுதந்திரம் அளிக்கப் படும்" என்றெல்லாம் கைதிக்கு விளக்குவார்.

கையை ஊன்றிக் கொண்டு நின்றபடியே தெளிவு படுத்தும் லெப்டினட் தன் முன்னால் நின்ற வட கொரியாக் கைதியைப் பார்த்து, "துங்-மூ" என்று நிதானமாகக் கூப்பிட்டார், (துங்-மூ என்றால் கொரியா பாஷையில் தோழர் என்று அர்த்தம்)

அவ்வளவுதான்! அந்த வார்த்தையைக் கேட்ட உடனே வட கொரியாக் கைதி பொதுவுடைமைக்காரரான லெப்டினன்ட் மீது பாய்ந்தார். நல்ல வேளையாக அவரை இந்திய சிப்பாய்கள் பிடித்துக் கொண்டனர்.

"பொதுவுடைமைக்காரர்களின் கையாளே! நீயும், உன் ரஷ்யர்களும், சீனர்களும் நாகரீக மற்றவர்கள். என்னைத் 'தோழரே!' என்று கூப்பிடாதே. சீனர்களை நேசிக்கும் பதரே!" என்று வெறி வந்த கைதி தன் முன்னால் நிற்கும் விளக்கக் காரரின் மேல் துப்பினார். நல்ல காலம் விளக்கக்காரரின் முகத்தில் அது படவில்லை. ஆனால் பள பளப்பான கரும் பச்சைக் கம்பளி உடை அசுத்தமாயிற்று.

விளக்கக்காரர் நிமிர்ந்து நின்றார். அவருடைய முகத்தில் கோபமோ, தாபமோ, எவ்விதக் குறியையும் காண்பதற்கு முடியவில்லை. நடு நிலைமை வகிக்கும் இந்தியத் தலைவர் அவரை ஏறிட்டுப் பார்த்தார். அதைப் புரிந்து கொண்ட பொதுவுடைமைக்காரர் நாற்காலியில் உட்காரப் போனார். இதற்குள் கைதி, பூட்ஸ் காலால், தரையில் ஓங்கி உதைத்துக் கொண்டு, தன் முன்னால் இருந்த மேஜையை விளக்கக்காரரின் மேல் எட்டி உதைத்தார். நிலைமை மோசமாவதைக் கண்டு, இந்திய வீரர்கள், அந்தக் கைதியைக் குண்டுக்கட்டாகக் கூடாரத்தை விட்டு அப்புறப் படுத்தினர். இவை யெல்லாம் ஓரே நிமிஷத்தில் நடந்து விட்டது.

பிறகு இன்னொரு கைதி உள்ளே கொண்டு வரப்பட்டார்.

மறுபடியும் லெப்டினன்ட் எழுந்து நின்று கொண்டு, "துங்-மூ! குடியரசு சர்க்காரின் பிரதிநிதி யென்ற ஹோதாவில் நான் உன்னுடைய பாதுகாப்புக்கு உத்தரவாதம். நீ இப்பொழுது ஜாக்கிரதையாக இருக்கிறாய். வீட்டுக்குத் திரும்பினால் சுதந்திரமாக இருக்கலாம்" என்று சொன்னார்.

"நான் திரும்பிப் போக விரும்ப வில்லை. தென் கொரியாவிலேயே இருக்க விரும்புகிறேன்" என்றார் கைதி.

கைதி சொன்னது காதில் விழாதது போல "உன்னுடைய பெற்றோர்களுக்கு உன்னைப் பார்க்காமல் எவ்வளவு வருத்தமாக இருக்கும் என்பதை நீ யோசித்துப் பார்க்க வேண்டும்" என்றார் விளக்கக்காரரான லெப்டினன்ட்.

கைதி இந்தியத் தலைவரைப் பார்த்து, "என்னைப் போக விடுங்கள். நான் திரும்பி வடகொரியாவுக்குப் போக விரும்ப வில்லை. என்னுடைய முகாமுக்குப் போக விரும்புகிறேன்" என்றான்.

"நீ திரும்பி வரவேண்டும். சீனக் குடியரசு கொரியாவின் தென் பாகத்தையும் வசப்

படுத்திக் கொள்ளும் என்பதை நீ தெரிந்து கொள்..." என்றார் லெப்டினன்ட்.

நடுநிலைமைக் கமிஷனின் பார்வையாளர் காப்டன் கார்ரயா குறுக்கிட்டு "இம்மாதிரி கைதியைப் பயமுறுத்தக் கூடாது என்று அவருக்குச் சொல்லுங்கள்" என்றார் மொழி பெயர்ப்பாளரிடம்.

"நான் விளக்கத்தைக் கேட்டேன். நான் தென் கொரியாவுக்குப் போகும் வாசல் வழியாகப் போக விரும்புகிறேன். நான் போகலாமா?" என்று கைதி பார்வையாளரைப் பார்த்துக் கேட்டார்.

பார்வையாளர் சட்டத்தைக் கைதிக்குத் தெளிவுப் படுத்தி, "பொதுவுடைமைக்காரர் விளக்கம் முடிந்தது என்று சொல்லும் வரையிலோ, அல்லது நடு நிலைமைக் குழுவினரின் எண்ணத்தில் இனி பயனில்லை என்று தோன்றும் வரையிலோ நீங்கள் கேட்க வேண்டும்" என்று சொன்னார்.

ஐந்து நிமிஷம் இடைவெளி கொடுத்து விட்டுப் பார்வையாளர் தன் கமிட்டியின் அபிப்பிராயத்தைக்கேட்டார். மறுபடியும் விளக்கக் காரருக்குச் சந்தர்ப்பம் கொடுக்க கமிட்டி முடிவு செய்தது. கைதி பேசாமல் வாயை மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

சுமார் ஒன்றரை மணி நேரம் கேட்ட பின்னர், "நான் விளக்கத்தைக் கேட்டாகி விட்டது. நான் அந்த வாசல் வழியாகப் போக விரும்புகிறேன்" என்றார் கைதி பொறுமையை யிழந்து.


கார்ரயா "நீங்கள் முடித்தாகி விட்டதா?" என்று விளக்கக் காரரைக் கேட்டார்.

முடித்தாகி விட்டது என்பதைத் தெரிவிக்க தலையை அசைத்தார்கள், விளக்கக்காரரும் அவருடைய இரண்டு உதவியாளர்களும்.

கைதி வந்த வழியே தன்னுடைய முகா முக்குத் திரும்பிச் சென்றார்.

ஐந்து நிமிஷம் கழித்து இன்னொரு கைதி வந்தார். பொதுவுடைமை விளக்கக்காரர் முகத்தில் ஏமாற்றத்தின் அறிகுறி சிறிதும் இல்லை. மறுபடியும் பழையபடியே "துங்கு -சூ" என்று துவங்கினார் அவர்.

இரண்டு மகா யுத்தங்களில் வெற்றி காணுவது கூட அவ்வளவு சிரமமாக இருந்திருக்காது நம் சிப்பாய்களுக்கு. ஆனால் இந்தக் கொரியாக் கைதிகளைச் சமாளிப்பது மிகவும் கடினமாக இருந்தது. விளக்கக் கூடாரத்தினுள் கைதிகளின் அட்டகாசங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. ஒரு கைதி பூட்ஸ் காலால் தரையில் பலமாகத் தட்டிச் சத்தப்படுத்துவார். இன்னொருவர் பாடுவார். மற்றொருவர் வாயில் வந்தபடியெல்லாம்பேசித் துப்புவார். தெளிவுபடுத்தும் வரை அடிக்கப் போகும்போது நம் சிப்பாய்கள் தடுத்தால், நம் சிப்பாய்கள் மேல் சீறுவார்கள், துப்புவார்கள். அடிபட்டாலும், காயம் பட்டாலும், எந்த விதமான அவமானம் ஏற்பட்டாலும் நம் சமாதான வீரர்கள் பொறுமையைக் கைவிடாமல்,



## தமிழ் அவுர் உஸ்கா ஸாஹித்ய (ஹிந்தி)

இலக்கியம் என்பது ஒரு காலக் கண்ணாடி. எந்தக் காலத்தில் எந்தச் சமூகம் எத்தகைய நிலையில் இருந்தது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டும் தன்மையது.

இந்திய மொழிகளில் வடமொழியான ஸம்ஸ்கிருதமும் தென் மொழியான தமிழும் மிகவும் பழமையானவை. இரு மொழிகளின் பிறப்பும் வளர்ப்பும் சரித்திர காலத்துக்கும் முற்பட்டவை. வடமொழியான ஸம்ஸ்கிருதத்தின் இலக்கியம் வளர்வது ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பின் தடைப் பட்டு விட்டது. ஆனால் தமிழில் நாள் தோறும் இலக்கியம் வளர்ந்து கொண்டே வருகிறது. தமிழ்க் கன்னி என்றும் நித்திய கன்னியாகப் பூரணப் பொலிவுற்றுத் திகழ்கிறாள்.

ஹிந்தி மொழியில் சரளமான நடையில் இயற்றப்பட்டுள்ள இந் நூல் தமிழ் இலக்கியத்தின் வரலாற்றை வெகு அழகாகச் சித்திரிக்கிறது.

அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் பேணி வளர்த்த தமிழ்மொழி சங்க காலத்தில் எப்படிச் சீரும் சிறப்பும் உற்று விளங்கியது! தெய்வத் தமிழுக்கு வேதமாக விளங்கும் திருக்குறள் அகில உலகத்துக்கும் எக்காலத்துக்கும் வழிகாட்டியாக விளங்கும் பெருமையை எப்படிப் பெற்றிருக்கிறது! ஐம்பெரும் காப்பியங்களில் கட்டுக் கோப்பும் கவிநயமும் எப்படி அமைந்திருக்கின்றன! ஆழ்வார்களும் நாயன்மார்களும் கன்னித் தமிழில் பக்திப் பாடல்கள் பாடி எப்படித் தமிழைப் போற்றி வளர்த்திருக்கிறார்கள்! சுதந்திர உணர்ச்சி குன்றிவிட்ட சமூகத்தை மகா கவி பாரதியார் எப்படி உணர்ச்சி வெறி கொள்ளச் செய்தார்! தமிழ்த் தாத்தா என்று பெயர் பெற்ற காலஞ் சென்ற மகா மஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் தமிழைப் போற்றிப் பாது காத்து எத்தகைய பெரும் சேவை செய்துள்ளார்! நவீன காலத்தில் தமிழ் இலக்கியத்தை எப்படிப் போற்றி வளர்த்து வருகிறார்கள்!

இவைபோன்ற விஷயங்களில் பருந்துப் பார்வையில் வட்டமிட்டு நோக்கி வடநாட்டவர்களும் தமிழின் பெருமையைப் புரிந்து கொள்ளும் அளவுக்குச் சேவை செய்திருக்கும் ஸ்ரீ சோமசுந்தரம் நமது பாராட்டுக்குப் பெரிதும் உரியவராவர்.

கிடைக்குமிடம்: ராஜகமல் பிரகாசன், தில்லி; விலை: ரூபா 2—0—0.

சாந்த ஸ்வரூபிகளாய்க் காந்தி அடிகள் வகுத்த பாதையை விட்டுச் சிறிதும் நழுவாமல், தங்கள் பொறுப்பை நிறைவேற்றினார்கள்!

*　　　*　　　*

ஐந்நூறு வடகொரிய கைதிகள் G. 48 முகாமிலிருந்து 16-10-53உ அன்று விளக்கக் கூடாரத்துக்குப் போக வேண்டும். ஆனால் அவர்கள் போக மறுத்தார்கள். நேற்றுஇவர்களுக்கு, இன்றைய தினம் விளக்கத்துக்குச் செல்ல வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. கைதிகளின் தலைவர்கள் விளக்கக் கூடாரங்களைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று தெரிவித்தார்கள். ஜெனரல் தோரட் இதற்கு இணங்கினார். ஆனால் இன்று காலையில் விளக்கக் கூடாரங்களைப் போய்ப் பார்க்கத் தலைவர்கள் மறுத்து விட்டார்கள். அவர்கள் மிகவும் பயப்படுவதாகத் தோன்றியது. அமெரிக்கர்களின் தூண்டுதல் வேறு. இந்தியச் சிப்பாய்கள் தங்களைத் துன்புறுத்துவார்களோ என்ற மனோபீதியும் ஒருபுறம் அவர்களுக்கு.

ஜெனரல் தோரட் அவர்கள் "திரும்பிப் போவதைப் பற்றி முடிவுக்கு வர உங்களுக்குப் பூர்ண சுதந்திரம் உண்டு" என்று சொல்லி அவர்கள் மனப் பிராந்தியைப் போக்க விரும்பினார். ஆனால் தலைவர்கள் கூடாரங்களை விட்டு வெளியே வரவுமில்லை. ஜெனரலைச் சந்திக்கவும் மறுத்து விட்டனர்.

D-31 முகாமிலிருந்து நேற்று தெளிவுரைக்குப் போன இரண்டு சீனக் கைதிகளை அனுப்பி, கொரியா கைதிகளின் பீதியைப் போக்க முயற்சி செய்தனர். சீனர்கள் அரை மணி நேரம் வரை எவ்வளவோ முயன்று பார்த்தனர். எவ்வளவு தாஜா செய்தும் கைதிகள் மசியவில்லை.

சாம, தான, பேதங்களினால் காரியம் பலிக்காமல் போகவே, 10-30 மணிக்கு, கைதிகளுக்கு இறுதி எச்சரிக்கை கொடுக்கப் பட்டது. 'அரைமணி நேரத்துக்குள் அவர்கள் வெளியே வராது போனால், பலாத்காரம் செய்யப்படும்' என்று தெரிவிக்கப்பட்டது.

கைதிகள் வரவில்லை. பதினொரு மணிக்கு, லெப்டினண்ட் கர்னல் ஹஸாரியின் தலைமையில் முன்னூறு வீரர்கள், துப்பாக்கி, தடி சகிதம், கைதிகளைப் பயமுறுத்தும் உத்தேசத்தோடு, முகாமைச் சூழ்ந்து கொண்டார்கள். இந்தத் தந்திரத்தாலும் மாங்காய் விழவில்லை!

இரண்டு மணிக்கு, கண்ணீர் வாயுப்படையினர் அங்கு சென்றார்கள். கைதிகள் இவர்களைப் பார்த்ததும், கூடாரத்தினுள்ளே சென்று, கூடாரத்தை மூடிவிட்டார்கள்.

இந்நிலைமையில், அக்கம் பக்கத்திலிருந்த நாலு முகாமிலுள்ள கைதிகள் முள்வேலியைத் தகர்த்துக் கொண்டு வெளி வருவதாகப் பயமுறுத்தினர். அருகாமையில், 64-வது தள ஆஸ்பத்திரியில் கைதிகள் கற்களைப் பொறுக்கிக் கொண்டு, ஆஸ்பத்திரி சிப்பந்திகளைத் தாக்குவோம் என்று மிரட்டினர். G. முகாமிலிருந்த எல்லாக் கொரியா கைதிகளும் சட்டை, பனியன் முதலியவைகளைக் கழற்றிவிட்டு, கையுறையைப் போட்டுக்கொண்டு, திறந்த மார்போடு, அணிவகுத்ததுபோல் நின்றனர். உத்தரவு கிடைத்ததும் முள் வேலியின் மேல் ஏறிக் குதிக்கவோ, அல்லது வேலிகளைத் தகர்த்தெறியவோ தயாராக இருந்தார்கள். இன்னொரு காம்பௌண்டில், வேலிக் கால்கள், தளர்த்தப் பட்டுக் கொண்டிருந்தன.

ஜெனரல் தோரட் நிலைமை மிகவும் மோசமாக இருப்பதை உணர்ந்து, தன் கீழிருக்கும் மற்றத் தளபதிகளோடு ஆலோசித்து G. 48 காம்பௌண்ட் கைதிகளை வற்புறுத்தினால் நெருக்கடி ஏற்படும் என்று நடு நிலைமைக் கமிஷனுக்குத் தெரிவித்தார். (தொடரும்)




## 9

அன்று மாலை கடற்கரையில் உள்ளவர்கள் திரும்பி வீட்டுக்குப் போகும் வேளையில், சுந்தரி ஆய்ந்து ஓய்ந்து போய், கரையில் காய்வதற்காக வைத்திருந்த படகுக்கு அருகில் அமர்ந்து, இருள் சூழும் கடலைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தூரத்தில் ஒரு வெளிச்சம் மின்னி மின்னி மறைந்தது. அது கடற்கரை கலங்கரை விளக்கின் வெளிச்சம்தான் என்று சுந்தரிக்குத் தெரியும். இந்தப் பரந்த உலகில் தன்னந்தனியாக அகப்பட்டுக் கொண்ட ஜீவனைப்போல், அந்த வெளிச்சம் 'பளீர்' என்று மின்னுவதும், மறுகணம் துக்கம் தாங்காமல் மறைவதுமாக இருந்தது. இடையறாது பொங்கிப் பொருமும் அலை வெள்ளத்தைப் பார்த்தாள். அதன் கரையில் முன்பு ஒருதரம் இனியனைப் பார்த்துச் சந்தித்துப் பேசிய இனிய நினைவு வந்தது. உடனே சுந்தரியின் உள்ளத்தில் துக்கம் தோய்ந்தது. திடீரென்று தனக்குப் பின்னால் மாணிக்கத்தின் குரல் ஒலிப்பதைக் கேட்டாள்.

"சுந்தரி! நீ என்ன இன்று வேறு எங்கேயோ இடம் மாறி உட்கார்ந்து விட்டாய்!"

"அதனால் என்ன? அப்படி உட்காரக் கூடாதா!" என்று மாணிக்கத்தைப் பார்த்துக் கொண்டே கேட்டாள் சுந்தரி.

'வழக்கமாக நாம் உட்காரும் இடத்தில் எல்லாம் உன்னைத் தேடித் தேடி அலைந்தேன். கடைசியில் தனியாக யாரோ உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அது யாராக இருக்கலாம் என்று இங்கு வந்தேன்."

"கடைசியில் எப்படியோ என்னைத் தேடிக் கண்டு பிடித்து விட்டாய் அல்லவா!"

"கண்டு பிடிக்காமல் இருப்பேனா? இந்த இடம் மாற்றத்துக்குக் காரணம் என்னவோ!"

"நானும் என்னுடைய உள்ளத்தில் ஒரு மாற்றம் செய்து கொள்ள விரும்பியிருக்கிறேன். அதைப் பற்றி உனக்கென்ன!"

"தெரிந்து கொள்ளலாமோ என்றுதான்."

சுந்தரி மேலே ஒன்றும் பேசவில்லை. மாணிக்கம் அவளை ஏற இறங்கப் பார்த்தான். கடற்கரை மணலைக் கையில் அள்ளி அள்ளிப் போட்டுக் கொண்டே அவளுக்கு எதிரில் உட்கார்ந்தான். அவர்களுக்கு அப்பால் சுந்தரியின் மயிர் அடர்ந்த நாய் பெரிய பந்துடன் விளையாடிக் கொண்டிருந்தது. சற்று நேரம் கழித்து அன்பும் ஆதரவும் கலந்த குரலில் நிதானமாகப் பேசினான்.

"சுந்தரி! நீ ஒரு விசித்திரப் பெண்தான். நீ எத்தனையோ பேர் இதயத்திலிருந்து 'திடீர்' என்று மறைந்து போய் விடுகிறாய்! ஆனால் அத்தனை பேரையும் ஆட்டிப் படைத்து விடுகிறாய். அவர்களை ஒன்றும் புரிய விடாமல் திகைக்கும்படி செய்து விடுகிறாய்!"

"நான் அப்படி ஒன்றும் கண்டவர் இதயத்துக்குள் போய் மறைந்து விடமாட்டேன். உன் இதயத்தில் புகுந்து உன்னை ஒன்றும் புரியாமல் செய்து விட்டேனா என்ன!" என்று சர்வ சாதாரணமாகக் கேட்டாள் சுந்தரி.

"இல்லை. நீ என் இதயத்துக்குள் புகவில்லை. ஆனால் இனியன் இதயத்துக்குள் புக முயன்றாய்."

"உனக்கு அது பொறாமையாக இருக்கிறதா!"

"அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. இப்பொழுது நாம் இரண்டு பேரும் மனம் விட்டுப் பேசுவோம். நீ என்ன சொல்லுகிறாய்!" என்று





சொல்லிக் கொண்டே சுந்தரியைக் கூர்ந்து பார்த்தான். அவள் எழுந்து அவனுக்குப் பக்கமாகச் சற்றுத் தள்ளி உட்கார்ந்து கொண்டாள். அதனால் அவள் முகத்தில் தோன்றிய உணர்ச்சிகளை அவனால் கவனிக்க முடியவில்லை.

"ரொம்ப சரி! அப்படியே செய்வோம்!"

"உன் இதயத்திலிருந்து இனியனுக்கு விடுதலை கொடுத்து விட்டாயா? அதை முதலில் சொல்லு."

"இப்படி யெல்லாம் என்னிடம் பேசாதே" என்றாள் சுந்தரி. சற்று நேரம் கழித்து "அதைப் பற்றி நீ ஏன் கேட்கிறாய்?" என்றாள்.

"சும்மாதான்; அதைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம் என்பதற்குத்தான்."

"அவரிடம் இருந்து இன்று எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது."

"ஆமாம்; எனக்குந்தான் ஒரு நீண்ட கடிதம் வந்திருக்கிறது."

"அதைப் பற்றி நீ ஏன் முதலில் சொல்லவில்லை? நீ இனியனுக்குக் கடிதம் எழுதி அதற்கு மறுமொழி வந்ததா? இல்லை அவரே உனக்குக் கடிதம் எழுதி யிருந்தாரா?"

மாணிக்கம் ஒரு கணம் அதிசயமாகச் சுந்தரியைப் பார்த்தான். பிறகு, அவளை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே சொன்னான்:

"உனக்கு எப்படிக் கடிதம் வந்தது? அவனே முதலில் எழுதினானா?"

"அவரிடம் இருந்துதான் முதலில் கடிதம் வந்திருக்கிறது" என்று பெருமையோடு சொல்லிக் கொண்டாள் சுந்தரி.

"நீ அவனுக்குப் பதில் எழுதி விட்டாயா?"

"இனியனுக்கு நான் இப்பொழுது உடனே பதில் எழுத விரும்பவில்லை."

"அப்படியானால் இனியனின் மனத்தை நீ இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். அவன்மீது கொண்டிருந்த உன் விபரீதமான அன்பை நீ இன்னும் மாற்றிக் கொள்ளவில்லை என்றுதான் நினைக்கிறேன்" என்று பலவித அர்த்தங்கள் தொனிக்கும் படியாகச் சொல்லிவிட்டு அவள் பக்கமாகக் கடற் கிளிஞ்சல் ஒன்றை எடுத்து எறிந்தான். சற்றுப் பொறுத்து, "எனக்கு என்னமோ ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் என்பதை என்னால் கொஞ்சங் கூடப் புரிந்து கொள்ளவே முடியவில்லை" என்றான்.

"நான் உங்களுடன் பழகுவதால் நீங்கள் தப்பாக அர்த்தம் கொள்ள முயன்றிருக்கிறீர்கள். நான் உங்களில் யாரையும் விரும்பவில்லை" என்று அலட்சியமாகச் சொன்னாள் சுந்தரி. மாணிக்கம் விட்டெறிந்த வெள்ளைக் கிளிஞ்சலைக் கையில் எடுத்துப் பார்த்துக் கொண்டே மெதுவாகச் சிரித்தான்.

"இது முழுப் பொய். நீ மீண்டும் பொய் சொல்ல ஆரம்பித்து விட்டாய்."

"நான் எதற்காகப் பொய் சொல்ல வேணும்?" என்று கேட்டாள். அவள் குரலில் தொனித்த பாவத்தைக் கொண்டு மாணிக்கத்தால் ஒன்றும் புரிந்து கொள்ள முடியவில்லை.

"இனியனிட மிருந்து கடிதம் வந்த பிறகு உன்னுடைய மனசு என்னவோ கொஞ்சம் மாறித்தான் போயிருக்கிறது. இல்லையா?" என்று ஆர்வத்தோடு கேட்டான்.

"எனக்கு எப்படித் தெரியும்? நீ ஏன் என்னென்னவோ சொல்லி என் உயிரை வாங்குகிறாய்?"

"நானாவது உன்னுடைய உயிரை வாங்குவதாவது! வேடிக்கைதான்!" என்று சொல்லி விட்டு மாணிக்கம் தலையை ஆட்டினான்.

இருவரும் சற்று நேரம் மௌனமாயிருந்தனர்.

இரவு சூழ்ந்தது: வானத்தில் மிதந்து செல்லும் மேகப் படலங்கள் கடல் மீது நிழல்களைப் பரப்பின. அலைகள் முணு முணுத்துக் கொண்டிருந்தன.

கடற்கரை விளக்கு மின்னி மின்னித் தெறித்துக் கொண்டே இருந்தது. சுந்தரி அந்த வெளிச்சத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். மாணிக்கம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"சுந்தரி! என்னிடம் சொல்லு. மேலே என்ன செய்யவேணும் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"அதை மட்டும் என்னால் தெரிந்து கொள்ள முடிந்தால்...!" என்று தணிந்த குரலில் சொல்லி விட்டு நீண்ட பெருமூச்சு விட்டாள் சுந்தரி.

"அப்படியானால் உனக்குத் தெரியாது. உன்னால் தெரிந்து கொள்ளவும் முடியவில்லை. இது ரொம்ப மோசம்!" என்றான் மாணிக்கம். "எனக்கு என்ன வேண்டும், நான் என்ன செய்ய நினைத்திருக்கிறேன் என்று எனக்குத் தெரியும்!" என்று சொல்லி விட்டுக் கவலை நிறைந்த குரலில், "இதில் தொல்லை என்னவென்றால் அதை நான் வாயை விட்டுச் சொல்லுவதால் அதனாலே தொல்லைகள் ஏற்படலாம். நான் விரும்பிய பொருள் எனக்குக் கிடைப்பதில் கஷ்டங்கள் ஏற்படலாம்!" என்று சொன்னான் மாணிக்கம்.

"ஆனால் எனக்கு எப்பொழுதுமே தெரிந்து கொள்ள முடியாது என்று சொல்ல முடியுமா? சமயம் வரும்போதுதான் நானும் தெரிந்து கொள்வேன். தெரிந்து கொண்டதைச் சொல்லுவேன்!" என்று தாழ்ந்த குரலில் சொன்னாள் சுந்தரி.



"ஆனால் இப்பொழுது எனக்கு என்ன வேணும் தெரியுமா! இப்படியே கடல் மேலே போக வேணும் என்று தோன்றுகிறது. ரொம்ப ரொம்பத் தூரம் போய், யாரும் என்னைக் கண்ணால் பார்க்க முடியாதபடி, நானும் பிறரைப் பார்க்க முடியாதபடி போய்விட வேணுமென்று தோன்றுகிறது. இப்பொழுதெல்லாம் எனக்குச் சில சமயம் தாங்க முடியாமல் துக்கம் குமுறிக் கொண்டு வருகிறது சில சமயம் துக்கம் மலர்ந்து மகிழ்ச்சியாகவும் இருக்கிறேன். ஆனால் ஒன்று. என்னைச் சுற்றி இருப்பவர்கள் எல்லாம் உணர்ச்சியற்ற வெறும் மரக் கட்டைகள்தான்."

"நீ சொல்லுவது ரொம்ப சரி. உன்னைச் சுற்றி இருப்பவர்கள் தங்கள் உணர்ச்சிகளை மரக்கட்டையாகச் செய்து கொண்டால்தான் நல்லது!" என்றான் மாணிக்கம். "ஆனால், உன்னை எத்தனை தடவை பார்த்து நானே நினைத்துக் கொண்டிருக்கிறேன், தெரியுமா! சாதாரணப் பெண்களைப் போன்றவள் அல்ல நீ. பெண்களில் நீ ஒரு அபூர்வமான பிறவி. மிக உயர்ந்த குணம் படைத்த உத்தமமான பெண்."

"அதற்குக் கடவுளுக்குத்தான் நன்றி செலுத்தி வணங்க வேணும்!" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் சுந்தரி.

அவர்களுக்கு எதிரில் கடலுக்கு மேலாகச் சந்திரன் உதயமாகி, தன் வெள்ளி மயமான கதிர்களைக் கடலில் பொழிந்து கொண்டிருந்தது. வான மண்டலத்தில் நீல விதானத்தில் இவ்விதம் தெரிந்த நிலவு மெதுவாக மிதந்து சென்றது. நட்சத்திரங்களின் பிரகாசமான சுடர் ஒளி நிலவின் இன்பக் கனவு போன்ற கதிர் ஒளியில் மங்கி மறைந்து போயிற்று.

சுந்தரி புன்னகை புரிந்து கொண்டு சொன்னாள்: "நீ என்னத்தைத் தெரிந்து கொண்டாய்! என் மனத்திலே என்ன என்னவோ தோன்றிக் கொண்டிருந்தது. நான் நினைத்தபடியெல்லாம் நடந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!"

"ஆமாம்; இருக்கும்!" என்று ஆச்சரியத்துடன் சொன்னான். பிறகு சுந்தரியை ஒரு தரம் இலேசாகத் திரும்பிப் பார்த்துவிட்டு, "நீ உன் மனத்தில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் என்று சொன்னால் அது நடப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய்யலாம்" என்றான்.

"ஆமாம் அதைச் சொல்லிவிட வேண்டியதுதான். ஆனால் இப்பொழுது அதைச் சொல்லக் கூடாது!" என்று சொல்லி விட்டுக் 'களுக்' என்று சிரித்தாள் சுந்தரி.

"நீ எப்பொழுது என்னிடம் சொல்லலாம் என்று நினைக்கிறாயோ அப்பொழுது சொல்லு. அது வரையில் நான் காத்துக் கொண்டிருக்கிறேன்."

சுந்தரி திரும்பினாள். திரும்பி, கம்பீரமாகத் தோன்றிய மாணிக்கத்தின் முகத்தைப் பார்த்தாள். சந்திர ஒளியில் அவனது முகத்தில் தோன்றும் உணர்ச்சிகளை நன்றாகப் பார்க்க முடிந்தது. அந்த முகத்திலே வெறுப்பு இல்லை. அதற்குப் பதிலாகச் சுமுகமான பார்வையும், குறும்பு நிறைந்த புன்னகையும்தான் தெரிந்தன.

"இனியன் மிகச் சிறந்த குணமும், உயர்ந்த பண்பும் நிறைந்தவர். அவருடன் பழகிய பிறகுதான் எனக்கு ஆண்கள் மீது நம்பிக்கையே ஏற்பட்டது. கல்லூரியில் உள்ள இதர மாணவர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள். ஏதோ புஸ்தகத்தைச் சுமக்கும் உருவங்களாகத் தோன்றுகிறார்கள். என்னமோ ரொம்பவும் நல்லவர்கள் மாதிரி பாசாங்கு செய்கிறார்கள். அவர்களில் ஒருவருக்கும் தன் நம்பிக்கையும் கிடையாது; தைரியமும் கிடையாது. வீணாகத் தங்களைப் பற்றித் தாங்களே உயர்வாக நினைத்துக் கொண்டு திரிகிறார்கள். நான் கல்லூரித் தமிழ்க் கழக காரியதரிசியாக இருப்பதால் பல மாணவர்களிடம் பழக வேண்டியிருக்கிறது. எவ்வளவு சாதாரணமான குணம் உள்ளவர்களாக அவர்கள் இருக்கிறார்கள் தெரியுமா! ஏதோ சுற்றிச் சுற்றி வருகிறார்களே ஒழிய ஒருவர் உள்ளத்திலும் நல்ல எண்ணமே இருப்பதில்லை. எப்போது பார்த்தாலும் பல்லைக் காட்டிக்கொண்டு தங்களைப் பற்றி பிறர் உயர்வாக நினைக்க வேண்டும் என்று நடிக்கிறார்களே ஒழிய அவர்களைப் பற்றி அவர்களுக்கே நன்றாகத் தெரியும். அவர்களுடன் எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான் இனியன் எவ்வளவு உயர்வானவர், பண்பு நிறைந்தவர் என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது!" என்றாள் சுந்தரி.

"அப்படியானால் இனியனைத் தவிர வேறு யாரும் நல்ல குணம் படைத்தவர்களாக உனக்குத் தோன்றவில்லையோ!"

"இல்லை!" என்று தலையை அசைத்தாள்.

"கொஞ்சம் நினைத்துப் பாரு. உனக்காக உன்னுடைய அன்பை வேண்டி இன்னும் ஒருவர் தினம் தினம் தவம் கிடக்கிறார். உனக்காக அவர் எதையும் செய்யத் தயாராக இருக்கிறார். நீ





"நீங்கள் சின்ன வயதில் ஆசைப் பட்ட காரியம் இப்பொழுது ஏதேனும் நிறைவேறி இருக்கிறதா?"

"சின்ன வயதில் என் பாட்டி என் தலையை வாரிப் பின்னும் போது, தலை மொட்டையாக இருக்கப்படாதா என்று ஆசைப் பட்டேன். அந்த ஆசை இப்பொழுது தான் ஒரு மாதிரியாக நிறைவேறிக் கொண்டிருக்கிறது!"

ஒரு வார்த்தை சொன்னால் போதும், எந்தக் காரியத்தையும் முடித்துக் கொடுக்கத் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறார்" என்று பாதி கேலியாகவும் பாதி உண்மையாகவும் சொன்னான் மாணிக்கம். சுந்தரி தன்னைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக எப்படி யெல்லாமோ சுற்றி வளைத்துப் பேசினான் மாணிக்கம்.

"நான் மட்டும் பெண் பிள்ளையாகப் பிறந்திருந்தால், என்னைப் பற்றி நினைத்து ஏங்கும் வாலிபனை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டிருப்பேன்" என்று சொல்லி அலைக்கும் கடலைப் பார்த்தான்.

அவர்கள் பிரிந்து செல்லும்போது நிலா மிகவும் உயரத்துக்கு வந்து விட்டது. இரவின் மோகனம் அதிகரித்து இருந்தது. அவர்கள் சென்றவுடன் எல்லையற்ற கடலும், வெள்ளி மயமான சந்திரனும், நட்சத்திரங்கள் மின்னும் நீல வானமும் எஞ்சி நின்றன. இவற்றோடு கடற்கரை மணல் வெளியும் அதன் கரையிலே வானோங்கி நிற்கும் கட்டிடங்களும் மிஞ்சி நின்றன. இவைகளைப் பார்த்து வானத்து நட்சத்திரங்கள் கண்ணைச் சிமிட்டி மின்னிக் கொண்டிருந்தன.

•• •• ••

சுந்தரியின் வீட்டு நடுக் கூடத்தில் போடப் பட்டிருந்த நாற்காலியில் யாரோ நடுத்தர வயதுடைய ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவருக்குச் சுமார் நாற்பது வயது இருக்கலாம். அவரைப் பார்த்தால் நல்ல கிராமத்து மனிதர் என்பது நன்றாகத் தெரிந்தது. அவர் சாதாரணமாக நாலு முழ வேஷ்டியும், அரைக் கைச் சட்டையும் அணிந்திருந்தார். அவர் வெய்யிலில் உழைத்துப் பாடு படுபவர் என்பது அவர் கருத்த முகமும், கைகளும் காண்பித்தன. அவருக்கு முன்னால் இருந்த நாற்காலியில் சுந்தரியின் தந்தை உட்கார்ந்திருந்தார். அவருடைய சிவந்த கைகள் மடியின்மேல் அமைதியாக இருந்தன. உப்பியிருந்த கன்னங்கள் 'மழமழ' வென்று க்ஷவரம் செய்யப் பெற்றிருந்தன. கடுமையான அவர் கண்களுக்கு மேலே புருவங்கள் அடர்த்தியாக இருந்தன. தலை நரைத்துப் போயிருந்தது.

அவர் அணிந்திருந்த உடையும், அந்த அறையிலே இருந்த ஆடம்பரப் பொருள்களும், அறை வசியச் சாமான்களும் அவர் புதுப் பணக்காரர், நல்ல வழியில் பணம் சேர்த்தவர் இல்லை என்பதை எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது.

"நீங்கள் இப்பொழுது நம் கிராமத்தைப் பற்றியே நினைத்துப் பார்ப்பதில்லை" என்றார் கிராமத்திலிருந்து வந்த குடியானவர்.

"ஆமாம்! அதற்கெல்லாம் எங்கே நேரம் இருக்கிறது!" என்றார் சுந்தரியின் தந்தை.

அவர் சொன்னதை அப்படியே நம்பி ஒப்புக் கொண்டதுபோல நடித்தார் கிராமத்து மனிதர். அவர் உணர்ச்சி நிறைந்த முகத்திலே சுந்தரியின் தந்தை செய்த ஒவ்வொரு மோசத்தையும் அம்பலப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றுவது நன்றாகத் தெரிந்தது.

"ஏராளமான பணம்தான் சேர்த்தாகி விட்டது. கிராமத்துப் பக்கம் வந்து கொஞ்ச நாளைக்கு நிம்மதியாக இருக்கலாமே."

"இன்னும் பணம் சேர்த்தாக வேண்டுமே."

"எதற்காக!"

"எதற்காகவா! 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை' என்பது உமக்குத் தெரியாதா!"

"இப்பொழுது தங்களிடம் உள்ள பொருள்களே மூன்று தலைமுறைக்குப் போதுமே!"

"நல்ல ஆள் ஐயா நீர்! ஊரில் இருக்கும் கோடீஸ்வரர்களுடன் என்னை ஒப்பிட்டுப் பார்த்தால் நான் எம்மாத்திரம்!" என்றார்.

பிறகு தலையை உயர்த்திக் கொண்டு வாயைப் பிளந்து கொட்டாவி விட்டார். கிராமத்திலிருந்து வந்த அந்த மனிதரைக் கூர்ந்து பார்த்து அமைதியாக ஆராயத் தொடங்கினார்.

"இதெல்லாம் என்ன கேள்வி! நீர் என்ன காரியமாக வந்தீர்! அதை விட்டு விட்டு என்னென்னவோ பேசிக் கொண்டிருக்கிறீரே!"

"உங்களுக்குப் பழைய சம்பவங்கள் ஏதாவது நினைவில் இருக்கிறதா!"

"எந்தச் சம்பவம்!"

"நீர் கொடுக்க வேண்டிய ஐம்பது ரூபாய்க்காக உம்மீது வாரண்டு வந்து விட்டது. அப்பொழுது உமக்கு உதவி புரிய யாரும் முன்வரவில்லை. நான் என் தாயாரின் கழுத்துச் சங்கிலியை அடகு வைத்து உமக்கு ரூபாய் வாங்கிக் கொடுத்தேன். பிறகு ஏதோ ஐந்தும் பத்துமாகத் திருப்பிக் கொடுத்தீர்." இதைச் சொல்லி விட்டு அந்தக் கிராமத்து மனிதர் புதுப் பணக்காரரின் முகத்தை மிகுந்த ஆவலுடன் பார்த்தார்.

சுந்தரியின் தந்தையோ இந்தச் சமயத்தில் இருமுவதற்கு ஆரம்பித்து விட்டார். அவருடைய பெரிய உடல் அசைந்து குலுங்கிற்று. அவர் கண்கள் மூடி மூடித் திறந்தன.

"நீர் சொல்லுவது ஆச்சரியமாக இருக்கிறது. எனக்கு அப்படி ஒன்றும் நினைவில்லை. நீர் வீணாக என் மனத்தைப் புண்படுத்த முயல்கிறீர்" என்று பெருமூச்சு விட்டார்.

கிராமத்து மனிதர் சற்று நேரம் யோசித்துப் பார்த்து விட்டுப் பிறகு கேட்டார்:

உண்மையா! என்றுகூட அப்பொழுது அவருக்குச் சந்தேகம் உண்டாகி விட்டது.

சுந்தரி உண்மையாகத் தான் தன்னுடைய எண்ணத்தை வெளியிட்டாள். அவள் பேச்சைக் கேட்கும்போது அவள் தான் சொன்ன சொல்லைக் காப்பாற்ற எதுவும் செய்வாள் என்றே அந்தக் குடியானவருக்குத் தோன்றியது.

கிராமத்து மனிதர் சுந்தரியிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பி விட்டார். சுந்தரி தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து நின்றாள். அவள் சிவந்த முகத்திலே ஒரு சமதர்மப் புரட்சிக் கனவுத் தோற்றம் படர்ந்திருந்தது.

** ** **

சுந்தரி தன் அறையில் போய் உட்கார்ந்தாள். சமையற்காரன் சாப்பிடுவதற்கு வந்து அவளை அழைத்தான். "சாப்பாடு வேண்டாம்" என்று சொல்லி அவனை அனுப்பி விட்டாள். அவளுக்குப் பசியில்லை. நெஞ்சில் ஏற்பட்ட உணர்ச்சியால் ஒரே குமட்டலாக இருந்தது. அவளுக்கு மயக்கமாக இருந்தது. அவள் இதயம் வேகமாகத் துடித்துக் கொண்டிருந்தது. கரிய நிறம் படைத்த கிராமத்துக் குடியானவரின் அன்பு முகம் அவள் கண் முன்பு தோன்றியது. அவரைப் பார்த்ததில் அவளுக்குக் கிராமத்துக்குப் போக வேண்டும் என்ற ஆசையும் உண்டாகி விட்டது.

இந்தச் சமயத்தில் அவளுக்கு இனியனின் நினைவு வந்தது. அவன் கிராமத்து மக்களைப் பற்றிச் சொன்னதெல்லாம் அவளுக்கு நினைவு வந்தது.

"எல்லா இடங்களுக்கும் போய்ப் பார்ப்பது நல்லது. அப்பொழுதுதான் வாழ்க்கை எப்படி அமைந்திருக்கிறது என்பது புலப்படும். மக்கள் பல இடங்களில் ஒதுக்கித் தள்ளப்படுகிறார்கள். எல்லாப் பொருள்கள் இருந்தும் மக்களில் பலர் பட்டினி கிடக்கிறார்கள். ஏன் அப்படி அவர்கள் பட்டினி கிடக்க வேண்டும்! எங்கும் அறிவு பெருகி வரும்போது கிராமத்து மக்கள் மட்டும் அறியாமையால் உழலுகிறார்கள். இப்போது உள்ள வாழ்க்கை முறையை மாற்ற மக்கள் பாடுபட்டு வருகின்றனர். ஆனால் கிராமத்து மக்கள் இன்னும் ஏமாற்றப் படுகின்றனர். அங்கு ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் இருக்கிறது. அதனால் பல தொல்லைகள் இருக்கிறது. உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற கொடுமை இருக்கிறது. அதனால் மக்கள் துன்பப் படுகின்றனர். அவர்கள் தங்களைப் பற்றியே சிந்திப்பதில்லை. அப்படி அவர்கள் சிந்திக்கும்படியான சூழ்நிலையும் கிராமத்தில் இல்லை. கிராமத்துக்குப் போய் உழைக்கும் நல்ல மனிதர்கள் வேண்டும். அவர்களுக்கு அவர்களைப் பற்றியும் நாட்டைப் பற்றியும் நல்ல முறையில் எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்கள் உழைப்பை வீணாக விரயமாக்குகிறார்கள். இதையெல்லாம் எடுத்துக் காட்டி அவர்களைத் திருத்த வேண்டும்." இவ்வாறு இனியன் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பான்.

"இந்தக் காரியத்தில் நாம் ஏன் ஈடுபடக் கூடாது! நம்முடைய செல்வத்தையும் செல்வாக்கையும் ஏன் கிராம முன்னேற்றத்துக்குச் செலவு செய்யக்கூடாது!" என்று எண்ணினாள். அப்படி எண்ணிக் கொண்டே கண் அயர்ந்தாள்.

** ** **

மறுநாள் காலையில் அவள் எழுந்திருந்ததும் பல்லைத் தேய்த்தாள். பலகாரத்தைச் சாப்பிட்டு விட்டு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவளாய் உட்கார்ந்து விட்டாள். அவளுக்கு இனியன் செய்த உபதேசங்கள் எல்லாம் மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்தன. அவள் மனத்திலே ஒரு பெரிய புரட்சி உருவாகிக் கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் மாணிக்கம் அங்கே வந்தான். "இப்பொழுதுதான் நினைத்தேன் உன்னைப் பார்க்க வரலாமா என்று. அதற்குள் நீயே வந்து விட்டாய்!" என்றாள் சுந்தரி. கீழே போய் அவனுக்குக் காப்பி கொண்டு வரும்படி சொல்லி விட்டு வந்தாள். இரண்டு பேரும் காப்பி சாப்பிட்டுக் கொண்டே பேசினார்கள்.

சுந்தரியின் பேச்சு அழுத்தமாக இருந்தது; குரலில் குதூகலம் இருந்தது. அவள் கண்களில் இளநகை நடனமாடிக் கொண்டிருந்தது. நெற்றியில் மகிழ்ச்சி மிகுதியால் சுருக்கங்கள் மறைந்து காணப் பட்டன.

"நேற்று என் வீட்டுக்கு எங்கள் கிராமத்தில் இருந்து ஒருவர் வந்திருந்தார். அவரைப் பார்த்தவுடன் எனக்கு இனியன் கிராமத்தைப் பற்றிச் சொன்ன சோகமான காட்சிகள் எல்லாம் நினைவுக்கு வந்து விட்டன. உடனே கிராமத்துக்குப் போய்க் கிராம மக்களுக்கு வேலை செய்ய வேண்டும் போல் தோன்றுகிறது. கிராமத்துக் குடியானவர் சொன்னதிலிருந்து கிராமத்தில் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. மறு கணம் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. பயமாக இருக்கிறது. உனக்கு இனியனைப் பற்றி நன்றாகத் தெரியும். அவர் சேவைகளைப் பற்றிப் பேசிப் பெருமைப் படும்போது எவ்வளவோ திருப்தியாகத்தான் இருக்கிறது."

"ஆமாம். இனியனையும் அவன் உபதேசங்களையும் அவன் செய்து வரும் சேவைகளையும் நினைத்து விட்டால் திருப்தியாகத்தான் இருக்கிறது" என்றான் மாணிக்கம்.

"ஒரு சமயம் வரும். அப்பொழுது நீ ஓர் உண்மையைத் தெரிந்து கொள்வாய். ஒருவன் உண்மையாக மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று நினைத்து விட்டாலே அவனுக்கு ஒரு புதுச் சக்தி ஏற்பட்டு விடுகிறது. அப்படிப் பாடுபடுவதில் மக்கள் நன்மை யடைகிறார்கள் என்ற எண்ணம் உண்டானால் அவன் மனத்தில் இன்பம் பிறக்கும். அத்தகைய இன்பம் இருக்கத்தான் செய்கிறது. அதில்தான் எல்லாமே அடங்கி இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே அவள் எழுந்து நடந்தாள்.

பள பள வென்று மின்னிய அவள் கருங் கூந்தல் அலை அலையாக அவள் முதுகுப் புறத்தில் அலைந்து புரண்டு விழுந்தது. அவன் சிரித்துக் கொண்டே மெதுவாக நடந்தான்.

மாணிக்கத்தின் கண்கள் அவளையே பின் பற்றிச் சென்றன. அவன் சிந்தனைகள் தேங்கி நின்று விட்டன. அடர்த்தியான கூந்தலுக்கு நடுவே பிரகாசித்துக் கொண்டிருந்த சுந்தரியின் முகத்தை மாறி மாறிப் பார்த்துக் கொண்டே இருந்தான். சூரியனின் செவ்வொளிக் கிரணங்கள் ஜன்னல் வழியாக அறையினுள் வீசிக் கொண்டிருந்தன. அறை முழுதும் ஏதோ ஒரு புதிய சக்தி நிறைந்திருந்தது. அவனை யறியாமலே அவன் காதல் உள்ளம் கிளர்ந்து எழுச்சி பெற்று விட்டது.

ஏதோ காரணத்தால் அவனுக்குப் பழைய நினைவுகள் வந்துவிட்டன. சின்னஞ் சிறு பையனாக இருந்தபோது மாணிக்கம் கிராமத்தில்தான் இருந்தான். அப்போது கிராமத்தில் எத்தனை யெத்தனையோ கொடுமைகளைப் பார்த்திருக்கிறான்.

# கால்கேட்
# குளோரோபில் டூத்பவுடர்




## குளோரோபிலின் பூரண நன்மைகளை நீங்கள் உபயோகிக் கையில் தருகிறது!

## வீரிய குளோரோபில்தான் பலன் தரும்!

வீரிய குளோரோபிலின் நன்மைகளை எல்லாம் புதிய கால் கேட் குளோரோபில் டூத் பவுடர் தருகிறது வீரிய குளோ ரோபில் தான் வாய் நாற்றம், கிரிமிகளை நீக்கி ஈறுகளைப் பலப்படுத்துகிறது. கால்கேட் முறையில் குழந்தைகளுக்கு குளோரோபில் கவனிப்பை அளியுங்கள்—அரிய சந்தர்ப்பம்.



### வாய் நாற்றத்தை அழிக்கிறது

ஒரு விசேஷ சூத்திரம் காரணமாக கால்கேட் குளோரோபில் டூத்பவுடர் துரிதமாக, திருத்த மாக வேலை செய்கிறது. உங்கள் வாய் அதிகநேரம் புதுமை, இனிமையுடன் இருக் கிறது. அதன் வாசனை ஜோரானது!

### கி ரு மி க ளை ஒ ழி க் கி ற து


சாப்பிட்டவுடன் கால்கேட் குளோரோபில் டூத் பவுடரை உபயோகிப்பதால் பற்களைச் சிதைக்கும் அமிலங்கள் ஒழிகின்றன.





### ஈ று க ளை ப ல ப் ப டு த் து கி ற து

ஈறுகளை குளோரோபில் பலப்படுத்துகிறது. தினசரி கால்கேட் குளோரோபில் டூத் பவு டரை உபயோகிப்பதால் குளோரோபிலின் பூரண நன்மைகளைப்பெற்று ஈறுகளைப் பாது காக்கலாம்.




CTPG11

அந்தக் காட்சிகள் எல்லாம் இப்போது அவனுக்கு நினைவு வர ஆரம்பித்தன.

ஒரு சமயம் அவன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் இருந்தவர் திருட்டுத்தனமாகக் குடித்துவிட்டு நேரம் கழித்து வந்தார். அவர் மனைவி அவரைப் பார்த்து 'ஏன் இத்தனை நாழி!' என்று கேட்டாள். அவ்வளவுதான்; அவர் அந்த அம்மாளைக் காலால் உதைத்து வெளியே தள்ளி விட்டார்.

அந்த அம்மாள் தம்முடைய சிறு குழந்தையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். ஒன்றும் அறியாத குழந்தை 'வீல்' என்று அழுதது.

குழந்தையைத் தட்டித் தூங்க வைத்துக் கொண்டே அவள் தெருக் கோடியில் உள்ள பிள்ளையார் கோவிலில் போய் உட்கார்ந்திருந்தாள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த பெரியவர்கள் அதைப் பற்றிச் சிந்திக்காமலே இருந்தார்கள்.

இன்னொரு சமயம் பக்கத்து வீட்டுக்கும் அதன் பக்கத்து வீட்டுக்கும் சண்டை ஏற்பட்டது. இதனால் ஒருவருக்கு ஒருவர் நன்றாக விளைந்து கிடந்த நெற் பயிர்களுக்குத் தீ வைத்துக் கொளுத்திக் கொண்டார்கள். அதனால் ஏற்பட்ட பலாபலன்களை நாசத்தை அவர்கள் ஆத்திரத்தால் அறியவில்லை.

கிராமத்தில் இருந்து ஒரு மைல் தூரம் சென்று நகரத்துக்குப் போகும் பெரிய சாலையை அடைய வேண்டும். அப்படிச் செல்லும் பாதை செப்பனிடப் படாமலே கிடந்தது. கிராமத்து மக்கள் கொஞ்சம் மனசு வைத்தால் அதை நல்ல சாலையாகவே ஒரு நாளில் போட்டு விடலாம். ஆனால் அதைச் செப்பனிடாமலே சேற்றிலும் வரப்பிலும் நடந்து கஷ்டப் பட்டுக் கொண்டே வாழ்ந்து வந்தார்கள்.

கிராமத்தில் இன்னமும் அதேமாதிரி நிலைதான். அதை மாற்ற வேண்டும். அதற்குப் படித்தவர்கள் சுயநலம் கருதாமல் கிராமத்துக்குச் சென்று சேவை செய்ய வேண்டும்.

சுந்தரி 'சட்'டென்று திரும்பிப் பார்த்து, "மாணிக்கம், கிராமத்தில் போய் ஒரு மாதம் தங்கிப் பாடுபடப் போகிறேன். உனக்கு இது பிடித்திருக்கிறதா!" என்று கேட்டாள்.

"ரொம்பப் பிடித்திருக்கிறது. நாளைக்கே புறப்பட்டு விடுவோம்!" என்று தலையை அசைத்துக் கொண்டே சொன்னான்.

மாணிக்கமும் சுந்தரியும் நல்ல முறையில் பேசிக் கொண்டிருந்தனர். அந்தரங்க மனப்பான்மையுடன் புத்திசாலித்தனமாகப் பேசிக் கொண்டிருந்தனர். கிராமத்தில் செய்ய வேண்டிய பொது நலச் சேவைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். தங்களால் முடிந்ததைக் கிராமத்தில் செய்வதற்கு வேண்டிய வழி வகைகளை உற்சாகமாக வகுத்துக் கொண்டிருந்தனர்.

சுந்தரி ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே தன்னுடைய பழைய காட்சிகளைப் பற்றி நினைத்தாள். அவளால் யாருக்கும் நன்மை யில்லாமல் இதுவரை இருந்து வந்தாள். ஏதோ படிப்பதும் சாப்பிடுவதுமாக இதுவரை காலம் தள்ளி விட்டாள். ஆனால் இப்பொழுதோ அவள் ஒரு நல்ல காரியத்தில் ஈடுபடுவதற்குத் தன்னைத் தயார் செய்து கொண்டாள். இந்த வாழ்வு அவளுக்குப் புதிது. இதனால் அவளுக்கு மகிழ்ச்சியே ஏற்பட்டது. மக்கள் எல்லாரும் சரி நிகர் சமானமாக வாழ்வதற்கு உண்மையாகப் பாடுபடுவதில் மகிழ்ச்சி ஏற்படாமலா இருக்கும்!

சுந்தரியின் கிராமத்துக்குச் சுந்தரியுடனே மாணிக்கமும் சென்றான். மாணிக்கமும் சுந்தரியும் கிராமத்து ஜனங்களிடம் பேசுவதிலும் அவர்களுடைய கதைகளைக் கேட்பதிலும் ஈடுபட்டனர். மானிட வாழ்க்கையின் பலதிறப்பட்ட சாயல்களை அவர்கள் பார்த்து அநுபவித்தனர். வயிற்றை நிரப்புவதற்கு மக்கள் பட்ட பாடுகளை அறிந்தார்கள். எங்கும் ஏழைகளைப் பணக்காரர்கள் கசக்கிப் பிழிந்து கொடுமை செய்வதை உணர்ந்தார்கள். பக்கத்தில் உள்ள பிரசித்தி பெற்ற கோயிலுக்குச் சென்றார்கள். கோயில்களில் தங்கமும் வெள்ளியும் குவிந்து கிடந்தன. ஆனால் கோயில் வாசல்களில் ஏழைப் பரதேசிகள் செப்புக் காசுக்காகக் கையேந்தி உட்கார்ந்திருந்தனர்.

கிராமத்தில் ஒரு பெண் பிள்ளையின் வாழ்க்கையைப் பற்றி விசாரித்தார்கள். அவள் ஏழைக் குடித்தனத்தைப் பற்றியும், துயரங்களைப் பற்றியும், அற்ப காரணங்களுக்காக அவள் கணவன் அடித்து வதைத்ததைப் பற்றியும் கேட்டு வருந்தினார்கள். அந்தப் பெண் பிள்ளையின் வாழ்க்கை சாதாரணமானது. எளிமையானது. ஆனால் லட்சக் கணக்கான மக்கள் அப்படித்தானே வாழ்ந்து வருகிறார்கள். பல லட்சம் மக்களுக்கு அவள் உதாரணமாக விளங்கினாள்.

இதையெல்லாம் கேட்ட மாணிக்கத்தின் மனம் நெகிழ்ந்து விட்டது. அவன் பெருமூச்சு விட்டுக் கொண்டே சொன்னான்:

"நான் வாழ்வைப் பற்றித் தெரிந்து கொண்டதாக எண்ணி யிருந்தேன். ஆனால் இந்த ஏழை மக்களின் வாழ்வைப் பற்றிக் கேட்கும்போது, அவர்கள் சோகம் நிறைந்த வாழ்வைப் பார்க்கும் போது பயங்கரமாகவே இருக்கிறது. பட்டணத்தைவிடக் கிராமத்தில் உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற வித்தியாசம் அதிகமாக இருக்கிறது. ஏழை பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வு மிக நன்றாகத் தெரிகிறது. இதை யெல்லாம் பார்த்தால் கஷ்டமாகத்தான் இருக்கிறது" என்றான்.

சுந்தரியின் வீட்டுக்கு வந்திருந்த கிராமத்துக் குடியானவர் சுந்தரியையும் மாணிக்கத்தையும் அழைத்துக் கொண்டு தூர்ந்து போன குளத்தைக் காண்பிக்க அழைத்துச் சென்றார். அவர்கள் ஒரு இரட்டை மாட்டு வண்டியில் அமர்ந்து சென்று கொண்டிருந்தனர். சாலை குண்டும் குழியுமாக இருந்தது. வண்டி பள்ளத்தில் விழுந்தும் மேட்டில் ஏறியும் சென்று கொண்டிருந்தது.

குடியானவர் கிராமத்துக் குறைகளை அவர்களிடம் எடுத்துச் சொல்லிக் கொண்டு வந்தார். அதைக் கேட்கும்போது சுந்தரியும் மாணிக்கமும் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அவர்களைச் சோகம் ஒரு புறமும் திகைப்பு ஒரு புறம் சேர்ந்து வாட்டின. அதைப் பற்றிய சிந்தனைகள் அவர்கள் உள்ளத்தில் பின்னிக் கொண்டன.

சுற்றிலும் இயற்கைக் காட்சிகள் மாறுவது போல் தோன்றியது. மேகங்கள் ஒன்றையொன்று துரத்திக் கொண்டு வான மண்டலத்தில் வேகமாகச் சஞ்சரித்தன. சாலையின் இரு புறங்களும் மரங்களின் கிளைகள் வெட்டப்பட்டுச் சிதைந்து கிடந்தன. பூமி காய்ந்து கிடந்தது.

வண்டிச் சக்கரத்தின் 'கட கட' என்ற ஓசையும், குடியானவரின் ஏக்கம் நிறைந்த குரலும், காற்றின் சல சலப்பும் சேர்ந்து முடிவில்லாத சோக ஒலியாக இருந்தது. (தொடரும்)

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras 10.


நாள் முழுவதும்
காலை வேளையில்
புத்துணர்ச்சி
பிற்பகலில்
அளிக்க...
இரவில்
Himalaya Bouquet
Himalaya Bouquet
குளுமையான, நறுமணம் கொண்ட
ஹிமாலயா புக்கே பௌடர்களை உபயோகியுங்கள்
ஹிமாலயா புக்கே ஸ்னோ எல்லா சீதோஷ்ண நிலைகளிலும் சருமத்தைப் பாதுகாக்கிறது.
HBP. 10-50 TM

REGD. NO. M. 4392

*Registered as a newspaper in ceylon*